புதுமை

ஆசிரியர்
கோசல்ராம்

477

JL
477 / 3.58

25 கா

...MAI, ஆகஸ்ட் 1 1958

ஆகஸ்ட்
வெளியீடு!
அருணாசலம் பிக்சர்ஸ்
பெரிய கோயில்
டைரக்ஷன்..A.K.வேலன்
சங்கீதம்..K.V.மஹாதேவன்
BALU BROS
BEEBEES

வின்சன் பிராசஸ்

லைன் ஆப்டோன் & கலர்

பிளாக் செய்பவர்கள்

187, மவுண்ட் ரோடு மதராஸ் 2

30

ஆண்டுகளாக நாடெங்கும்

உழவர்கள் நம்பி வாங்குவது

PSG



பம்பிங் செட்

★ குறைந்த செலவு
★ சிறந்த உழைப்பு
★ நீடித்த சேவை
★ ஓசையில்லாத ஓட்டம்

விபரங்களுக்கு எழுதுங்கள்:



பி. எஸ். ஜி.

இண்டஸ்டிரீயல்ஸ் இன்ஸ்டிடியூட்

பீளமேடு போஸ்ட், கோயமுத்தூர், தென்னிந்தியா.

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 2 | ஆகஸ்டு 1958 | ஓசை 1

		பக்கம்
அரசியல் :		
எரிமலையோடு விளையாட்டு! (கார்ட்டூன்)		4
மிஸ்டர் ஐக்! வில்கியை நினைப்பீர்களாக!		5
தூத்துக்குடி போட்ட போடு!		8
தொடர் கதைகள் :		
காமனை வென்ற கண்	சுகி	19
வள்ளியின் உள்ளம்	கு.ப. சேது அம்மாள்	98
கதைகள் :		
புயல்	சுவாதி	47
எரி நட்சத்திரம்	இரு கூரான்	55
கானல் நீர்	எஸ்லார்வி	63
ராஜாபார்ட் ராமதுரை	ஜெகசிற்பியன்	69
உதயம்	ஆர். பி. மல்லாரி	75
பனித் துளி	சோமு	116
பேட்டி :		
சேரியை ஒழிப்போம்!		
சென்னையை சீராக்குவோம்!	ஆரிஸ்ஸெல்	11
இசைக்குயில் ரத்னம்		134
கவிதைகள் :		
மலர்	அருளாளன்	9
கன்னி	புனலன்	53
குமுதக் குமரி	ஷேரலி	61
மின்னல்	கோ. பொன்னுச்சாமி	73
வானவில்	ந. ஐயனிறை	115
கட்டுரைகள் ;		
கவனிப்பார்களா?	டி. எஸ். பாலையா	10
தமிழகத்தின் பங்கு!	சகுந்தலா பாரதி	78
இயற்கை வைத்தியம்	என்.எஸ்.சுப்பையர்	79
நாடகம் :		
நீதிபதியின் பீதி	பி.எக்ஸ்.ஆர்.	123
கலைப் பகுதி :		
தேடி வந்த செல்வம்	ரசிகன்	133
வளரும் படங்கள்		137
நாட்டியம்	ரஞ்சன் பி.ஏ., எம்.லிட்.	141
பாசமா, கடமையா?	ரசிகன்	142

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

OFFICE OF THE REGISTRAR OF B... MADRAS 4 AUG 1958

எரிமலையோடு விளையாட்டு!

197696

புதுமை

"மிஸ்டர் ஐக்! வில்கியை நினைப்பீர்களாக!"

மேகங்கள் கவிந்து வருகின்றன. இருள் சூழ்ந்து வருகின்றது. பேய்க் கூத்து போலக் காற்று சுழன்று அடிக்கிறது. எப்பொழுது ஊழி தொடங்குமோ? என்ற அச்சம் நம் மனதிலே படர்ந்து வருகிறது.

மேகங்கள் — வானத்திலே செல்பவை அல்ல; யுத்த மேகங்கள்.

இருள் — இயற்கையின் இருட்டு அல்ல; அழிவு இருள்.

காற்று—புயலாகச் சீறினாலும் தென்றலாகவும் இனிமைதரும் காற்று அல்ல; உயிர் குடிக்கும் வெறிக் காற்று.

'ஊழியோ!' என்று உலகம் கலங்குகிறது. 'இன்னும் ஒரு உலகப் போரா?' என்று தலைவர்கள் கவலை முகம் காட்டுகிறார்கள்.

மேற்காசியாவில் — மத்திய கிழக்கு என்று உலகம் பேசும் பகுதியில் — யுத்த மேகங்கள் சூழ்ந்து, அழிவு இருள் பரவி, வெறிக் காற்று வீசியபடி, ஊழி தொடங்கி யிருக்கிறது.

'மூன்றாவது போர்!'

நினைத்தாலும் நெஞ்சு துடிக்கிறது. கடந்த உலகப் போரின் துன்பப் புண்கள் இன்னும் ஆறாத உலகம், வேதனையாலே விம்முகிறது.

ஐ. சி. பி. எம். குண்டுகளும், ராக்கெட் ராட்சதர்களும், அணு, நீரக குண்டுகளும் என்னென்ன செய்யுமோ! எண்ணவே முடியவில்லை. மயங்குகிறோம்; திகைக்கிறோம்; மூச்சுத் திணறுகிறது.

ஏன்? ஏன்? அழிவு என்று தெரிந்தும் ஏன் இந்தப் பாதையிலே உலகம் செல்லவேண்டும்?

படுகுழியிலே கண்ணைத் திறந்தபடி விழுவது விவேகமா?

கல் சுவற்றிலே விழி திறந்தபடி முட்டுவது பகுத்தறிவா?

தெரிந்தும் தீயிலே குதிப்பது அறிவுடைமையா?

உணர்ந்தும் அழிவைத் தழுவுவது பைத்தியக்காரத்தனமன்றோ?

* * *

பகுத்தறிவுக்குப் புறம்பான அழிவைத் தழுவும் இச்செயலில் ஏன் உலகம் ஈடுபடுகிறது?

ஒரே வார்த்தையில் பதில் சொல்ல வேண்டுமானால் — 'ஆதிக்க வெறி'தான் விடை.

சூயெஸ் நிகழ்ச்சி, காலனியாதிக்க வெறியர்களின் மூக்கை

உடைத்தது; நாடியைத் தளர்த்தியது.

எதிரிடையாக சூயெஸ் நிகழ்ச்சி, அரபு இனத்தின் தேசிய எழுச்சியின் ஆரம்பத்தைக் குறித்தது. அந்த இனத்திற்கு ஒப்பில்லாத ஒரு தலைவனைக் கொடுத்தது.

இந்தியாவிற்கு ஒரு நேருவைப் போல,எகிப்திற்கு நாஸர் கிடைத்தார்.

நாஸர் தலைமையிலே சிரியா சேர்ந்தது; ஏமன் கூடியது; குவியட் வாழ்த்தியது.

தேசிய உணர்ச்சி வெள்ளத்திலே, குடிகள் ஆட்சிகள் மலர்ந்தன; முடிகள் கவிழ்ந்தன.

சவூதி அரேபியாவில் அரபு ஐக்கியக் கொள்கையில் பிடிப்புடைய இளவரசர் பதவிக்கு வந்தார்.

லெபனுனில் அரபு ஐக்கிய வாதிகள் சர்வாதிகாரி சாமூனுக்கு எதிராக சண்டையைக் கிளப்பினர்கள்.

ஈராக் ஆடியது; அலி சாப்ரியின் ஆட்சி முடிந்து, தேசிய எழுச்சி துவங்கியது.

காலனியாளர்களின் காலை முத்தமிட்டு பதவியிலே இருக்கும் முடியரசுகள் ஓலமிட்டன. 'இராணுவக் கூட்டுகள்' என்ற செயற்கை அணைகளைக் கட்டி அரபு ஐக்கிய வெள்ளத்தை எதிர்க்கக் கனவு கண்டார்கள்.

பிரிட்டன் ஆசிகூற, அமெரிக்கா உதவ, இராக்–ஜோர்டான் கூடியது; அந்நாட்டு மக்கள் கூடாவிட்டாலும், மணிமுடிகள் ஒன்ருக்கப்பட்டன.

தேசிய எழுச்சியின் அடிப்படையிலே பிறந்த புலியைப் பார்த்து, இராணுவ ஒப்பந்தத் திருமணத்திலே பிறந்த பூனைகள் சூடிட்டுக் கொண்டன!

மக்கள் ஏமாறவில்லை. புரட்சி பரவியது. தேசிய வெள்ளம் லெபனுனில் அணையை உடைத்தது.

எண்ணெய் வளமிக்க மேற்கு ஆசியாவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிகளை ஆரம்ப முதலே தவருகக் கணக்குப் போட்டு வந்ததுடன், வர்ணக் கண்ணுடிகள் மூலமும் பார்த்து வந்தது அமெரிக்கா.

உலகின் முக்கிய இப்பிராந்தியத்திலே, கம்யூனிஸ ஆதிக்கம் பரவி விட்டதாகக் கணக்குப் போட்டது.

தேசிய எழுச்சிக்கும், கம்யூனிஸத்துக்கும் பல ஒற்றுமைகள் இருந்தாலும், இரண்டும் வேறு வேறு என்பதைப் புரிந்துக் கொள்ளாமல் தப்புக் கணக்கு போட்டது.

முதலாளித்துவத்திற்கும் கம்யூனிஸத்திற்கும் இடையிலே, இரண்டின் தீமைகளையும் விலக்கிய சோஷலிஸத்தின், நேரு,டிட்டோ போன்றவர்கள் வளர்த்து வரும் சோஷலிஸத்தின், அடிப்படையிலே அமைந்த 'நாஸரிஸம்' கண்டு நடுங்க ஆரம்பித்தது.

'நாஸரிஸம்', 'நாஸிஸம்' ஆகுமோ?' என்று பதறியது. தேசிய எழுச்சிக்கும், சாம்ராஜ்ய ஆசைக்கும் வேறுபாடு தெரியாமல் நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது.

"எகிப்தின் தலைமை கம்யூனிஸச் சார்பு கொண்டது; சர்வாதிகாரச் சாயல் பெற்றது" இது அமெரிக்க சித்தாந்தம்.

"எங்கள் இனம் ஒன்று; அரபு உலகம் ஒன்று; காலனிகளைக் களைவோம்; கரங் கோர்ப்போம்; நடுநிலைமை தாங்குவோம்; முதலாளித்துவமும்

கம்யூனிஸமும் வேண்டாம்''— புது பொங்கி வரும் புதிய அரபு இரத்தத்தின் இலட்சிய முழக்கம்.

கொள்கைகள் வேறுபட்டன; பிளவு விரிந்தது; இருள் மூண்டு விட்டது.

லெபனானில் நடக்கும் உள்நாட்டுப் போரை அடக்க, அமெரிக்கா துருப்புகளை அனுப்பியுள்ளது.

'சமாதானம் நிலைக்க, அமெரிக்கர்கள் நலன்களைக் காக்க இந்த நடவடிக்கை' என்று மிஸ்டர் ஐக் விளக்கம் தரலாம்.

ஆனால் பச்சைக் குழந்தை கூட இந்தப் பொய்யை நம்பாது.

சாம்ராஜ்யத்தின் ஆசையால் ஆக்ரமித்தார் ஹிட்லர்; சமாதானத்தின் பேரால் நடக்கும் இந்த ஆக்ரமிப்பு அதைவிட மோசமானது.

ஆகவேதான், பிரதமர் நேரு விலிருந்து நியாயபுத்தி படைத்த, சமாதானம் விரும்பும் எல்லாத் தலைவர்களும் அமெரிக்க நடவடிக்கையைக் கண்டிக்கிறார்கள்.

உலகின் நல்ல காலம், இது வரை, ரஷ்யா அரசியல் பதிலடிகளைத் தவிர, ஆயுதக் கைகலப்பில் இறங்கவில்லை.

லெபனானிலே நிற்கும் அமெரிக்கத் துருப்புகளுக்கு எதிராக இராக்கிலே ரஷ்யப் படைகள் வந்தால்...?

நெருப்பும், பஞ்சும் சேரும்; பெருவிபத்து நேரிடும்.

மத்தியக்கிழக்கு எரியத் துவங்கும்; பக்கத்திலே பரவும்; பாரே யுத்தத்தில் ஆழ்ந்துவிடும்.

அப்படி எதுவும் நேரிடாமல் உலகில் சமாதானம் நிலவும் படிக் காக்கும் மகத்தான பொறுப்பு தலைவர்கள் தலையிலே இன்று இரும்பாகக் கனக்கிறது.

* * *

குறிப்பாக, சமாதானத்தைக் காக்கும் பெரும் பொறுப்பு, அமெரிக்கத் தலைவர் ஐஸன் ஹோவரைச் சார்ந்துள்ளது.

உணர்ச்சிவசப்பட்ட டல்லஸ் போன்றவர்களின் தூண்டுதல்களுக்குச் செவிசாய்த்தது, கண் மூடித்தனமான நடவடிக்கைகள் எடுப்பது என்ற பழக்கத்தை அவர் மாற்றிக் கொண்டால் ஒழிய உலகம் உய்ய வழியில்லை.

மிஸ்டர் ஐக், இப்பொழுது வாஷிங்டனையும், உட்ரோ வில்ஸனையும், வெண்டல் வில்கியையும் நினைவுகூற வேண்டும்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட வாஷிங்டனின் உணர்ச்சிகளையும், இன்று ஏகாதிபத்தியங்களை எதிர்க்கும் அரபு எழுச்சியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

சமத்துவம் காண உயிரையே கொடுத்த உத்தமன் லிங்கனின் நினைவோடு, பொருளாதாரத் திலே தாழ்ந்த நாடுகளை நோக்க வேண்டும்.

சமாதானம் நிலைக்கப்பட்ட உட்ரோ வில்ஸனின் உணர்ச்சியைப் பெறவேண்டும்.

கடைசியாக 2¼ கோடி அமெரிக்க ஓட்டுக்களைப் பெற்ற, உலகப் புகழ்பெற்ற, நாளுக்கு 50,000 காப்பிகள் விற்ற 'ஒரே உலகம்' என்ற இலக்கியத்தைப் படைத்த மேதை வில்கியை நினைவு கூறவேண்டும்.

இரண்டாவது உலகப் போர் நடந்த நேரத்தில் 49 நாட்களில், 13 நாடுகளுக்குச் சென்று, பின் அவர் கூறிய அவரது அநுபவ

அறிவுரைகளை மறக்கக்கூடாது.

“மத்தியக்கிழக்கு நாடுகளின் மக்கள், தங்கள் சொந்த பலத்தை இப்போது அறிந்து கொண்டு விட்டார்கள்... மேல் நாடுகள் லாபமடைவதற்காக கீழ்நாட்டு அடிமைகளாக இருக்க, இனி அவர்கள் இசைய மாட்டார்கள்... பெரிய தொரு குன்றைச் சூழ மண் குடிசைகள் கட்டிக்கொண்டு வாழ்வதிலே இருந்த வசீகரமெல்லாம் போய் விட்டது!”

கம்யூனிஸத்தில் இருந்து காத்துக்கொள்ள ஆசியர்களுக்கு வழி தெரியும். அதற்கு அமெரிக்கர்கள் இராணுவம் தேவை இல்லை.

ஆகவே, “மிஸ்டர் ஐக்! வில்கியை நினையுங்கள்! ‘டங்கர்க்’ செய்து உலகைக் காப்பாற்றுங்கள்!” என்று வேண்டுகிறோம்.

தூத்துக்குடி போட்ட போடு!

தூத்துக்குடி ஓட்டுப் போட்டு விட்டது; ‘போடு, போடு’ என்று போட்டுத் தீர்த்து விட்டது; திருவிழாப் போலத் திரளாகக் கூடி தேசியத்திற்கு மாலையைப் போட்டு, தீய சக்திகள் முதுகில் ‘போடு போடு’ என்று போட்டு விட்டார்கள் தூத்துக்குடித் தொகுதி வாக்காளப் பெருமக்கள். தூத்துக்குடி தொகுதியும், திருநெல்வேலி மாவட்டமும் காங்கிரஸ் கோட்டைகள்தான் என்பது தெளிவாகி ‘எங்கள் கோட்டைகள்’ என்று சொன்னவர்களின் வாதங்கள் ‘வெறும் ஓட்டைகள்’ என்று உணர்த்தி விட்டார்கள்!

‘தமிழகம் வேறு; இது கேரளம் இல்லை; பீர்மேடு, தேவிகுளத்தைப் பிடித்து விட்ட நோய் இங்கு பரவவில்லை’ என்று தீர்ப்பாகி விட்டது.

‘ஏழைத் தொண்டர்’ தொழிலாளர் துணைவன் திரு. சாமுவேல் ‘எங்கள் பிரதிநிதி’ என்று தெள்ளத் தெளிவாக முழக்கி விட்டார்கள், தூத்துக்குடி வாக்காளர்கள்.

சென்ற முறை 17,438 வாக்குகள் பெற்ற காங்கிரஸ், இந்தத் தடவை 21,553 ஓட்டுக்களைப் பெற்று விட்டது. ‘காங்கிரஸ் சரிகிறது’ என்ற ஜம்பமடித்தவர்கள் எங்கே?

கம்யூனிஸ்டுகள் சென்ற முறை பெற்ற 14,661 ஓட்டுக்களை விட இந்தத் தேர்தலில் 17,546 பெற்றதையே பெரிதாகச் சொல்கிறார்களாம்! “கலப்பில்லாத கம்யூனிஸக் கொள்கை பெற்ற ஆதரவு ஓட்டுக்கள் அல்ல இவை; கரைபடிந்த கம்யூனலிஸத்தின் வாக்குகள் இவற்றிலே பெரும் பகுதி” என்பது தூத்துக்குடி சென்று வந்தவர்கள் அறிந்த பகிரங்க ரகசியம்!

பாவம்... தி. மு. க! அண்ணா, தம்பி, மாமன், மச்சான், மாமி எல்லோரும் போய்க் குடியிருந்தும், நடித்தும் (!) 15, 298 என்ற சென்ற தேர்தல் எண்ணிக்கை கூடத் தேய்ந்து 14,387ல் முடிந்து விட்டது!

1949-ல் சுய மரியாதை மகாநாட்டில், “ஓட்டு மக்களுக்கு வேண்டாம். என்று முழங்கிய ஐயா, அண்ணா, தம்பி, கூட்டம் இன்று அந்த உரிமையைக் கேட்க வரலாமா?’ என்று சிலர் கேட்டார்களாம்; கேட்டதும், இவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டார்களாம்!

தூத்துக்குடி போட்ட போட்டிலாவது இவர்கள் சித்தங்கள் தெளிந்து, ‘பிரிவினைப் பித்தங்கள்’ மாறுமா?

காங்கிரஸ் கட்சி, மாவட்டத் தலைமை, மாகாணத் தலைமை, காமராஜர் ஆட்சி, நேருவின் அரசியல் இவைகளை ஒப்புக் கொண்டு ஆதரவு காட்டிய தூத்துக்குடி மக்களுக்கு நமது உளமார்ந்த நன்றி!

மலர்

அருளாளன்

சின்னஞ் சிறுமலரே!
சிந்தைக் களிப்பாலே,
உன்றன் பெருமைதனை!
உரைக்கக் கேட்டிடுவாய்!

தென்றல் கரத்தாலே
தேமணத்தைத் தெளித்தாய்;
வந்தவர்க்கு வழங்காது,
வாரியுண்ண வழிவிடுத்தாய்!

அழகில்லார் அழகுபெற
அணியாக அர்ப்பணித்தாய்;
முன்னோரின் முதுமொழியை
முன்னின்று மெய்ப்பித்தாய்!

நின்றன் இயல்புதனை
நீளுலகு பெற்றுவிட்டால்,
பஞ்சம் பறந்தோடும்;
பல்கலைகள் பல்கிவிடும்!

வத்தாத இன்பமதை
வையத்து மக்களெல்லாம்,
நித்தம் பெற்றிங்கு
நீடூழி வாழ்ந்திடுவார்!

கவனிப்பார்களா?

கலைஞர் டி. எஸ். பாலையா

ஒரு நாட்டின் மேன்மைக்கு உயிரானவர்கள் கலைஞர்கள். நுண்கலைகளில் தேர்ச்சி பெற்றிருப்பவர்கள் யாவரும் கலைஞர்களே, அவர்களில் தலை சிறந்து விள்ங்குபவர்கள் நடிகர்கள் என்று கூறின் அது மிகையாகாது.

இவ்விருபதாம் நூற்றுண்டில் நாடக மேடையும், வெண்திரையும் மக்களின் மனதை மிகவும் கவர்ந்திருக்கின்றன. மெய்வருந்தி உழைப்பவர் யாவருக்கும், அவைகள் சிறந்த பொழுதுபோக்காகக் கருதப் படுகின்றன. தன்னலங் கருதாது பிறரை மகிழ்விக்கக் கலைஞர்கள் படும் பாடுகள்தான் எத்தனை! ஒரு நாடகத்தையோ, அல்லது ஒரு சலனப்படத்தையோ, உருவாக்குவதில் கலைஞர்கள் மேற்கொள்ளும் சிரமம் அளவு கடந்தது. 'நாடகத்தையோ, சலனப்படத்தையோ பார்க்க வருபவர்கள் மகிழ வேண்டும்; அதனுல் பயனடைய வேண்டும்,' என்ற சிறந்த நோக்கம் தான் புயல் வீசும் வாழ்க்கையிலும் கலைஞன் சோர்வடையாமல் கருமமே கண்ணுகி, தன் கடமைப் பாதையில் தவராமல் செல்ல உதவுகிறது. கலைஞர்களில் சிலரிடம் ஏதாவது குறைபாடுகள் இருப்பது சகஜமே. அதைப் பெரிதாகக் கருதி விடுவது தவருகும். கஷ்டங்கள் நிறைந்த கலைஞர்கள் வாழ்க்கையில் சில சில குறையாக இருப்பது பெரும்பாலும் தவிர்க்க முடியாத சூழ் நிலைகளில் ஏற்படுவது தான்.

உலகில் பெரும்பான்மை நாடுகளில் இன்று கலைஞர்கள் பெரிதும் மதிக்கப் பட்டு வருகிருர்கள். நம் நாட்டிலோ வெனில், இக்கலைஞர்களின் நிலைமை முட் புதருக்குள் பூத்து நிற்கும் மலரைப் போன்றிருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஆபத்து. நாடக மேடையில் தோன்றும் கலைஞனைக் கை தட்டி ஆர்ப்பாட்டம் செய்து உற்சாகப் படுத்தும் ரசிகர்கள் அவர்களை மற்ற நேரங்களில் வீதிகளில் பார்க்கும் போது விரட்டியடிப்பது ஏனோ? வீண் வார்த்தைகள் பேசுவது விளையாட்டோ? கலைஞர்களைக் கண்ணியப்படுத்தும் அதே ரசிகர்கள், அவர்களைக் கசக்கி நுகர விரும்புவதேன்? இதனுல் கலைஞர்களின் தனிப்பட்ட வாழ்க்கை நரகமாக மாறுகின்றது.

இது ஒரு புறமிருக்க, நாடாளுபவர்கள் கலைஞர் பால் காட்டும் அசிரத்தை மிகவும் வருந்தற்பாலது. அவர்களுடன் தோளோடு தோள் நின்று பணி புரிய விரும்பும் கலைஞர்களைப் புறக்கணிக்கும் விந்தை தான் என்ன?

புயல், வெள்ளம் முதலிய நிவாரண வேலைகளில் மக்களின் துன்பத்தைத் துடைக்கக் கலைஞர்கள் ஒரு போதும் பின் வாங்கியதில்லை.

ஒரு பொது மேடையில் ஒரு கலைஞரும் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒருவரும் சந்தித்துப் பிரியும் போது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் காவல்அளித்து விட்டு மற்றவர்களை மக்கள் பார்த்துக் கொள்ளட்டும், நசுக் குண்டு சாகட்டும் என்ற மனப்பான்மையில் போய் விடுகிருர்கள். இதை ஒரு நடிகன் நினைக்கும் போது அவன் மனம் என்ன பாடுபடும்? இதை அரசாங்கத்தார் முக்கியமாகக் கருத வேண்டும். கலைஞர்கள் நாட்டின்—நாட்டு மக்களின் கண் போன்றவர்கள். கண்கள் போய் விட்டால் காரிருள் சூழ்ந்துவிடும். அவ்விருளை நீக்க யாராலும் முடியாது. ரசிகப் பெருமக்களே! நாடாளும் நல்லறிஞர்களே! இதைக் கவனிப்பீர்களா?

சேரியை ஒழிப்போம்!
சென்னையை சீராக்குவோம்!

பிரமுகர் :— ஆர். வெங்கட்ராமன்,
மாநில அமைச்சர்.

நிருபர் ;— ஆரெஸ்ஸஸ்.

[பேட்டிகளில் இரண்டு வகை. நிருபர் கேட்டதையும், பிரமுகர் கூறியதையும் அப்படியே போட்டாலும் ரசிப்பது சிறந்தவை. பிரமுகர் கூருததையும் நிருபர் அழகாக 'அளந்து' விடுவது இரண்டாவது வகை, 'சுமாரான' பேட்டிகள். இந்தச் சிறு பேட்டி முதல் வகையைச் சார்ந்தது.]

காத்துக் கொண்டிருந்தோம்; நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. ஆண்டு மலர் 'கட்டுரை வேட்டை' யாடிய நேரம்; அமைச்சர் ஆர். வி. யோ எளிதில் அழைப்பதாக இல்லை.

பத்து,பதினைந்து, முப்பது நிமிடங்கள் முடிந்துவிட்டன. திடீரென்று 'சலசலப்பு' எற்பட்டது; 'பைல்கள் முன்னே, ஆபீஸர் பின்னே' என்ற புதுமொழிப்படி சென்னை கார்ப்பரேஷன் பைல்கள் முன்னும், பின்னுல் ஆணையாளரும் வெளிவந்தார்கள்; காரப்பரேஷன் பைல்களாயிற்றே, அன்று சற்று மூக்கைக் கைக்குட்டையால் மூடிக் கொண்டோம்!

அடுத்து எங்களை அழைத்தார் அன்பிற்குரிய ஆர். வி. பைல் மலைகள்; மையத்தில் அவரது அன்பு முகம். சிரித்த முகம், மலர்ந்த உள்ளம் கொண்டு வரவேற்ருர்.

"ஆசிச் செய்தியா! நானு...நான் அவ்வளவு பெரியவனில்லையே"— இப்படி ஆசி கேட்டதற்குத் தடை வந்துவிட்டது!

"மன்னிக்கவும்; மிகவும் காக்க வைத்துவிட்டேன்! சேரிப் பிரச்னை; ஒழிக்கத்திட்டங்கள் போட்டோம்!" என்ருர்.

அவரே தொடர்ந்து பேசினுர்: "வேலை அதிகம்; வெளிநாடு சென்றுவந்ததால் மேலும்அதிகமாகி விட்டது; இரவு 12 மணி வரை செய்தும் குறையவில்லை."

'கட்டுரை கேட்டு விடுவோமோ?' என்று அவராகவே 'வேலி' அமைத்துக் கொண்டார்!

"தங்கள் வெளிநாட்டு அனுபவங்களை எழுதினுல்...?" என்று இழுத்தேன்.

"எழுதலாம்...எவ்வளவோ ரசமான விஷயங்கள் உள்ளன. ஆனுல் நேரம் இல்லையே?"

"தாங்கள் அலுவலகப் பணியைத் தான் நாட்டுத் தொண்டாகக் கருதினுல், அது தவறல்லவா? தங்கள் அனுபவங்களைச் சொல்லாது புறக்கணிப்பது தேசிய நஷ்டமாகுமே?"

ஏறிட்டுப் பார்த்தார் அமைச்சர், 'என்ன! பெரும் போடு போடுகிருனே?' என்று.

"உண்மைதான். பாருங்கள். இந்தச் சேரி ஒழிப்புப் பிரச்னையில் கூட எனக்கு இத்தாலியில் ஏற்பட்ட அனுபவங்கள்...!"

"சொல்லுங்கள்......சொல்லுங்கள்!"

"ஓரளவிற்கு ஜனங்களைக் கட்டாயப்படுத்தினால்தான் திட்டம் எதுவும் வெற்றி பெறும் என்று கருதும்படி செய்கின்றன. கட்டாயம் என்றால் அவர்கள் நன்மைக்காக. இத்தாலியில் ரோம் நகரின் ஸென்ட் பீட்டர்ஸ் பர்க் என்று பிரசித்த முற்ற பகுதியில் இருந்த சேரிகளையும், சதுப்பு நிலங்களையும் முஸ்ஸோலினி வேகமாக அழித்தானும். தடைகளைக் கருதாது, புல்டோஸர்களை வைத்து நிலங்களைச் சமன் செய்து, பிறகு வீடுகளைக்கட்டி, சேரிவாழ்ந்த ஏழைகளை எல்லாம் குடியேற்றினனும். இன்று பழைய சேரிகளுக்கு பதில் 14 அடுக்கு மாளிகைகளை அங்கே காண்கிறோம்."

"நமது சென்னையிலும் அதுபோல என்று 14 அடுக்குகள் வருமோ?"

"கவலைப் படாதிர்கள். வட சென்னையில் 500 வீடுகள்; தென் சென்னையில் 500 வீடுகள்; 40 லட்சம் ரூபாய் திட்டங்கள்; இரண்டையும் கட்டி முடித்து முதலில் மிக மோசமான சேரிகளில் வசிப்பவர்களை அங்கு குடியேறச் செய்யப் போகிறோம். பிறகு அந்தப் பழைய சேரிகளை ஒழித்து விடலாம்!"

"அற்புதமான திட்டம்...தயவு செய்து தாங்கள்கூறிய இவற்றையே பிரசுரிக்க அனுமதி கொடுத்தால்..!"

"தாராளமாகச் செய்யுங்கள்... என்னைக் கட்டுரை கேட்காமல் விட்டால் மட்டும் போதும்!"

'மிக்க நன்றி' என்று கூறி வெளியேறினேன்.

புருஷன் :— வா! நம்ப ரெண்டுபேரும் இந்த கார்லே ஜாலியா போயிட்டு வரலாம்!

மனைவி :— ஊஹும். நான் வரலை...எனக்கு வெட்கமா இருக்கு!

புருஷன் :— என்னோடு வரதுக்கு என்ன வெட்கம்!

மனைவி :— உங்களோடு வரதுக்குச் சொல்லலை ... **இந்தக் கார்லே வரதுக்கு வெட்கமா இருக்குன்னு சொல்றேன்!**

வாழ்க, வாழ்கவே!

‘புதுமை’ மாத இதழ் தனது ஓராண்டு காலத்தை வெற்றிகரமாகப் பணியாற்றி முடித்திருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதையொட்டி ஆகஸ்ட் திங்களில் மலர் வெளியிட்டிருப்பது மிகவும் பொருத்தமே.

மலர் நல்ல முறையில் வெளிவர எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

—(முதலமைச்சர்) **காமராஜ்.**

★

புதுமைப் பத்திரிகை தன் முதல் ஆண்டை வெற்றிகரமாக முடித்துவிட்டது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டுக்கும், மக்களுக்கும் தாங்கள் செய்துவரும் சேவையைப் பாராட்ட விரும்புகிறேன். இப்பணியைத் தொடர்ந்து புரிய, தங்களுக்கும், தங்கள் பத்திரிகைக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—(சபாநாயகர்) **டாக்டர் யூ. கிருஷ்ணராவ்.**

★

ஸ்ரீ கோசல்ராம் இயற்றும் பத்திரிகை ‘புதுமை’யே. புதுமையான தொண்டே அது புரிந்து வருகிறது. தமிழ் மக்களுக்குள்ள பத்திரிகை ஆர்வம் நாம் பெருமைப்படக் கூடியதே. ஆனால் இந்த பத்திரிகை ருசியை, ஒரு சிலர் பயன்படுத்திக் கொண்டு பத்திரிகை என்ற பெயரில் மக்களிடையே குழப்பத்தை உண்டு பண்ணி தீய வழியில் இழுக்கப் பார்க்கின்றனர். இந்நிலையில், நிலைமையை ஆணித்தரமாக எடுத்துக்கூறி மக்களின் மனதில் பதிய வைக்கும் ஆற்றல் கொண்ட ஸ்ரீ கோசல்ராம் தம் ஓய்வு அற்ற அரசியல் வேலைக்கிடையில் ஒரு பத்திரிகை நடத்துவதையும் தம் முக்கிய வேலையாகக் கருதி முன்வந்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். சிறந்த வகையில் தொண்டாற்றி வரும் ‘புதுமை’யின் சேவைக்கு ஓராண்டு நிறைந்திருக்கிறது. புதுமைக்கு என் வாழ்த்துக்கள்.

(உதவி முதலமைச்சர்) **எம். பக்தவச்சலம்**

'புதுமை' ஒரு ஆண்டு பூர்த்தியாகி இரண்டாவது ஆண்டு தொடங்குவது அறிந்து மகிழ்வடைகிறேன்.

புதுமைகள் பல பூத்து ஆண்டு மலர் நன்கு விளங்கும் என நம்புகிறேன். புதிய ஆண்டில் 'புதுமை' மேன் மேலும் வளருமாக!

(நிதியமைச்சர்) **சி. சுப்பிரமணியம்.**

★

தாங்கள் வெளியிடும் இம்மலர் சிறப்பாக அமைந்து வாசகர்கட்கு நற்பயன் அளிக்க எனது இதயம் கனிந்த நல்லாசிகள்.

(மின்சாரத்துறை அமைச்சர்) **வெ. ராமையா.**

★

'புதுமை' நீடூழி மக்களுக்குச் சேவை செய்ய ஆண்டவன் அருள் புரிய வேண்டி என் மனமார வாழ்த்துகிறேன்.

—*(மத்திய உதவி ரெயில்வே அமைச்சர்)* **எஸ். வி. ராமசாமி.**

★

தமிழகத்தின் புதுமைக் கவிஞர் பிறந்த நாடு, நெல்லை நன்னாடு. அந்நாட்டிலே தோன்றிய அன்பர் திரு. கோசல்ராம் அவர்கள் 'புதுமை' என்னும் ஒரு மாதப் பத்திரிகையை நடத்தி வருதல் மிகப் பொருத்தமுடையதன்றோ? இப்பொறுப்பை மேற்கொண்ட பெரியார், பல்லாண்டுகளாக பாரத நாட்டிற்குப் பொதுவாகவும், தமிழ் நாட்டிற்குச் சிறப்பாகவும் பல துறைகளில் பணிசெய்த பண்பாளர். தமிழ் மொழியின் தொன்மையையும், செம்மையையும் உணர்ந்து பல்லாற்றானும் அம்மொழிக்குத் தொண்டு செய்யும் நல்லார். பல வகையான புதுமைகளை, இந்நாட்டிற்குத் திங்கள் தோறும் வழங்கி வரும் 'புதுமை' பத்திரிகை நல்ல வண்ணம் வளர்ந்து நலம் பல நல்குமாறு நெல்லையப்பர் இன்னருள் புரிக!

—*('சொல்லின் செல்வர்')* **டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை.**

'புதுமை' ஓராண்டு நிறைவு பெற்று இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைத்திருப்பதை அறிந்து மகிழ்வடைகிறேன். அது பின்னும் உரமும், பொலிவும் பெற்றுத் தமிழ் மக்களுடைய அன்பை ஈட்டிச் சிறக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

—('கலைமகள்') **கி. வா, ஜகந்நாதன்.**

★

பத்திரிகைக் காகிதத்தின் விலை விஷம்போல ஏறிவரும் இந்நாளில் பத்திரிகை நடத்துவது எவ்வளவு கடினம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும் ஆற்றல் மிக்க திரு. கே. டி. கோசல்ராம், எம். எல். ஸி, தலைமையில் 'புதுமை' நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக ஓங்கி வளரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஜனநாயகத்தின் காவலாளர்களே பத்திரிகைகளாகையால், எவ்வளவு பத்திரிகைகள் தோன்றி ஆண்டுவிழா, வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா நடத்தினாலும் எனக்குப் பரம திருப்திதான்.

—(தென் இந்திய ஸ்டுடியோக்கள் சங்கத் தலைவர்- விஜயா-வாஹினி ஸ்டுடியோக்கள் அதிபர்) **பி. நாகிரெட்டி**

★

தாங்கள் நடத்தி வரும் 'புதுமை' எனும் மாதப் பத்திரிகை செம்மையுடனும், செழுமையுடனும் சேவை செய்துவரும் சீரிய முயற்சியைப் பெரிதும் போற்றுகின்றேன். தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல தொண்டு செய்ய தங்களுடைய பத்திரிகை பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன்.

—(சென்னை நகராண்மை ஆணையாளர்)

து. பாலசுந்தரம், ஐ. ஏ. எஸ்.

★

'புதுமை' என்னும் திங்களிதழ் தமிழகத்தில் உலவி ஓராண்டு சிறந்த தொண்டாற்றி இருப்பதைப் பற்றி மகிழ்கிறேன்.

வருகின்ற ஆண்டுகளில் மேன்மேலும் சிறந்த தொண்டுகள் ஆற்றிக் கலையினையும், மக்கள் உணர்ச்சிகளையும் புதிய முறையில் 'புதுமை' வளர்க்கும் என்னும் நம்பிக்கை உடையேன்.

(தமிழறிஞர்) **டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். எல். ஸி**

★

'புதுமை'யின் முதலாண்டு விழா கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—(கலைஞர்) **ஔவை டி. கே. ஷண்முகம்.**

'புதுமை' புது நீராடிப் புதியதொரு பொலிவு பெற்று வாசகருள்ளத்தில் 'அமுதே! மரகத மயிலே! மகிழ்வுடன் ஆடாய் நல் ஊசல்' என்றவாறு ஊஞ்சலாடித் தமிழரை மகிழ்விக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

(தமிழறிஞர்) பி. ஸ்ரீ.

★

அரசியல், இலக்கியம் முதலிய பல துறைகளில் பணிபுரியும் 'புதுமை' நாடகக் கலையிலும் தன் பணியைத் தொடர்ந்து செய்து மென்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

(கலைஞர்) எஸ். வி. சகஸ்ரநாமம்.

★

பத்திரிகை உலகில் 'புதுமை' நன்பெயருக்கேற்பப் புதுமையுடன் இலங்கிப் புகழ்பெற்று வந்ததே போல் இன்னும் பல்லாண்டு காலம் தமிழ் வாசகர்களுக்குப் புதுமை விருந்து அளித்துவர அருள்பாலிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

—(எழுத்தாளர்) 'மாயாவி'

★

என் வணக்கம் பல. உங்கள் 'புதுமை' பத்திரிகை, இம்மேதினியில் யாதொரு குறைவுமின்றி மிகவும் சௌகரியமாக வளர்ந்து வந்து வரும் ஆகஸ்டு முதல் ஆண்டுவிழா கொண்டாடுவதைக் குறித்து மிகவும் ஆனந்தம். மேலும் கடவுள் ஆசீர்வாதமும், பூரண பலமும் அளித்து நூற்றாண்டு விழா கொண்டாடவேண்டுமாய் மனப்பூர்வமாகத் துதிக்கிறேன்.

'வாழ்க நமது கலை, நீடூழி வாழ்க உமது புதுமை!'

—(கலைஞர்) வி. நாகையா.

★

தமிழகம் உயர, தனித் தமிழ் மலர, புதுமைக் கலைகள் ஓங்க என்னாளும் தொண்டு செய்வீர்களாக!

—(இசைக்குயில்) பி. லீலா.

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

SRI RANGA VILAS

GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P.O. COIMBATORE

—❋—

SPINDLES	: :	36,368
LOOMS	: :	88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

—❋—

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு (97% Nacl)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்குச் சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதி
தெரிந்து கொள்ளவும்:

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone : 1 & 333 Tel. Address. MACSALT

Ganga Paper Stores (Private) Ltd.,

20, BAKER STREET,
MADRAS-1.

Post Box No. 1371. Tel : CHALLENGE

★

DEALERS IN

PAPER & BOARDS

★

Stockists for:

THE MYSORE PAPER MILLS LTD.,
PUNALUR MILLS LTD.

தொடர் நாவல்

காமனை வென்ற கண்

'சுகி'

அத்தியாயம் 18

பலமும் பலவீனமும்

'பெண்ணை நம்பாதே' என்று விரக்தி பிடித்த ஆண்கள் சொல்லியிருப்பதை நாம் அறிவோம்; 'ஆணை நம்பாதே' என்பதாக யாரும் சொல்லவில்லை. 'பெண்ணை நம்பாதே, எனச் சொன்னவர்கள் அநேகமாக ஆண்களாகவே இருக்கலாமோ? பாண்டித்துரை என்னோடு உயிருக்கு உயிரான நண்பர்; அவர் இப்போது எப்படி நடந்து கொண்டார் பாருங்கள். தன்னுடைய அருமைத் தங்கையாம்! லட்சுமி நலமே பெரியதாம்! அந்த மலைச் சாரல் ஊருக்குள் வரும்போது அவள் வாழ்வைக் கெடுத்து, முத்தையனை மீட்பதே லட்சியம். இப்போது, முத்தையன் வாழ்வை விட அவள் வாழ்க்கையே பிரதானம். என்ன அதிசயம்! ஆதியில் போர் முனைகளில் அரசர்கள் பல தந்திரங்களைக் கையாள்வார்கள் என்பது கேள்வி. பாண்டித்துரை செய்வது என்ன? ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் செய்வதை விடப் பதினாயிரம் பொய் நடிப்பின் வழியாக எதைப் பூர்த்தி செய்கிறாரோ?

எனக்கும் அவருக்கும் வாக்குவாதம் வருவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. லட்சுமிக்குட்டியின் உள் அந்தரங்கம் என்ன? இதுவரை அவர் பேசவில்லை. சாடையாக விசாரித்தும், பேச்சை மாற்றுகிறார். புலியை நம்பி வேட்டைக்குப் போன முத்தையன் என்னைவிட புத்திசாலி; நண்பனை நம்பித் துணை வந்த எனது முட்டாள்தனத்தைச் சொல்லுங்கள். பாண்டித்துரை சாமர்த்தியசாலியாக இருந்தாலும், நடந்ததைச் சொல்ல வேண்டிய கடமையை மறந்தார். ஆனால் எங்கள் மீது அதிகாரம் செய்ய மறுக்கவில்லை.

"நாம் எல்லோரும், ஆரியங்காவு ரெயில்வே ஸ்டேஷன் செல்ல வேண்டும். உடனடியாகப் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கலாம்." இது பாண்டித்துரையின் அறிக்கை.

"முத்தையன் நம்மோடு வருகிறானா இல்லையா?" என்று கேள்வி எழுந்தது.

"என்னுடைய தங்கை எதுவும் சொல்லவில்லை. அவள் சொல்லுகிறபடி சொன்னேன். மற்றவை தங்கள் இஷ்டம்."

வாரியார், "நான் எதற்காக வர வேண்டும்?" எனக் கேட்டார்.

"நீங்கள் வருவதாக லட்சுமிக் குட்டி சொல்லி விட்டாள். வரமுடியாது என்றால் அவளிடம் சொல்லி விடலாம்."

"நான் வரவேண்டுமா?" என்றார் நாராயண மேனன்.

"எதற்கும் ஒரு வார்த்தை லட்சுமியிடம் கேட்டு விடுங்கள். அநேகமாக தங்கள் மனைவியார் உடன் வருகிறார்கள்."

"என்னால் வரமுடியாது. மலையடித் தோப்புத்துரவுகள் என் காவலைக் கவனிப்பதிற்கு நான் இருக்க வேண்டும். இல்லாது போனால் லவங்கமும், மிளகுக் கொடிகளும் அறுபட்டுப்போகும். முந்திரியின் திருட்டைப் பற்றிச்சொல்ல வேண்டியதில்லை."

"என்னிடம் சொன்ன தகவலைச் சொன்னேன். அனுமதி பெற வேண்டிய இடம் தங்கள் மகளுடைய முன்னிலை."

'கேலியா கிண்டலா' என்று நாங்கள் திகைத்தோம். பாண்டித்துரையைவிட அவள் எந்தவிதத்திலும் எங்களுக்குப் பெரியவள் இல்லை. பாண்டித்துரை செய்யும் வரம்பு கடந்த பேச்சு எங்களுக்கு எரிச்சலைத் தந்தது.

"நான் வரமுடியாது."

கோபால வாரியார் துணிச்சலாகச் சொன்னார். அவரைப் போல நான் சொல்லும் துணிவு பெற முடியவில்லை.

பாண்டித்துரையோ எங்களை லட்சியம் செய்யாது குடிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். 'உங்களை நம்பிவரப் போக எங்களை நடுக்காட்டில் விட்டதுபோல செய்யலாமா?' இவ்வாறு எண்ணிக் கொண்டிருந்த வேளை லட்சுமிக்குட்டியின் அருகாக முத்தையன் வந்து கொண்டிருந்தான்.

"வாரியார் ஐயா, தாங்களும் ஒரு வாரமாக இங்கேயே தங்கி விட்டீர்கள். ஊருக்குப் போய் வைத்தியம் செய்ய வேண்டியவர்கள் இருந்தால், வைத்தியம் செய்து விட்டு இன்னும் இரண்டு, மூன்று தினங்களில் குற்றாலம் வர வேண்டும். உங்களை நம்பித்தான் நாங்கள் குற்றாலம் புறப்படுகிறோம்."

வாரியார், "எங்களை நம்பி யார் புறப்படுகிறது? பாண்டித்துரை ஜமீன்தார் ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறார். நீயானால் குற்றாலம் போக வேண்டும் என உத்தரவு இடுகிறாய்? உங்கள் வீட்டு வேலையாளாக எண்ணிக் கொண்டாயோ? நான் இதோ போகிறேன். ஏதோ எனக்கும் தொழில் இருக்கிறது. வேலை இருக்கிறது. போனால் போகிறது என்று பார்த்தேன். மிரட்டுகிறாயே" என்று கோபங் கொண்டார். உண்மை தானே! அவருக்கு எவ்வளவோ வேலைகள். அவரிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல், அழைக்காமல் 'வா' வென்றால் அவர் எப்படி வருவார்?

"பாண்டித்துரை அண்ணன் சொல்வதாகச் சொன்னாரே. அவர் எங்கே?"

பாண்டித்துரை உள்ளே மூட்டை கட்டிக் கொண்டிருந்தார்.

"அவர் உள்ளே பிரயாணத்துக்கு மூட்டை கட்டுகிறார். இந்த வேளையில் வேலைக்கார குஞ்சுனுவைக்கூட காணவில்லை. சாமான் தூக்குவதற்கு ஆள் வேண்டாமா?" என்று நாராயணமேனன் மகளுக்குச் சொன்னார்.

"வாரியாரய்யா, நீங்கள் கோபித்துக்கொண்டால், எனக்கு இடிவிழப் போகிறது. என் அப்பா இங்கே வீட்டுக்குக் காவலாக இருக்கப் போகிறார். அம்மா என்னோடு வரும். நீங்கள் ஒரு மாதம், இரண்டுமாதம், எங்களோடு குற்றாலத்தில் தங்கி இருக்க வேண்டும்; எங்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும்."

"பாண்டித்துரையின் சொந்த ஊர் குற்றாலம். அவர் அங்கே ராஜா. நான் எதற்கு?"

"நீங்கள் இல்லாது போனால் என்னால் சமாளிக்க முடியாது. நீங்கள் செய்யும் வைத்தியங்கள் அங்கே நடைபெறட்டும். குற்றாலத்து அருவியின் குளிப்பால் பித்தம் தணியும் என்று சொன்னார் பாண்டித்துரை; அண்ணன் சொல்லும் யோசனைகள்

எனக்கு நல்லது. நமக்கு முக்கியம். 'இவ'ருக்குக் குணமாகவேண்டும்.''

''எங்கள் சார்பாக உன்னிடம் முள்வேலி மூங்கில் படலுக்கு அப்பால் ஏதோ பேசினர். அதன் விபரம் சொல்லவில்லே. நீங்கள் இருவரும் செய்கின்ற சதிக்கு நான் உடந்தையா? எனக்கு எவ்வளவோ வேலே. போதும் ஊர் வாழ நான் உழைத்தது. நாராயணத் தம்பிக்காகப் பார்த்தேன். இனி நான் போகிறேன்.''

பாண்டித்துரை 'விடுவிடு' என்று வந்தார். வாரியார் பின்னல் அவரும் நடந்தார். அவர் யாரிடமும் பேசாமல் அவர் பின்னே நடந்தது வியப்பைத் தந்தது.

''நீங்கள் எங்கே போகிறீர்கள் ? அண்ணு...நீங்கள்...''

லட்சுமிக்குட்டியின் குரல் ஒங்கி ஒலித்தது. பாண்டித்துரை திரும்பாது, சைகை காட்டியபடியே வாரியார் பின்னல் போனர். முன்னல் ஒத்தடித்தடத்தில் வாரியார் இறங்கி விட்டார். நான் என்ன செய்வதென்று அறியாது நெடுமரமாக நின்றேன். கனவில் நடக்கும் காட்சியாகப் படுகிறதே தவிர்த்து, எதற்கு யாருக்காக இத்தனே வேஷங்கள் என்று புரியுமா ? ஒவ்வொருவர் மனசில் என்ன இருக்கிறது என்று புகுந்து பார்க்க யட்சினி வித்தை பழகி இருக்கிறேன ?

மூத்தையனே விட்டுவிட்டு ஓடிப் போய் வாரியார் முன் நின்ருள்; நின்ருளாவது, அவள் அருகாக வந்து முத்தையன் கண் இமைக்கு முன் நின்று விட்டான்.

அவள் வழியை மறித்தாள்; முத்தையனும் சிரித்துக்கொண்டு—அசட்டுச் சிரிப்பு, பைத்தியக்காரச் சிரிப்புத்தான்—வழியை மறித்தான். அவள் சொன்னதை அவனும் சொன்னன். எனக்குச் சிரிப்பு வந்தது; பாண்டித்துரை கண்ணில் கண்ணீர் முட்ட நின்றது. வாரியார் மேலே நடக்க வொட்டாமல் லட்சுமிக் குட்டியின் கண்களேப் பார்த்தார்.

''என்னிடம் எதை ஒளித்தாலும் எனக்குக் கோபம் வரும்.''

''அண்ணு, நீங்கள் சொல்லவில்லேயா? வாரியார் ஐயா கோபப்படுகிருரே.''

''நீ சொல்லும்படி எனக்கு உத்தரவு போடவில்லே. சொல்லவில்லே.''

''நான் எதற்காக உத்தரவு போட வேண்டும் அண்ணு?''

''நீ சொல்வதைச் சொல்லும் கிளிப்பிள்ளே தானே, நான்'' என்ருர் பாண்டித்துரை.

''அண்ணு, எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல செய்கிறீர்கள். நீங்கள் எதைச் சொன்னுலும் செய்கிறேன். என்னேயா நீங்கள் கேட்டு நடக்கவேண்டும்? எனக்கு உதவி செய்யும் தெய்வம் தாங்கள் ''

''கேளாமல் எதையும் செய்யும் உரிமை எனக்குக் கிடையாது. உன்னிடம் கேளாமல் செய்து விட்டு அவதிப்பட நான்...''

''என்னிடம் எதையுமே நீங்கள் கேட்க வேண்டுவதில்லே: இது உறுதி.''

லட்சுமிக்குட்டியினுடைய சொல்லும் குரலும் கோபகதியில் இறங்கிய போது, முத்தையன் முகம் சுண்டி நின்றது: அவன் மனத்துள்ளேயும் அதே சாயைகள் பரவின போலும்.

''நான் கொஞ்சம் முன்யோசனே இல்லாதவன்: கேளாமல் செய்ய மாட்டேன்; செய்துவிட்டால் அதனுல் வருகின்ற சாதக பாதகங்கள் எவ்வளவு துன்ப எல்லேக்குள் வருமோ?''

''ஒன்றும் வராது.''

''இதோ வந்திருக்கிறதே. கண் முன்னல் பாரு. யாருடைய உதவியும் ஒத்துழைப்பும் இருந்தால் முத்தையன் குணப்படுவானே, அந்த வாரியாருடைய விரோதம் முதல் படியாக வந்துவிட்டது. காரணம், எல்லா விபரங்களும் நீ வந்து

சொல்வதாகச் சொன்னாய். அடுத்து பரம விரோதியாக மாறக்கூடியவர். திருச்சி நண்பரோ என்மீது பாயக் காத்துக்கொண்டிருக்கிறார். இந் நிலையில் நான் என்ன செய்கிறது?''

"ஏதும் செய்ய வேண்டாம். தங்களுடைய பரிபூர்ண உரிமையாக எல்லாவற்றையும் இவர் குணமடையச் செய்யலாம். என்னுடைய அனுமதி வேண்டுவதில்லை.''

"வாரியாரய்யா, நீங்களே காதாரக் கேட்டுக் கொண்டீர்கள். நான் அவளுடைய, லட்சுமியுடைய, வார்த்தையைக் கேளாமல் எது வேண்டுமானாலும் செய்யலாம். செய்த பின்னர் சொல்லலாம். இப்போது நீங்களும் நானும் உங்களுடைய கிராமத்துக்குப்போகிறோம். இது என் முடிவு.''

வாரியார் உச்சி குளிர்ந்து போய் பாண்டித்துரையின் தோளில் கை போட்டபடியே நடக்கஆரம்பித்தார். என் கதி? நடுவே மாட்டிக் கொண்டேன். லட்சுமிக்குட்டி அப்பொழுது தான் சொல்லி வாய்மூடி இருந்ததால் வாய்திறக்க வில்லை.

"அண்ணா, ரெயில் மாலை 5-மணிக்கு.''

"ஆகா.''

லட்சுமிக்குட்டியை, என்னை, அந்த மலையடிவாரத்துக் குடிலை மறந்து, 'வாரியாரே தெய்வம்' என்ற நோக்கத்தோடு போய்விட்டார் பாண்டித்துரை. என் மனசில் லட்சுமிக்குட்டியைத் தன் வசப்படுத்தி ஆட்டிவைப்பது போன்று வாரியாரை ஆட்டிவைக்க முயற்சி செய்கிறார் என்று எண்ணினேன். எண்ணியது எண்ணியபடி நடக்குமா?

"தங்கச்சி, நானும் வாரியார் ஊரைப்பார்த்து வரட்டுமா?''

"ஐயோ! அண்ணன் என்ன சொல்லுமோ? நீங்கள் போக வேண்டாம்.''

அப்பப்பா, எவ்வளவு பயம்; நடுக்கம்! இந்தப் பெண்ணுக்கு பாண்டித்துரை அத்துணை நிச்சயத்தை அவள் நெஞ்சிலும் நினைவிலும் படரவிட்டு வைத்தார். தான் பயப்படுவது போன்று தன்னுடன் இருப்பவரும் பயப்பட வேண்டும், என எதிர் பார்க்கிறாள். எவ்வளவு சாதுர்யம், சாமர்த்தியம் இந்தப் பாண்டித்துரைக்கு!

என்னைப்போக வேண்டாமென்று தடுத்தாள். வேறு போக்கிடம் இல்லாமல், குடிசைக்குள் வந்து படுக்கையை எடுத்து உதறிப் போட்டேன். வானத்தில் பஞ்சுப் பொதிகள்; மெல்லிய மேகத்திரையில் ஊமை வெயில் காயும் வேளை. சோம்பலாகப் படுத்துக் கனவுகான வாய்ப்பான பொழுது.

படுக்கையைத் தட்டியபோது அதிலேயிருந்து கடிதம் ஒன்று விழுந்தது. பாண்டித்துரையின் எழுத்து. அவர் எத்துணை முன்யோசனையுடன் எழுதியிருக்கிறார்!

"ஐயா கதாசிரிய நண்பரே!

வருந்தவேண்டாம். லட்சுமிக்குட்டியால் என்னுடைய மனப்போக்கு மாறுபாடு கொண்டது உண்மை. தங்களோடு கலந்து, என்ன, ஏது செய்யலாம் என்பதாக யோசிக்கவில்லையே என்று கவலைப்படுகிறீர்கள் இல்லையா? நேரம் எங்கேயிருக்கிறது? நாம் தனித்துப்பேச இடமும் இல்லையே? என் மனப்போக்கில் மாற்றம் இருந்தாலும் மன்னிப்புக் கோருகிறேன். எப்படியாவது முத்தையனை நாம்-நீங்களும், நானும்-குற்றாலம் அழைத்துப் போய்விட வேண்டும். தங்களை அசட்டை செய்வதாக என்னாதீர்கள். ஆருயிர் நண்பரே, என்செயலைப் பொறுத்துக் கொள்ளுங்கள். என் பொல்லாத்தனச் செய்கைக்குத் தாங்கள் சோர்ந்து, படுக்கை எடுக்க வருவீர்கள் என்பதால் இங்கு இதனை இப்பொழுது எழுதிவைத்தேன். மற்றவை பின்னர் நேரில்.

தங்கள் அன்பு மறவாத,
பாண்டித்துரை.

கடிதத்தின் கனிந்த வாசகங்கள், என் கற்பனையையும் கடந்த வாசகங்கள் என் மன அரங்கில் நடஞ்செய்தன.



அருகாக இருக்கும் வாய்க்காலை நோக்கி முத்தையன் குளிக்கப் போனான். யானைமுன்னே போகும் பாகனைப்போல, லட்சுமிக்குட்டி முன்னதாகப் போய்க் கொண்டிருந்தாள். கண்கொள்ளா இக்காட்சியை மனதார ரசித்துக் கொண்டிருந்தேன்.

செண்பகம் இக்காட்சியைக் கண்டால் சிறுவாளோ? சிந்திப்பாளோ? சிந்து பாடுவாளோ?

'ஆரியங்காவு ஸ்டேஷனுக்குப் போக ஆள் கொண்டு வந்துவை. சுமைதூக்க வர்க்கியும் குஞ்சுனுவும் வந்துவை' என்றார் நாராயண மேனன்.

'ஆனால், பாண்டித்துரை வரவில்லையே?'

'எல்லாம் வரும், வரும். ஊணு கழிக்க வருவை' என்றார் லட்சுமியின் தந்தை.

இன்னும் பண்ட பாத்திரங்கள், உடைகள் எல்லாம் சாக்குப்பைகளில் கட்ட ஆரம்பித்தார்கள். எனக்கு அதிசய மனிதர்களுடன் பிரயாணம் செய்வதில் ஆர்வத்தை விட ஆனந்தம் இருந்தது.

நாங்கள் புறப்பட்டோம். பாண்டித்துரையைக் காணோம்.

'பாண்டித்துரை, இல்லாமல் நான் வரவா?'

'பாண்டித்துரை, கோபாலவாரியார் இருவரும் நேரே ஸ்டேஷனுக்கு வரும்.'

'உங்களிடம் சொன்னாரா?'

'ஆமாம்' என்றார் மேனன்.

'என்னிடம் சொன்னார் அண்ணன்' என்றாள் லட்சுமிக்குட்டி. அவள் அருகாக ஆட்டுக்குட்டி போன்று நடக்கும் முத்தையன். முன்னே வர்க்கியும் குஞ்சுனுவும் மூட்டை சுமந்து போகிறார்கள்.

மப்பு மந்தாரமான அந்தப்பாதை நடப்பதற்கு உற்சாகமாக இருந்தது. இரண்டு மைல் நடந்து பஸ் பிடிக்க வேண்டும்.

பஸ்ஸ்டாண்டுக்கு நாங்கள் வந்தபோது எங்கள் வருகைக்கும் சேர்த்து டிக்கெட் எடுத்து வைத்திருந்தார் பாண்டித்துரை.

'அட எவ்வளவு முன்யோசனை' என்று வியந்தேன்.

'காரணம் உங்களுக்குத் தெரியும். நாம் சுவாதீனமுள்ளவர்கள்; நம்மோடு வரும் ஒரு நபர் சுவாதீனமில்லாதவன். அவனை நாம் மிகைபடுத்தியோ பிறர் சந்தேகப்பட்டோ துன்பம் வந்தால் இங்கிருந்து சுலபமாகப் போக முடியாது. அதனால் முன்னதாகவே வந்து டிக்கெட் எடுத்தேன்.'

'பாண்டித்துரை, இனி நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்பதில் ஆட்சேபணை இல்லை. முன்யோசனையும் முன்கவலையும் இருப்பவன் வெல்லுவான்.'

கார் புறப்பட்டது.

மணமான தம்பதிகளைப்போல லட்சுமிக்குட்டி அருகாக அமர்ந்திருந்தான், முத்தையன். அவன் உடலும் உள்ளமும் போதை கொள்ளக் கூடிய சம்பவந்தான். வெட்கமும் வெறுப்பும் இல்லாமல் அவள் எவ்வாறு, அருகாக இருந்தாள்? அவள் மனம் எத்தகைய கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கின்றனவோ?

அத்தியாயம் 19.

தாய் நெஞ்சு பொறுக்குதில்லையே !

ஏமாற்றமும் அதிருப்தியும் அடைகிறவர்கள் நல்லவர்களாக இருந்தால் மனத்தளவில் சிறுபொழுது நோவு ஏற்பட்டு விதியை, வினைப் பயனை எண்ணி சாந்தி பெறுவார்கள். போக்கிரியும் பொல்லாங்கும் நிறைந்த செய்கை உள்ளவர் மேலும் மேலும் தீமைக்குத் திரி திரிப்பார்கள்.

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கு மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5. ஸ்காட் ரோடு : : மதுரை.

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனாமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR .... P.T. MADRAS.

BAROO/-

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

உண்மை யென்னும் ஒளி என்றுமே வெல்லும்; அணையாது; பிரகாசிக்கும். உண்மையைக் காணவே அறிவு துடிக்கிறது; உண்மையைக் காண்பதே இன்பம். உண்மை யென்ற தத்துவத்தைக் கண்டதிலும், சொல்வதிலும் மனிதன் தேவ நிலைமை அடைகிருன். ஒளி படைத்த வாளைப் போல, உண்மையைக் காண்பவர்கள் நல்லவர்களாக இருந்தால் நன்மை; தீய மனம் படைத்தவர்களாய் இருந்தால் ...?

ராமையாவின் உள்ளம் உண்மையைக் கண்டதால் வெந்து சாம்பலாயிற்று; வாரியார் சொல்ல வந்த உண்மையைக் காட்டியே, செண்பகத்தின் மனதைக் கலைக்க முயன்றான். செண்பகம் மனதில் அசைக்க முடியாத கற்சிலையாக முத்தையன் நின்றதால், அவன் சித்தம் பேதமை அடைந்ததும் மற்ருெரு பெண் மீது மனம் பறிகொடுத்தான் என்ற சேதியும் அவள் இதயத்துள் பதிய மறுத்தன. உருக்கில் எந்தக் கோடும் செதுக்குவது கடினம். செதுக்கிஞல் அழிப்பதும் கடினம். தீவிரமான அன்புள்ளவர்கள் தீயதை நம்ப மாட்டார்கள்.

செண்பகம் நம்பிக்கை கொள்ளாமலும் அதற்கு மாருகச் சொன்னவர்களைக் களைக் கொட்டால் தாக்கவும் ஆரம்பித்தாள். முத்தையன் உண்மையான நிலைமை காதல் உள்ளத்தில் பாயாமல் போய்விட்டது; தாயுள்ளத்திலே இச்செய்தி சலனம் உண்டு பண்ணும். தாயல்லவா, அவள் இதயம் எதையும் நம்பும்.

ரௌடி ராமையா தீட்டிய திட்டம் வெகு சுலபத்தில் பலனளித்தது.

"பெரியம்மா, நீ சுத்தப் பைத்தியக்கார ஏமாளி. உன்னை செண்பகம் ஏமாற்றி விட்டாள்."

"என்னையா? இல்லேடா ராமையா, அவளே சொன்னுள், சிங்கப்பூர் தபால் வந்ததாம். முத்தையன் சிங்கப்பூரில் இருக்கிருன்."

"பொய்."

"எதுடா பொய்?"

"பாண்டித்துரையின் கார் கண்ணுடியை களைக்கொட்டால் செண்பகம் ஏன் உடைத்தாள்? மலையாளத்து கோபால் வாரியார் வந்தவர் என்னம்மா சொன்னுர்?"

தாயுள்ளம் தவித்தது. இதற்குள் பாண்டித்துரை காரின் முன்பக்கத்துக் கண்ணுடி உடைபட்டது, காதோடு காதாய் ஊருக்குள் பரவி விட்டது; களைக்கொட்டு எறிந்தவள் செண்பகம் என்பதும் அவன் தாயின் காதிற்கு வந்தது.

"ஏண்டா ராமையா, என்னென்ன நடந்தது?"

ராமையா கண் மூக்கு வைத்துச் சரடு விட்டான்.

"முத்தையன், மலைக்கு அப்பால் யாரோ ஒரு பெண்ணின் வலையில் சிக்கி விட்டான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் புலி வேட்டை ஆடப்போனது உண்மை. செண்பகம் கட்டளைக்குப் பயந்து அவன் வேட்டைக்குப் போனது உண்மை.

முன்னமே சொன்னேன்; பெரிய அருவிக்காட்டிலே செண்பகம் சொல்லித்தான் தம்பி போச்சுது; உன்னிடம் சொன்னதை நீ நம்பலே, இப்பவாவது நம்புகிருயா பெரியம்மா?"

கண்ணுரைக் கண்டது போல காட்சிகளை வர்ணித்தும் பெற்ற தாய்க்குக் கொடுத்த வாக்கு மாறிய பரிதாபத்தையும், கைபிடிக்கப் போகும் செண்பகம் தாயைவிடப் பெரியவள் என்ற வரலாறும் அடுக்கிஞன் ராமையா.

"அதாம் பெரியம்மா. நீ பெரி சாப்படவில்லே. அந்தப் பொண்ணு இந்திரலோகத்து சந்திரிகை பாரு; அவள் பெரிய தெய்வம். நீ கொடுத்த இளக்காரம். வளர்த்த லட்சணம். பெற்ற பிள்ளை செய்தது துரோகம்..."

பார்வதியம்மாள் மனம் சிதறியது: இது நாள் வரை தன்னேடு ஒத்துப் பாடிய பாண்டித்துரை, திருச்சிஜயா, செண்பகம் எல்லோரும் பொய்

பேசி நாடகமாடித் திரையிட்டுவிட்டார்கள். தனக்கு ஞானக்கண் தந்தது ராமையா ஒருவனே.

குரோதம் கொள்ளச் செய்வது எளிது; அது இரையில்லாமல் தானாக வளரும் ஜந்து; காற்றில்லாமல் எரியும் நெருப்பு; தண்ணீர் ஊற்றாமல் வளரும் விஷப்பூண்டு. பார்வதியம்மாளுக்கு இருக்க வேண்டிய உலக அனுபவத் தெளிவு சற்றுக் கலங்கி விட்டது.

'படபட'வென செண்பகத்தின் வீட்டுக்குள் வந்தாள்; புயல் நுழையும் தோப்புக்குள் பரபரப்பு வருமே, அவ்வாறு வந்தாள்.

"என்ன அத்தை, எங்கே இவ்வளவு அவசரமாக?"

"அடி சண்டாளி! என்னுடன் கூடிக்குலாவி பொய் சொல்லிப் போட்டவள் தானே. என் பிள்ளை புலி வேட்டைக்குப் போய் மலையாளத்து சிமையில் இருக்கிறானாமே? இது உண்மையா? சொல்லடி."

பார்வதியம்மாள் பேச்சு வாயிலிருக்க, செண்பகத்தின் கூந்தல் அவள் கையில் இருந்தது. செண்பகம் தப்ப முடியும்; விடுவிக்க முடியும். மரியாதை காரணமாக பயந்திருந்தாள். மகளுடைய தலைமயிர்பிடி மாமியாரின் கையில் இருப்பதைக் கண்ட செண்பகத்தின் தகப்பன், "அட விடு அக்கா, அவள் தலையை எதற்காகப் பிடித்தே?" என்று கத்தினார்.

"என் மருமகளை வெட்டுவேன்; குத்துவேன். அவள் செய்த அக்ரமத்தைக் கேள்."

"கேட்டுக்கிடக்கு. ஆயிரம் பரிசம் போட்டு, அம்மி மிதிச்சு, அரசலை நட்டுக் கல்யாணம் செய்தவள் போல மருமகளாம். விடு,என் மகள் தலையை."

"என்னை ஏமாற்றியவளை சும்மா விடமாட்டேன்" எனக் கத்தினாள் பார்வதியம்மாள்.

"இனிமேல் நடக்கிற காரியம் வேறே. என் மகளைத் தொட்டால், தொட்ட அந்தக் கை கீழே விழுந்துவிடும். இதுநாள் வரை பொறுத்திருந்தேன்." என்று மகளை, பார்வதியம்மாள் பிடியிலிருந்து விலக்கினார். செண்பகத்திற்கும் விலகிச் செல்வதில் நோக்கம் இருந்தது.

"என்னை ஏமாற்றலாமா?"

"யார் ஏமாற்றினதாம். நீங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் சொல்லப்பட்டது, அத்தை"

"அடிபாவி, என் பிள்ளைக்கு என்னமருந்து மாயம் வைத்தாயோ? அவன் சித்தம் கலங்கி இருக்கிறானாமே."

செண்பகத்தின் தந்தை, "போகட்டுமே பச்சைக் குழந்தையா? வீராப்பாகப் பேசினான்; வேட்டையில் புலி பிடிக்கப் போனான்; புத்தியை இழந்தான்; அப்பனைப் போல பிள்ளை வாய்த்தான்" என்று குத்தலாகச் சொன்னார்.

"நாசமாப் போச்சு. என் குடும்பம் கெட்டது போல உன் குடும்பமும் நாசமாகப் போக."

"நாங்கள் ஏன் போகவேணும்?" என்றார் எதிர்த்து.

"டேய், நீயும் நானும் ஒருதாய் வயிற்றிலே பிறந்தால்,என் மகன் முத்தையன் உன் மகளைக் கட்டமாட்டான்; கட்ட விடமாட்டேன். இதுதான் நிச்சயம். சபதம்."

"அட போம்மா; உன் பேச்சைக் கேட்டுத்தான் உம்புள்ளை புலி வேட்டைக்குப் போச்சோ? புத்தியை இழந்துதோ?"

பையனை இழந்ததைவிட, அவன் போன விபரத்தை தம்பி சொல்லவே ஆத்திரமாக இருந்தது.

"நட வெளியிலே. இனிமேல் வீடு தேடி வராதே. வந்தால் மரியாதையாக நட. பேசு. என்மகள் தலையை எட்டிப்பிடிக்கிறது, அடிக்கிறது, இனிமேல் கொலை விழுந்து போகும் கொலை."

பார்வதியின் உடலில் பாதி உயிர் இருந்தது. வீட்டுக்குப் பின்பக்கம் எருமை மாட்டு அழியில் ஒதுங்கி ஒட்டுக் கேட்ட ராமையாவின் உள்ளம் பாதி நம்பிக்கை அடைந்தது.

பார்வதியம்மாள் தன்மகன் முத்தையன் வந்தால் " நீ செண்பகத்தை மணக்காதே? என்று வாதாடுவாள். அட்டா, அப்போது செண்பகம் தன் காலடியில் வீழ்வாள். என்ற கற்பனையுள் ஆழ்ந்தவன் வீழ்ந்து விட்ட செண்பகத்தை எடுத்து நிறுத்துபவனுக நடக்க முற்பட்டபோது எருமை மாட்டின் பெரிய கொம்பு ராமையாவின் கையில் பட்டது.

பார்வதியம்மாள் கோபித்துத் தெருவில் எப்பக்கம் போகிருள் என்பதைக் காணவந்தாள் செண்பகம். எருமைமாட்டுக் கொட்டிலின் அருகாக வந்து மண் சுவரைத் தாண்டி பார்வை செலுத்தினுள். செண்பகம் அங்கே வந்தபோது எருமைமாட்டின் கொம்பை நிமிர்த்திக் கொண்டிருந்தான் ராமையா.

" என்ன வீரதீர சிங்கமே, எருமை மாட்டுப் பக்கத்தில் எமன் மாதிரி நிற்கிருய்?" என்ருள் செண்பகம்.

" ஓகோ செண்பகமா?"

" ஆமாம். அத்தையிடம் போய் கலகம் இழுத்துவிட்டு, உளவறிந்து ஒட்டுக்கேட்க வந்தாயோ?"

" ஐயோ செண்பகம். நிஜமாகவே அந்த வாரியார் சொன்னுர். லட்சுமிக்குட்டிக்கும் முத்தையனுக்கும் கலியாணம் ஆகிப்போச்சுதாம்."

" நீதான் தாரை வார்த்து தண்ணீர் தெளிச்சது. நீ ஓடிப்போகிருயா? ' அப்பா ' என்று சத்தம் போடட்டுமா?"

" வேண்டாம் போயிடறேன். அப்பாவைக் கூப்பிட வேண்டாம்."

" ஓடு "

" புலியோட போரிட்டு வெற்றி மாலை தாங்கிய வீர தீர புருஷன் வரப்போகிருர். இவர் என்னடா என்ருல் எமன் மாதிரி எருமை மாட்டுப் பக்கம்..." என்றவள் பார்வை தெருவில் நீண்டது.

பார்வதியம்மாள் கோபமாக காஸ்மீஸ்வரத்து தெரு வழியாகக் குற்றுலம் நோக்கிப் போகிருள். சில வினாடியில் ராமையாவும் தோப்பு வழியாக அவள் அருகே வந்து கொண்டிருக்கிருன். பாண்டித்துரைக்குக் கொடுத்த வாக்குக்குக் கட்டுப்பட்டு, வீட்டுக்குள் விழுந்துகிடந்தாள்; வெளியே தலை காட்டவில்லை செண்பகம்.

ஆனுல், பார்வதியம்மாள் பெரிய புயலை உண்டாக்கப் போகிருள் என்பதை மட்டும் அறிந்தது அந்த அபலை மனம். பதறிற்று பஞ்சை உள்ளம். பாய்ந்து போய் பார்வதியை நிறுத்தப் பயந்தது.

பார்வதி ஆத்திரத்தால் ஆவேசம் கொண்டு பாண்டித்துரையைத் திட்டினுல் என்ன நடக்கும்? உதவி செய்ய வேண்டிய உத்தமன் பாண்டித்துரை கோபங்கொண்டு, மீட்டு வரவேண்டிய முத்தையனை மீட்காது இருந்தால்?

எண்ணுதன எண்ணி ஏங்கினுள் செண்பகம்.

மகனைப் பாவியாக எண்ணிய தாய், பாண்டித்துரையின் பங்களாவிற்கு வந்தபோது அங்கே அவள் குரலுக்குப் பதில் சொல்லக்கூடியவர்கள் எவரும் காணுேம்; பாண்டித்துரை, திருச்சி எழுத்தாளர் கோபால வாரியார் எவரும் இருந்த சுவடே தெரியாது போயிற்று. பாண்டித்துரையின் மனைவி " பார்வதியம்மா நீங்கள் கேள்விப்பட்டது அத்தனையும் பொய். மகராஜா சிங்கம் பட்டிக்குப் போயுள்ளார். வர ஒருவாரம் பத்து நாள் ஆகும். அங்கே காட்டுக்குத்தகை வாங்கப் போயுள்ளார்." என்ருள்.

" பொய்யம்மா. என்னை ஏய்க்க நீங்கள் எல்லோரும் திட்டம் போட்டீர்கள். கதையில் புராணத்தில் தாய் சொல்லுக்குத் தலைவணங்கிய பிள்ளைகள் பெத்த புண்ணியவதிகளைப் பார்த்தும் கேட்டும் இருக்கிறேம். எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆகாத பிள்ளை முத்தையன். அதுவும் தாலிக்கட்டு முன்னே தாழ்ந்த வீரனையா பெற வேண்டும்?

அவனை இவ்வளவு ஆட்டத்திற்குள் சுற்றிக் கெடுத்ததில் மகாராஜாவும் பங்குகொண்டார். ஒன்று கேளுங்கள். என் பிள்ளை வரட்டும்; அவனைப் புலி வேட்டைக்கு அனுப்பினுளே அந்த சித்திராங்கி அவள் அவனைக் கட்டிக் கொண்டு குப்பை கொட்டுவதைப் பார்க்கிறேன்."

"அது உங்கள் குடும்ப விவகாரம். உங்கள் பிள்ளையைப் பற்றிய விவகாரத்தை மகராஜா ஊரில் இருந்து வந்ததும் கேட்டால் சொல்லுவார்."

பார்வதியம்மாள் ஏமாந்தாள். அவள் நெஞ்சு சுக்குநூருக வெடித்து விடும் போல துடித்தது; தன்னை ஏமாற்றுவதற்கே பலர் ஒருசேரத் திட்டம் போடுகிருர்கள்; பல உண்மைகளை மறைக்கிருர்கள்; அவ்வாறு மறைப்பதில் தன்னைவிட செண்பகத்தின் பக்கம் உண்மையைச் சொல்லுகிருர்கள்; அவளுக்காக பரிந்து நடக்கிருர்கள்; செண்பகத்தின் சொல்லுக்குள்ள மதிப்பு பெற்றவளுக்கு இல்லையா? ஓயாத கேள்வி இது? தீராத பதில் என்ன?

பங்களாவின் வாசலைவிட்டு பித்துப் பிடித்தவளாக வந்தபோது அதற்குள்ளாக ராமையா சில தகவல்கள் கேட்டுவிட்டான். எல்லோரும் சில ஆட்படையோடு மலைப் பாதைவழியாகப் போயுள்ளார்கள். வாரியார் மட்டும் போகவில்லை. அவர் ரெயில் வழியாகப் போயுள்ளார்; கிடைத்த இத்தகவல்களை பெரியம்மாவிடம் அப்படியே வந்து அத்தனையும் சொன்னுன்.

அடுத்துச் சில தினங்கள் ஓடின.

அத்தியாயம் 20.

பித்தனும் பிணமும்

சித்தசுவாதீனமில்லாதரைக் குணப்படுத்தும் வைத்தியசாலை குற்ருலத்தில் உண்டு. அம்மடத்துச் சாமியாரின் சமையல்காரன் "என்ன ராமையா அண்ணே, புலி வேட்டைக்குப் போனவர் புத்தியை இழந்து வருகிருர் என்று கேள்வி. இங்கேதானே சிகிச்சைக்கு வருகிருராம். இப்பதான் சாமி சொல்லுச்சு. பாவம், முத்தையன் நல்லவன் ஆச்சுதே. என்ன நடந்தது?" என்று விசாரித்தான். அவன் கேட்ட கேள்வியைவிட சொன்ன தகவல் ராமையாவிற்கு உதவியாக நிற்கும் கைத்தடி. தற்காப்பு கடிதம்.

"எப்போ வருகிருராம்?"

"பாண்டித்துரை ஜமீன்தார் கடிதம் எழுதியிருக்கிருர் என்று கேள்வி."

"எங்கேயிருந்து லட்டர் வந்தது?"

"நாளைக்கு தென்காசி கெடிக்கு நாலுமணி ரெயிலில் வருகிருர்களாம்."

"அப்படியா? காதல் என்கிற வியாதி ரொம்ப பொல்லாதது. புலியைக்கூட புல்லுப்போல எண்ண வைக்கிறது. புல்லையும் புலியாக்கிருங்க என்னைப் போல கோழைகள்."

சமையல்காரன் சிரித்தான். அவனுக்கு ராமையாவின் ஒழுக்கம், பண்பாடு நன்ருகத்தெரியும். அடாபிடித்தனத்தின் அவதாரம் என்பதை அறிவான்.

சமையல்காரன் கொடுத்த தகவல் சஞ்சீவியைப் போல இருந்தது. உடனடியாக பாண்டித்துரையின் மோட்டார் ஓட்டியிடம் நெருங்கி எந்த ரெயிலுக்கு கார் போக வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டான். செய்தி ஊர்ஜிதம்

ஆகிவிட்டது. முத்தையன் வரப் போகிறுன். வந்தவன் சித்தம் சரி யாகக் குணமானுல் என்ன ஆகும்? செண்பகத்தை மாலேயிட முடியாது; மறக்க வேண்டும். மறப்பதா? மறக்க வேண்டுமென்ற எண்ணமே தொல்லே தருகிறதே. மறக்கக் கூடாது; செண்பகத்தை எப்படியே னும் மனம் மாற்றம் செய்யவேண் டும். அவன் எண்ணம் முழுக்க, வருகின்ற முத்தையன் குணமில்லா மல் போவதைவிட செண்பகம் மனம் மாறினுல் போதும். நேராக காஸ்மீஸ்வரம் வந்து நின்ருன்.

"பெரியம்மா, நாளே நாலுமணி ரெயிலில் முத்தையன் வருகிருன். அவனேடு மலேயாளத்துப் பெண் ணும், திருச்சி எழுத்தாளர் ஐயா, மகாராஜா பாண்டித்துரை எல்லோ ரும் வருகிருர்களாம். நீ என்ன நிணக்கிருய்?"

"நீ சொல்கிறதைக் கேட் கிறேன்."

"நமக்கு இல்லாத கரிசனே அக் கறை இவர்களுக்கு என்ன வந்தது? அவர்கள் மூன்ரும் மனு உதுர்கள். முத்தையன் உன் உதிரம்; நீ பெற்ற பிள்ளே; உன் பாதுகாப்பில் இருக்க வேண்டும். சாமியார் நமக்கு வேண் டியவர். அவரிடம் மருந்து வாங்கி வீட்டில் வைத்துக் கவனிக்க வேண் டும். செண்பகத்துக் கழுதையை நெருங்கவிடக் கூடாது. உங்கள் பிள்ளேயை அவள் புத்தி சிதற அடித்துப் புலிக்குப் பலியாக்கியவள் கொன்னுலும் கொல்லுவாள்."

"கொன்றே விட்டார்கள். என் நெஞ்சு வேகாமல் வெந்து சாகிறது. நீயும் நானும் தென்காசிக்குப்போய் முத்தையன் ரெயிலிலிருந்து இறங்கி யதும், கையோடு கூட்டிக்கொண்டு வந்துவிடவேண்டியது."

"செண்பகம் வந்து நிற்பாளே."

"வருவாளோ? அங்கேயே ரெயில் தண்டவாளத்தில் புதைத்து விடுவேன். என்பிள்ளேயை எனக் கும் ஆகவிடாமல், அவன் மனசைக் கெடுத்த பாதகி அல்லவா அவள்?"

ராமையா, தாயுள்ளத்தின் தயவை மெழுகுப்பதமாக வைத்துக் கொண்டான்; இனி அதில் விழு கிற பொருள்கள் இறுகிக்காய்ந்து இவன் நிணவு உருவில் பிடித்துக் கொள்ளும்.

மறுநாள் பொழுது விடிந்து நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

ரெயில் ஆரியங்காவிலிருந்து தென்காசி சந்திப்புக்கு வந்து நின் றது. முதல் வகுப்புக் குள்ளிருந்து முத்தையனே இறங்கும்படி சொல் லிக்கொண்டிருந்தார்கள். லட்சுமிக் குட்டியின் கையைப் பிடித்துக் கொண்டு முத்தையன் 'ஜம்' என்று இறங்கினுன். இதுவரை தெம்பாக இருந்த ராமையாவிற்கு ஜமின்தார் முகத்தைப் பார்த்ததும் தைரியம் இல்லே. பாண்டித்துரையின் மோட் டர் ஒருபக்கம் வெளியே நின்றது. டிரைவர் உள்ளே பிளாட்பாரத்துக் குள்ளே வந்துவிட்டான்.

இரும்பு கிராதிக்கு வெளியே வந்து நின்றனர். இறங்கும் மக னேப் பார்த்ததும் பார்வதி "முத் தையா, முத்தையா" என்று வீரிட் டாள். என்ருே காட்டிலே இவ் வாறு கதறிக் கதறித் துடித்துத் துன் புற்றதோ அவ்வாறு துடித்தது பெற்ற மனம். அடிபட்ட மான் போலத் துடித்தாள். அவள் நெஞ் சிலே இதுகாறும் இருந்த துக்க வெள்ளம் கரைபுரண்டது. கட்டுக் கடங்காமல் அன்பின் பெருக்கால் அவள். இரும்புக் கிராதிக்குள் ளாக நுழைந்தாள். ரெயில் தண்ட வாளத்தை தாண்டி ஓடோடி வந்து மகனேக் கட்டிக் கொண்டாள். மின் வெட்டும் நேரத்தில் நடைபெற்ற சம் பவம். பாண்டித்துரை திடுக்கிட் டார். பார்வதியை எவரும் பார்க்க வில்லேயோ?

தாய் மகனேப் பார்த்து கதறினுள். கண்ணீர் சோரத் தழுவிக்கொண்ட போது அவளுக்குக் கிடைத்த பரிசு? அதுதான் வேடிக்கை. ஓங்கித் தள்ளி விட்டான். பெற்ற பிள்ளே தள்ளிவிட்டான்.

சரலும் செம்மண்ணும் நிறைந்த அந்த பிளாட்பாரத்தில் மூர்க்கமும் முரட்டுத்தனமும் சேர்ந்து தள்ளிய தால் வயதான அப்பெண்மணி விழுந்தாள்.

"ஏண்டா, நீ பெற்ற பிள்ளையா? அடபாவி நீ மனித மிருகமா?" என்று கூக்குரல் இட்டாள்.

அவளால் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. ஏமாற்றமும் அதிர்ச்சியும் இணைந்து விட்டன. அவள் நொந்த மனம் தீப்பற்றியது.

மீண்டும் காயம் பட்ட கரத்தோடு பாசமும் ஆசையும் பாய நெருங்கிய போது பாண்டித்துரை, "அம்மா இப்படி வாருங்கள்" என்று தடுக்கப் போனார். முத்தையன் ஏதேனும் அடிதடி கொடுத்துவிடக் கூடாது, என்ற பயம். ஆனல் தாயுள்ளம் வேறு விதமாக எண்ணிவிட்டது.

"அட பாவிகளா, என் பிள்ளையை எனக்கு ஆகாமல் செய்து விட்டீர்களே என்று திமிறிக் கொண்டு முத்தையன் மீது தாவினுள். அவளுக்கு இருந்த தாயன்பு திமிறிக் கொண்டு வந்தது. பள்ளத்தில் தாவுமே புதுப்புனல் அதுபோல, கன்றிடம் ஓடுமே பசு அதுபோல, ஆசைப் பிள்ளை மீது அன்புத்தாய் கைவைத்தாள்.

முத்தையன் சலனமற்ற மூளையில் லட்சுமிக்குட்டிக்கு ஆபத்து என்ற அறிவுப் பொறி பிறந்தது. லட்சுமிக் குட்டியைத் தள்ளிக் கொண்டு யாரோ ஒரு பெண்-அல்லது ஒரு உருவம் தொல்லை செய்கிறது என்ற சலனம் ஏற்பட்டது போலும்.

லட்சுமிக் குட்டியின் கண்களிலே கோபத்தின் நிழல் பரவிக் கிடந்தது.

"அட யாரம்மா நீ போ" என்று தள்ளினுள் லட்சுமி. குரலில் கோபம் படம் எடுத்தன.

"என் பிள்ளையைத் தொட நீ யாரடி?" என்று தாய் சீறினுள்.

மறுகணம். முத்தையன் யாரைத் தெய்வமாக, அன்பின் இருப்பிடமாக எண்ணி 'அம்மா' என்று அல்லும் பகலும் தொழுது கைகூப்பி பிராணப் பிரதிஷ்டை செய்து வணக்கம் செய்து வந்தானே, அத்தெய்வத்தின் மீது அவன் சித்தக் கலக்கத்தின் காரணமாக ஒரு அடி விழுந்து விட்டது.

"அட இதுவும் உண்மையா?"

பெற்ற பிள்ளை அடிக்கிருன் என்று தாயுள்ளம் எண்ணங் கொண்டது; பேதை அவன் சித்தம் கலங்கி இருக்கிருனே என்று எண்ணவில்லை.

"ஏண்டா, உன்கையால் அடி பட வேண்டுமென்ற கதியா? ஆண்டவனே, இதற்காகவா பத்து மாதம் சுமந்து பெற்றேன்?" என்ற குரல் கேட்டது. அதற்கு அப்பால் அன்பே உருவான அந்த உதடு அசையவில்லை; உள்ளம் ஏதும் பேசவில்லை. பாசமே உருவான பார்வதியின் வார்த்தை ஏதும் வரவில்லை. எண்ணக் குமைச்சல், இதயத்தைத் தாக்கி, ஏக்கத்தின் எல்லை நரம்பை முறுக்கி அவள் கண்ணில் சோகத்தை காட்டிய படியே நாக்கு உலர்ந்தது. தலை 'குழக்'கென்று சாய்ந்தது; கண் ஏறச் சொருகி அவள் உயிர் ஊசலாடியபடியே விடை பெற்றுக் கொண்டது. மகனைக் கூட்டிப் போக வந்த இடத்தில் அவள் மரணத்தின் கையில் சிக்கினுள். பாசத்தின் விரக்தியின் வெடிப்பாக அவள் உயிர் போய் விட்டது.

முத்தையனைக் காப்பாற்றுவதை விட, இறந்து போன பார்வதியின் சடலத்திற்கு செய்ய வேண்டிய கிரியைகள் மீது அனைவருக்கும் கவலை பிறந்தது.

முத்தையனே, இறந்தவள் யாரென்றோ, எதற்காக இறந்தாள் என்றோ தெரியாத படி கல்லுப் போல நிற்கிருன். அவனுக்கு மட்டும் சுவாதீனமாக இருந்தால் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின் சாவைக் கண்டு அவன் பிழிபட்ட வாழைத் தண்டு போல துவண்டு துடித்துக் கொண்டிருப்பானே? அவன் துயரம் சுமந்த அழுகை

அங்குள்ள மரங்கள், மாடிகள், குன்று குளங்கள் எங்கும் அலை மோதுமே.

ரெயிலடியில் நடந்த களேபரம் லட்சுமிக் குட்டியின் உள்ளத்தில் எத்தனை வேதனை தந்திருக்கும் என்பதை நேயர்கள் யூகம் செய்து கொள்ள வேண்டும். லட்சுமி பாண்டித்துரை பங்களாவில் தனித்து முத்தையனுக்குத் துணையாக இருந்த வேளையில் தான் காஷ்மீஸ்வரத்து சுடுகாட்டில் ராமையாவின் தயவினால் கொள்ளி வைக்கப்பட்ட பார்வதியின் உடல் வெந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது.

"பார்வதிக்குப் பெற்ற பிள்ளையிருந்தும் சாவுக்கு உதவாமல் போய் விட்டானே?" என்ற பேச்சே ஊர் முழுவதும் பரவி நின்றது. முத்தையனைப் 'பாவி' என்றார்கள். பெற்றவளைப் 'பாவி' என்றனர். வேதாந்தமும் வசனமும் பலர் பேச்சுக்கு இரையாயின.

'பெற்ற மகனைப் பித்தனாகக் கண்டதும் பிணமானாள் தாய்' என்ற தலைப்பிட்டு தினசரிகள் பத்தி பத்தியாக எழுதிக் கொண்டிருந்தன.

அத்தியாயம் 21.

துள்ள மான் வேண்டும்! துணைக்குச் செண்பகம் வேண்டும்!

பாண்டித்துரையின் பங்களாவின் அமைப்பில் இருந்த வசதியால் அங்குள்ளவர்கள் பெரிய அருவிக்கோ, சிற்றருவிக்கோ மெனக்கெட்டு போக வேண்டாம்; பின்பக்கமுள்ள ஓடையை உயரத்திலிருந்து விழும் சின்ன அருவியாக செமிட்டியில் கட்டப்பட்டிருந்தது. முத்தையன் தொல்லை இல்லாமல் இருக்க நல்ல வாய்ப்பு. அவனே உள்ளூர்வாசி; பலரும் அறிந்தவர்கள். பலருடைய கவனத்தைக் கவர்ந்து தொல்லை பிறக்கும். மேலும் அவன் தனித்துப் போக இயலமுடியாத கஷ்டமும் இருக்கிறது. உடன் போக வேண்டியவள் லட்சுமிக்குட்டி. பத்து நாளாக தாயார் மறைவை அறியாத முத்தையன் பங்களாவில் ஒரு அறையில் சுகவாசியாக லட்சுமிக் குட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தான். சாமியார் யோசனைப்படி மருந்தும், வாரியார் யோசனைப்படி சிகிச்சையும் நடைபெற்று வந்தன. அவர்கள் எல்லோரும் கூடி ஆலோசனைகள், சர்ச்சைகள்செய்து முடிவு கண்டது இதுவே.

'முத்தையன் மனதில் லட்சுமிக் குட்டி இருக்கும் வரை, எவருமே அவனிடம் பேச்சும் மருந்தும் கொடுத்துச் சரிப்படுத்த முடியாது. அவ்வாறு ஏதேனும் முயற்சிகள் செய்தால், முரட்டுத்தனம் அதிகப்படும்' என்று முடிவு கட்டினார்கள்.

முத்தையன் உணவு, உடையில் எவ்விதமான குறைபாடும் கொள்ளாமல் வாடிய உடம்பு கூட தேறிக் கொண்டிருந்தது. அவனுக்கு லட்சுமிக்குட்டி ஒருத்தியைத் தவிர்த்து யாரையும் அடையாளம் தெரியாது; தெரியவும் அவன் விருப்பங் கொள்ளவில்லை. உணவு கொடுக்க வேற்றாள் போன போது அவன் பட்டினி கிடந்தான். மற்றவர்களுடன் சேர்ந்து உணவு உட்கொள்வதோ பேசுவதோ அவனுக்கு விருப்பமில்லாத செயல்கள்.

ஒரு மாத காலம் அவன் உடம்பைத் தேற்றுவதில் அக்கரை காட்டி வந்தவர்கள் அவன் உள்ளத்திற்கு மருந்து கொடுக்கும் கலையைப் பின்பற்றும் நாள் வந்தது.

அவன் அறைக்குள் ஒரு மாதமாக உள்ளத்தைத் தேக்கி நிறுத்தி வைத்திருந்த செண்பகம், பாண்டித்துரையின் வேண்டுகோள் அனுமதியின் பேரில் உள்ளே வந்தாள்; வந்தவளைப் புலியைப் பார்ப்பது போல லட்சுமிக்குட்டி பார்த்தாள்.

"யாரம்மா நீ?"

லட்சுமிக்குட்டி வார்த்தையாகச் சொன்னாள்; ஆனால் செண்பகத்தின் கண்கள் இதே கேள்வியைக் கேட்டது, "யார் நீ?" என்று. செண்பகம் அமைதியாக பதில் சொன்னாள்.

"நான் யார் என்பது பாண்டித்துரை ஜமீன்தாருக்குத் தெரியும். என்னை இங்கே அனுப்பினார்"

"என் அனுமதியில்லாமல் இங்கே வரக் கூடாது. இவருக்குப் பைத்தியம்."

"வரக்கூடாது என்றால் போய் விடுகிறேன்." செண்பகத்தின் நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது.

பாண்டித்துரை சொல்லி இருக்கிறார். தவறிப் போய் கூட முத்தையன் பக்கம் நெருங்கக் கூடாது; பேசக் கூடாது என்பதாக. அந்தச் சொற்கள் வேலியாக நில்லாது போனால், செண்பகம் மனம் பதைக்கிறதே, துடிக்கிறதே, முத்தையன் வெற்றி வீரனாக வந்தவனை நெருங்கிப் பாராட்ட வேண்டுமென்று! சரக்கொன்றை மரத்தடியில் கண்ணுக்கு மையிட்ட அதே தினம்—பொங்குமாங் கடல் போல இன்பம் பொங்கிற்றே – அந்தக் காட்சியின் நினைவலைகள்-அவள்மனசிலே கொந்தளித்து கொண்டிருந்தன;

அவள் ஆசையே உருவாகி கண் வழியே பார்வை யெனும் ஈட்டியால் முத்தையனைத் துளைப்ப வள் போன்று பார்த்தாள். அந்தப் பார்வைக்கு எப்பொருளும் காணுத வனுக முத்தையன் இருந்தான். அவன் பார்வை முழுவதும் லட்சுமிக்குட்டியின் கண்ணின் அசைவில் இருந்தது.

"போம்மா, இங்கே நீ வரக் கூடாது."

"இல்லையம்மா, எனக்கு மகாராஜா உத்தரவு, இங்கே வரவேண்டும் என்பதாக. அவர் வந்ததும் போய்விடுகிறேன்."

"நீ போகிருயா? இல்லை, உன்னை நான் பிடித்துத் தள்ளட்டுமா?"

செண்பகத்தின் உள்ளம் கொதித்தது. அவளைத் தள்ளுவதாமே?

பாண்டித்துரை அப்போதுதான் வந்தது போல, "தங்கச்சி, என்ன காரியம்? அடடே! லட்சுமி உன்னிடம் சொல்லவே இல்லையே. இதுதான் செண்பகம். செண்பகம், இதுதான் மலையாளத்து லட்சுமி" என்று பரஸ்பரம் அறிமுகம் செய்வதாக நடித்தார். இரண்டு எரிமலைகள் அல்லது இரண்டு மலைப்பாம்புகள் ஒன்றை ஒன்று விழுங்கிக் கொல்ல நினைப்பனபோல அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அண்ணு! இது என்ன செய்கை? இவளை உடனடியாகப் போகச் சொல்லுங்கள். யாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு இவள் வரலாம்?"

திருச்சி எழுத்தாளர், வாரியார் இருவரும் சொல்லி வைத்தாற் போல அவ்வமயம் அறைக்குள் வந்தனர்.

"ஆகா, நல்ல சமயம் வந்தீர்கள். கேளுங்கள் வாரியார் ஐயா, நீங்களே கேளுங்கள். என் இஷ்டம் போல சிகிச்சைக்கு எதுவும் செய்யலாம் என்று சொன்னவள் என் தங்கை லட்சுமிக்குட்டி. இப்போது யார் அனுமதியைக் கேட்டு செண்பகம் வந்தாள் என்று கேட்கிருளே. ஒருவேளை நான் கனவில் அனுமதி பெற்றேனே? பெண்கள் பேச்சை மாற்ற மாட்டார்கள் என்பதை அறிவேன். ஐயா, வாரியார் ஐயா, உங்களுக்கு நினைவிருக்கிறதா?"

"லட்சுமிக்குட்டியின் மலையாளத்து வீட்டிலே ஒரு தினம் நீங்கள் அனுமதி பெற்றீர்கள். ஏன் லட்சுமி நீ கொடுக்கவில்லை..."

அவள் கோபத்திலிருந்த முகத்தைச் சற்றுத் தணித்தாள்.

"ஏனய்யா திருச்சி எழுத்தாளரே! தங்கள் நினைவில் இருக்கிறதா?"

"லட்சுமி சொன்னவைகள் நினைவில் இருக்கின்றன. 'என்னிடம் எதையும் கேட்க வேண்டுவதில்லை. இது உறுதி' இப்படி ஒரு வரி சொன்னது உண்டு. 'பின்னர் தங்களுடைய பரிபூர்ண உரிமையாக எல்லாவற்றையும் இவர் குணமடையச் செய்யலாம். என்னுடைய அனுமதி வேண்டுவதில்லை' என்றும் லட்சுமிக்குட்டி சொன்னது உண்டு."

"அப்படியானல் உரிமையும் சொந்தமும் கொண்டாடும் லட்சுமி மறந்துவிட நீங்கள் இருவரும் அந்நியர்கள் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனக்குக் கூட நினைப்பு இருக்கிறது. நான் லட்சுமியுடைய வார்த்தையைக் கேளாமல் எது வேண்டுமானலும் செய்யலாம்; செய்த பின்னர் சொல்லலாம்; என்ற எண்ணத்தில் செய்து விட்டேன். லட்சுமியின் மனம் புண்படும் காரியத்தைச் செய்தது தவறு. செண்பகம், நீ போய்விடு. அவர்கள் எக்கேடு கெட்டால் உனக்கென்ன?" என்று தொட்டிலையும் ஆட்டிக் குழந்தையையும் கிள்ளுவார்களே, அந்தக் கைங்கர்யம் செய்தார் பாண்டித்துரை.

மறுகணம் செண்பகம் நின்ற இடம் காலியாக இருந்தது. அவள் உடல், உள்ளம் இரண்டையும்

தி பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,348

மேற்கொண்டு நிர்மாணிக்கும் கதிர்கள்: 3,472

★

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலை மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களை
விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் & ரங்கசாமிநாயுடு ஸன்ஸ் கம்பெனி

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுண்டன் பேனா, சிலேட் பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. **2345**

S. சந்தோஷ நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதறாஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

கட்டுப் படுத்திக் கல்லாக்கி நகர்ந் தாள்.

வாரியார், "லட்சுமிக்குட்டி, இது நல்லதில்லே. முத்தையன் நினைவு பெற அவள் இங்கே மருந்தாக இருக்க வேண்டும். ஆதிக் கதைகள் சிறிது சிறிதாக நினைவூட்ட வேண்டும். முத்தையன் ஒவ்வொன்ருகக் கேட்டபடியே பல தினங்களில் சிறு நினைவு ரேகை அடைவான்." என்று வாய் மூடு முன் அந்த அறைக்குள் மான்குட்டி ஒன்று துள்ளியது.

அதுவும் பாண்டித்துரையின் ஏற்பாடு. மான்குட்டி மிரள மிரள விழித்தபடி ஓடி ஒதுங்கி நின்றது.

"ஐயோ, பித்துப் பிடிக்கும் போல இருக்கிறதே" எனக் கண்ணீர்உகுத்தாள் லட்சுமிக் குட்டி.

ஒருநாள் ஆயிற்று, அவளேச் சமாதானம் செய்ய. மான் குட்டி வந்த மறுதினம் மங்கை வந்தாள். மானேக் காட்டி, மங்கை செண்பகத்தைக் காட்டி நினைவை இழந்தவனே நினைவூட்ட வைத்தியம் செய்தனர்.

'செண்பகமும், முத்தையனும்!' நெருப்பும் பஞ்சும் அடிமடியில் கட்டியது போல் லட்சுமிக் குட்டி துடித்தாள்.

மான் பார்த்து, மான் விழியாள் பார்த்து,மயங்கிய அவன் அறிவிலே சிறு சிறு சலனங்கள் அலே பாயும். பின்னர் ஓய்ந்துபோம். உணவுக்கும், உறவுப் பேச்சுக்கும் லட்சுமிக் குட்டியின் தயவு படிப்படியாகக் குறைந்து யார் வேண்டுமானுலும் உணவு கொடுக்கலாம் என்ற நிலைமை வந்தது.

செண்பகம் புதிராகவும் புதுமையாகவும் இலங்கினுள். முத்தையனேத் தனிமையில் அழைத்துச் சென்று மானும், தானுமாக செண்பகம் பழைய கதைகளேச் சிறுகச் சிறுகச் சொல்லும் பணியில் ஈடுபட்டாள். சொன்னுல் புரியும் அறிவு வரத் தொடங்கிற்று.

மான் குட்டியும் செண்பகமும் சேர்ந்தே காண்பார்கள். அவனே மாற்றும் பணியில் ஈடுபட்டாள் செண்பகம்.

ஒரு தினம்.

மான்குட்டியின்றி வந்த செண்பகத்திடம், "மான் குட்டி எங்கே?" என்ருன்.

அவள், 'புலியடித்தது' என்ருள். அவன் நெஞ்சிலே இருந்த அதிர்ச்சி நினைவிலே தாக்கியது.

மறுநாளும் "மான் குட்டியை எங்கே?" என்ற கேள்வியும், "புலி கொன்றது" என்னும் பதிலும் பரிமாறப்பட்டன.

"புலி கொன்ருல் அதையேன் கொல்லக் கூடாது?"

இப்படியே சில நாள் சென்றது.

"யார் புலியைக் கொல்வது?" என்று அடிக்கடி கேட்பாள் செண்பகம்.

முத்தையனுக்கு மெதுமெதுவாகத் தான் இருக்குமிடம், பழக்கமுள்ள பங்களா என்றறிந்தான். பாண்டித்துரையைக் கண்டதும் பயமல்ல, மரியாதை வந்தது. யாரைக் கண்டாலும் "புலியை நீங்கள் ஏன் கொல்லக் கூடாது? நீங்கள் கொல்லக் கூடாதா?" என்றே கேட்கத் துவங்கினுன். வர வர அவன் மூளேயில்

புலியின் குணம், அது மானைக் கொண்டு போய் விட்டது, அம் மான் செண்பகத்தின் மான் என்ற நினைவுக் கோவைகள் தொடர்ந்தும் தொடர்பற்றும் அறுந்தும் அணைந்தும் இணைந்தும் தோன்றும். படிப்படியாக ஜமீன்தார் வீட்டுச் சூழ்நிலை மாற காஸ்மீஸ்வரத்து வீட்டுக்கே செண்பகம் முத்தையனை அழைத்துச் சென்றாள். வாரியார் உடன் சென்றார். பாண்டித்துரை எப்போதாவது போவதும் உண்டு. லட்சுமிக்குட்டி மட்டும் தன்னந் தனிமையாக இருந்தாள். அவள் மனம் பொறுத்துக் கொண்டது.

"அண்ணா! அவர் மனம் மாறியதும் எங்கள் திருமணம் நடக்க வேண்டும். நாங்கள் மலையாளம் போய் விடுவோம்."

"வாரியார் பரிபூர்ண சுகம் என்று சொன்னதும் இதே குற்றாலத்துக் கோவிலிலே திருமணம், முத்தையன் திருமணம் நிகழ வேண்டும்."

"அண்ணா, நான் உடன் பிறந்த தமையனிடம் பேசுவதாக வைத்துக் கொள். என்னுடைய திருமணத்திற்கு இடையூறாக எது நடந்தாலும் நடத்துபவர் எவரோ அவரைக் கொன்று விடுவேன்."

"அவசியம் கொன்றுதான் ஆக வேண்டும். ஆனால் ... "

"என்ன ஆனால் ... ?"

"ஒரு வேளை முத்தையன் மறுக்கிறான், மறுக்க முடியுமா? முடியாது. ஏதோ மறுத்தால் என்ன செய்வது? நாம் அதையும் யோசனை செய்யலாம்."

"அவர் மறுத்தால் அதற்காக நான் வருந்தவில்லை. அவர் மனதார என்னை மணக்கும் நாள் வரை காத்திருப்பேன். என்னைத் தவிர எவளை மணந்தாலும் அவள் செத்துப் போவாள். என் கையால் அவர் மனைவி சாவாள்."

"சரியான முடிவு தான்."

பாண்டித்துரைக்குப் புரிந்து விட்டது. முத்தையன் தெளிந்து மனிதனாக மாறுவதை விட பைத்தியமாக இருப்பது மேல். நலம்! அவன் ஆயுள் முழுக்க பிரம்மசாரியாக வாழ வேண்டும். அல்லது லட்சுமிக் குட்டியோடு வாழ வேண்டும். இதற்கு அப்பால் எவளை மணந்தாலும் மணந்த பெண் பிணமாவாள் என்பது உறுதி. பழிவாங்குவதிலும் உள்ளத்து உணர்ச்சியை ஒளிப்பு மறைப்பின்றி சொல்வதிலும் லட்சுமிக்குட்டி துணிவுடைய பெண். ஆக நடப்பது நன்மையாக இருந்தாலும் நடக்கப் போவது தீமை!

"என்ன யோசிக்கிறீர்கள் அண்ணா. இன்று காஸ்மீஸ்வரம் அழைத்துப் போக வேண்டும். அவரைப் பார்த்து பதினைந்து நாள் ஆகி விட்டதே?"

"ஐயோ, முத்தையன் இன்னும் பத்து நாளில் குணமடைவான். அவன் கிராமத்து ஆட்கள், நண்பர்கள் ஒவ்வொருவராக அடையாளம் அறிகிறான். 'அம்மா எங்கே?,' என்று நேற்று கேட்டானும். செண்பகம் பொய் சொல்லி இருக்கிறாள் பாபவிநாசம் போயிருப்பதாக. அங்கே அவன் சித்தி வீடு இருக்கிறது."

"நான் செண்பகத்தையே பார்க்க வேண்டும்"

"அவளை இங்கேயே அனுப்புகிறேன். நீ பேசிக் கொள்ளலாம். ஆள் அனுப்பட்டுமா?"

"நான் அங்கேயே போய்ப் பார்க்க வேண்டும்."

"அதுவும் சரி தான். அப்படியானால் இந்த வினாடி முதல் உங்களுடைய திட்டங்களில் நான் தலையிட மாட்டேன்."

"நீ வஞ்சகன் அண்ணா! முத்தையனை செண்பகமே மணக்க வேண்டும் என்பது உன் திட்டம். திட்டம், திட்டம். முக்காலும் இது உண்மை."

"என் மனதிற்குள் என்ன இருக்கிறதென நீ கண்டு பிடித்து விட்டாய்! செண்பகம் ஒரு தினம் கூட என்னை 'அண்ணா' என்று அழைக்கவில்லை. அந்த உரிமை உனக்குத்

தந்ததற்கு நீதந்த பரிசு வஞ்சகன்!''

இதுகாறும் இவர்கள் பேச்சைக் கேட்டு கொண்டிருந்த ஸ்ரீமதி பாண்டித்துரை, "ஆதியில் சொன்னேன். பெண்களுக்கு உதவி செய்யப் போனால் எப்போதும் சந்தேகம் கொள்வார்கள். நன்றி காட்ட வேண்டிய சமயம் கொன்று காட்டுவார்கள். உங்களுக்கு—உள்ளத்திலும் உறுதியிலும் உயர்ந்தவர்களுக்கு இந்தப் பட்டம் போதாது! இன்னும் கொடிய வார்த்தைகளை மாலை மாலையாகப் போட்டால் என் மனம் குளிரும்'' என்று சூடு கொடுத்தாள்.

"நீயும் அதே பெண் வர்க்கத்தின் பிரதிநிதிதானே. இப்பொழுது நீ பேசுவது மட்டும் நியாயமா? நீதியா? லட்சுமி சொல்லி விட்டுப் போன வார்த்தைகளை நீ நெருப்பிலே தோய்த்து நெஞ்சிலே குத்தி விட்டாய்!

தம்பதிகளுக்குள் வாக்குவாதம் வந்ததால் லட்சுமி சிறிது கலங்கினாள். மதியுடைய பாண்டித்துரையின் மனசு உத்தமமானதா என்ற கேள்விக்கு விடை கிடைக்காமல் இருக்கும் வேளை.

"இங்கே அத்தான் வந்தாரா? என் வீட்டில் காணவில்லையே?" என்று பரபரப்பும் பயமும் பீதியும் நிறைந்த தோற்றத்தோடு செண்பகம் நுழைந்தாள்.

"முத்தையனைக் காணோமா?" பாண்டித்துரை மிரள மிரள விழித்தார்.

"சண்டாளி உன் சாகசம்!" என்றாள் லட்சுமி.

"நிஜமாகக் காணவில்லை. அவரைத் தேடுங்கள், மகாராஜா. வாரியார் ஐயா, ஓடுங்கள், ஓடுங்கள்'' என்று நெருப்பில் நிற்பவளாக அழுது புலம்பித் தவித்தாள்.

முத்தையன் எங்கே ... ?

அத்தியாயம் 22.

அன்னை மறைந்தாள்! அக்கினி குளிர்ந்தது!

முத்தையனுக்கு நினைவு வந்தது; சுவாதீனம் இழந்த வாழ்க்கை அவனுக்குக் கனவாக இருந்தது. செண்பகம் சொல்லிவந்த சம்பவங்கள், ஒவ்வொன்றும் அவன் மனத்தில் அலை அலையா தாக்கிற்று; நினைவுக்குமிழிகள் முகிழ்த்து மதியில் பேசிற்று. மதிக்கும் மனத்திற்கும் தொடர்பற்று அழிந்துபோன இணைப்பு மீண்டும் கூடிற்று.

செண்பகம் தன்னை மரமாக்கிக் கொண்டாள்; தன் இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டாள்; ஆசையை நிராசையாக்கிப் பதுமையாக நடந்து கொண்டாள்.

இன்னும் இரண்டு நாள் போக வேண்டும். முத்தையன் பழைய முத்தையன் ஆகிவிடுவான். அடிக்கடி, நடக்கக் கற்ற குழந்தை எழுந்து வேகமாக ஓடுவது போன்று, அவன் வீட்டுக்கும் தோட்டத்துக்கும் நடந்து கொண்டிருந்தான்; நடைமுறைகளை நினைந்து கொண்டிருந்தான்.

மாடு 'அம்மா' என்று கத்திற்று.

முத்தையன் நினைவில் 'அம்மா' என்ற அன்புத் தெய்வம் சலனமாயிற்று.

'அம்மா அம்மா' என்று கதறிக் கொண்டு குடிசைக்குள் வந்தான். வீடு சூன்யமாக இருந்தது. அம்மா எங்கே போயிருப்பாள்?

"செண்பகம்! அம்மா எங்கே?"

அவள் தலையிலே ஆயிரமாயிரம்

விஷப் பாம்புகள் ஊர்ந்தன; கொடிய உஷ்ண ஜ்வாலையின் நாக்குகள் வாயைப் பிளந்தன; திக்குத் திகந்தம் எங்கும் சூன்யம்.

"அம்மா எங்கே?"

"அம்மா தானே? அம்மா அருவிக்குப் போயிருக்கிறார்கள்."

"நீ, நீ தானே என்னை புலி வேட்டைக்குப் போகச் சொன்னாய்?"

"ஆமாம்."

"அம்மா வருமுன் புலியை வேட்டையாடி, உன்னுடைய அருமை மான் குட்டியைத் தின்றதே, அப் புலியைக் கொன்று வரட்டுமா?"

'பளிச்'சென அவன் மனத்தில் பழைய மயக்கம். அருவிக் கரைக்கு மேலே பாறை மீது அமர்ந்து கண்ணுக்கு அஞ்சனம் தீட்டியது; இருவரும் இதயம் நெகிழ, நெஞ்சோடு நெஞ்சம் கலந்து வானத்திலும், வானத்துக்கு அப்பால் கோளங்களிலும் மிதந்தது நினைவில் வட்டஞ் சுற்றியது.

முத்தையன், பழைய முத்தையன் ஆகிவிட்டான். அம்மா வருமுன் காட்டுக்குள் போக வேண்டும்!

"செண்பகம்"

அவளது தாமரை மொட்டு போன்ற இரு கையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டான். மென்று விழுங்கிவிடும் கண்கள் தின்று சுவைக்கத் திட்டமிட்டவை போன்று திகைத்தன. மிரளமிரள பட்டுப் பூச்சி போன்ற இமைகள் இமைக்கப் பிறந்தன.

உண்மையை உமிழ அவள் மனம் உழன்றது. சொன்னால் என்ன தீமை பயக்குமோ? திகைத்தாள்; திருடியாக விழித்தாள்; மலைப்புக்குள் ஆழ்ந்தாள்.

"நீங்கள் இங்கே இருங்கள். என் வீட்டிற்குப் போய் காப்பிப் பொடி கொண்டு வருகிறேன்."

"வேண்டாம். அம்மா வந்து விடும்."

செண்பகம் நெருப்புக் குண்டத்துள் விழுந்த புழுவாகத் துடித்தாள்.

"ஐயோ, முத்தையன் புலி வேட்டைக்குப் போகிறனாம்! அவனை எவ்வாறு தாயற்ற அநாதையெனச் சொல்லித் தடுப்பது? யார் சொல்வது? சொன்னால் என்ன நேரிடும்? தென்காசி ரெயில்வே ஸ்டேஷனில் சுவாதீனம் இழந்த அவன், பெற்ற தாயைத் தள்ளினன்; தாய் மனம் உடைந்து அதிர்ச்சியால் இருதயம் நின்று உலகை நீத்தாளே! அக்காட்சியைச் சொல்வதா? எந்த முகத்தோடு அவனிடம் சொல்வது?"

"அத்தான் நீங்கள் குளியுங்கள். ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்."

வெந்நீர் எடுத்து வைத்தாள். அவன் குளிக்கு முன்னதாக தாய் தந்தை வழியே வாரியாரை, பாண்டித்துரையை யாரையோ ஒருவரை வரச்சொல்ல வேண்டும். இடை வெளி நேரம் தேவை. தனிமையில் அவனைவிட்டு மின்னல் துவண்டு ஓடுவதைப் போல் ஓடினள்.

மின்னல் பிரிந்து ஒளி கக்கியதும், பன்மடங்கு இருள் கவ்வுமே அது போன்று ராமையா நுழைந்து விட்டான். ராமையா எதிர்பார்த்த நேரம் கிடைத்தது.

"என்ன தம்பி, சௌக்கியமா?"

மிரள மிரள விழித்தான் முத்தையன்.

"என்ன அண்ணே! 'தண்ணி' அதிகமா? எனக்கு என்ன? என் உடம்பு கல் குண்டாக இருக்கிறது."

"இருக்கட்டும், மகாராஜனுக இருக்கட்டும். நீ பிழைத்ததே மறு பிழைப்பு."

முத்தையன் இதயத்தின் ஓர் இடத்தில் அந்தச் சந்தேகம் மின்னிக் கொண்டிருந்தது. தான் என்னவோ அவஸ்தைக்குள்ளாகியதாக எண்ணம்; ஆனலும் சுவடு பதியாத எண்ணம்.

"நான் புலி வேட்டைக்குப் போகிறேன். அம்மா வந்துவிடும். செண்பகம் மான் குட்டி எவ்வளவு அழகு தெரியுமா? அம்மாவிடம் நான் போவதைச் சொல்லாதே."

"அம்மா தான் இறந்து விட்டாளே."

வானமும் வையமும் பிளந்து அவனை விழுங்கிற்று. "அம்மா இறந்துவிட்டாளா?" என்று கதறினன். அவன் குரலுக்கு எதிரொலியைக் காண அவர்கள் வீட்டுப்பசு 'அம்மா' என்றது. ராமையாவைத் தாவிப் பிடித்தான்.

"ஆமாம். சுடு காட்டில் வைத்தாயிற்று."

மறுகணம், முத்தையன் வீட்டுக்குள்ளே இல்லை. அவன் தலை தெறிக்க தன்னைப்பெற்று வளர்த்து, பாசத்தையும் பரிவையும், அன்பையும், ஆதரவையும் ஆசைக் கனவையும் ஆதுரத்தையும் கொட்டி வளர்த்த கோவிலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான்.

குட்டி போட்ட பூனையாக வீட்டுக்குள் சுற்றிச் சுழன்ற முத்தையன் குதிபோட்டுக் கொண்டு ஓடுகிறான். அவனைத் தொடரவும் நினைப்பில்லை. தைரியம் இல்லை. பூனைபோல மெதுவாக நகர்ந்து விட்டான், ராமையா.

"ஏனம்மா, நான் உன்னிடம் சொல்லாமல் புலி வேட்டைக்குப் போகிறேன் என்று கோபமா? சும்மா உத்தரவு கொடு."

அவன் பழைமை நினைவுக்கும், புதுமைக்கும் ஊடாகத் தட்டுத்தடுமாறி உழன்ற மனத்தோடு சுடுகாட்டை நோக்கிவந்தான்.

காலிலே பழைய எலும்புகள் தட்டுப்பட்டன; ஒரு சில கோரமான ஈறு வரிசை மண்டை ஓடுகள்; குத்துக்குத்தான சிறு புதர்ச்செடிகள்; குழந்தைகளை மூடி மேடிட்ட மண் திட்டுக்கள்; எல்லாம் மிதிபட்டன. அவன் முழு மூச்சும் ஏக்கமும் தாயைக் காணத் துடித்தன.

சுடுகாட்டிலே பிணத்துக்குப் பஞ்சமா? ஏதோ ஒரு சடலம் புகை மண்டி எரிந்து கொண்டிருந்தது. உள்ளே அடுக்கிய எரு மூட்டைகள் நன்கு பற்றி பூசப்பட்ட ஈரமண் ஓட்டை வழியாக செந்தீ நாக்குகளாக எட்டிப் பார்த்தன. தீயிலே வேகும் தாயின் உருவம்; அவனை உலுக்கிற்று. உடல் உள்ளம் எல்லாம் அனலுக்குள் வேகின்றன. எண்ண முடியவில்லை.

காற்றும் சுருதி கூட்டி தீயின் சுழலைச் சீண்டிற்று.

ஓடிவந்த முத்தையன் "அம்மா என்னை மன்னித்துவிடு. நான் உன்னிடம் சொல்லாமல் போய்விட்டேனே? என்மீது கோபமா?" என்று கதறியபடியே சிதை மீது விழுந்தான்.

பாண்டித்துரை "முத்தையனைக் காணவில்லையோ?" என்று திடுக்கிட்டபோது செண்பகம் "ஆமாம் காணவில்லை. எங்கே போனரோ? தாயார் நினைப்பு வந்து கேட்டார்; நான் தினறித் திக்குமுக்காடிப் போனேன். அவரைத் தேடுங்கள்; எங்கே போனரோ? ஒரு வேளை அவர் மீண்டும் மலைமீது புலி வேட்டைக்குப் போயிருக்கலாம்" என்று அழுதாள்.

இதுகாறும் கோபமும் குரோதமும் புழுங்கி வெந்து கொண்டிருந்த லட்சுமிக்குட்டி "அண்ணு நான் திட்டியதை மறந்து அவரைத் தேடுங்கள். எங்கேயாவது போய்த் திண்டாடுவார். இவளை நம்பி நீங்கள் ஒப்புவித்த போதே நினைத்தேன்" என்று நிறுத்தினுள்.

இரு பெண்களுக்குள்ளும் வாக்குவாதம் வரக்கூடாது. செண்பகத்தின் திடீர் கோபம் எந்த எல்லை வரை போகும் என்பதை அறிவார்; ஆண்பிள்ளைக்கு வரும் கோபத்தையும் எதிர்த்துத் தாக்கும் கோடரி அவள்.

"செண்பகம் நீ நல்ல பிள்ளையாக முத்தையன் வீட்டில் போய் இரு. உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்."

செண்பகம் மறுகணம் நடந்தாள்.

"அவரைத் தேடிப் போக வில்லையா? வாருங்கள், இந்த ஊருக்குள் புகுந்து தேடலாம். எங்கே போனலும், நாம் தேடலாம் அண்ணு."

"நான் அண்ணுவும் இல்லே. நீ தங்கையும் இல்லே. என்னைத் தொல்லே செய்யாதே."

பாண்டித்துரையின் உற்சாகம் நிறைந்த மூளேயும் சோர்வு பெற்றது. யுக்தியும் குயுக்தியும் கிளேக்கும் மன சிலே இருள். இருள், ஒரே பயங்கர இருள். அவருக்கு ஆழ்ந்தும் தனித்தும் யோசிக்கும் அவகாசம் தேவை. யார் எதைச் சொன்னுலும் முத்தையன் குணமாக வேண்டும்.

"நட்டாற்றில் கைவிடத்தானு நம்பிக்கை பேசி அழைத்து வந்தது"

"நான் வஞ்சகம் நிறைந்தவன். அன்பற்ற அற்பன். நம்பிக்கைத் துரோகி."

ஒவ்வொரு சொல்லும் ஈட்டியாக லட்சுமிக்குட்டியின் மனசிலே ரத்தம் பாயத் தாக்கிற்று. அவள் சொல்லிய போது இருந்த ஆத்திரம் இப்பொழுது பிரதிபலித்தது.

"ஐயோ! பெண்ணுகப் பிறந்த என்னேப் புண்ணுக்காதே. நான் உயிரோடு இருப்பது அவருக்காக. அவர் பிழைக்க வேண்டும். அவரிடம் அன்புப் பிச்சை பெற வேண்டும்."

"நான் குறுக்கே வரவில்லே."

கைபிடித்துக் கண்ணீர் சோர விழியால் கெஞ்சி நின்ருள் லட்சுமிக்குட்டி.

"நீ வராவிட்டால் என்னே இழுத்துக்கொண்டு போய் அருவியிலே நின்று பொங்குமாங்கடல் கசத்துள்ளே தள்ளிக் கொன்றுவிடு. அதுதான் நீ செய்யும் கைம்மாறு."

"அப்படிச் செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றும் வரை என் சொற்படி வீட்டுக்குள் இரு."

பாண்டித்துரையின் மூளேயில் வினுவும் விடையும் மோதி அயர்ந்தன. அவன் வாசலுக்கு வந்தபோது நாலேந்து பேர் ஒரு மொட்டை வண்டியில் முத்தையனேப் படுக்க வைத்து பங்களாவிற்குள் இழுத்து வந்தனர்.

"என்ன ?"

சுடுகாட்டு நாவிதன், "ராஜா! உங்களிடம் ஒரு சேதி" என்று தனித்து நின்று குறுகிச் சொன்னுன்.

"இங்கே அனுமதிக்க முடியாது. காஸ்மீஸ்வரம் வீட்டுக்கே முத்தையனேக்கொண்டு போங்கள்."

வண்டியை நோக்கி லட்சுமிக்குட்டி அலறியபடி ஓடினுள்.

"அட அம்மா! நீ கத்தாதே, அவருதான் 'அம்மா அம்மா'ன்னு யார் சிதையையோ கட்டி தீ வெப்பம், சிதை வெக்கை தாங்காமல் மூர்ச்சையடைந்தார். நீ வேறே கொன்றுவிடாதே" என்ருன் நாவித கோவிந்தன். மொட்டை வண்டியிலே மல்லாந்து பீமசேனனேப் போல கிடந்த முத்தையன் உடலுக்கு அடியிலே ஒருசில குருத்து வாழை இலேகள் பரவலாக பரப்பப் பட்டிருந்தன.

வண்டி, பங்களாவைவிட்டு காஷ்மீஸ்வரம் வீதிக்குத் திரும்பியது.

லட்சுமிக்குட்டி "அண்ணு! நானும் போகலாமா?" என்று கெஞ்சினுள்.

"என் அனுமதி வேண்டாம். நீ போனுல் அவன் மனம் இன்னும் பேதலிக்கும். இது நான் சொல்லும் முடிவு; உனக்குப் பிடிக்காத முடிவு; போகிறதானுல் உன் இஷ்டப்படி போ."

மந்திரத்தால் கட்டுண்ட நாகப் பாம்பு படம் எடுத்தும் கடிக்காமல் ஆடுமே அப்படி இருந்தது அவள் பார்வை.

"அட அண்ணு, உன் நெஞ்சம் கல்லா?" என்ற சொற்களே அந்த பங்களாவின் சுவர்கள் கேட்டன; பளிங்கு கற்கள் கேட்டன, ஆனுல் பாண்டித்துரையின் செவிகள் கேட்க மறுத்தன.

வாரியார் ஓட்டமும் நடையுமாக வண்டியைத் தொடர்ந்தார்.

ஊருக்குள் முத்தையன் அடைந்த மூர்ச்சை பேச்சாகப் பரவிற்று. அதே சமயம் லட்சுமிக்குட்டி தன் அறைக்குள் தலேக்குமேல் ஓடும் வெள்ளத்துள் அமிழ்ந்தவள் போன்று அமிழ்ந்து கிடந்தாள். அவள் மூச்சிலே தெம்பும் திராணியும் இல்லே.

(அடுத்த இதழில் முடியும்)

Just from the Press !

Order for your Copy !

THE ELITE DICTIONARY

English-English & Tamil 25,000 English Words with Tamil Meanings

With a foreword by the Vice Chancellor of Madras University

Very Large size

Very cheap price

A boon to the Students !
A companion to the teachers !
A guide to the translators !
A help-mate to Cross-Words puzzle Competitors.

Price Rs. 10.

PUBLISHERS :

M. Duraiswamy Mudaliar & Co.,

PRINTERS & BOOK-SELLERS,

1/1, Malayaperumal Street, Madras-1.

Pulavar Agarathi	...	...	...	Rs. 3-0-0.
Manaiviyin Kadamai	...	...	...	Rs. 2-8-0.
Vazhvatharkku Vazhi	...	...	...	Rs. 2-8-0.
Perum Pugazum	...	...	...	Rs. 2-8-0.

Durai Tamil Agarathi Tamil-Tamil (in print)

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES
RING SPINNING FRAMES
DRAWING FRAMES
REELING MACHINES
FLY FRAMES
BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED:

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409 Telegrams: "TEXTOOLCO"

புயல்

-சுவாதி-

" இந்தா பிள்ளே! கலயத்தை தொடச்சுப் போடாதே! இரண்டு பருக்கை போட்டு வை. யாரானுச்சும், விருந்து வந்தா வடிச்சா கொட்டப் போறே!"

அறை வயிறு கூட நிரம்பியிராது; மாடசாமி ஒப்புக்குச் சொன்னான்.

"விருந்து போடக் காணாது. வெள்ளச்சியும் வீரனும் விழுங்காமெ, கண்ணை மூடிடிச்சுங்க. பாதி சாமத்திலே எளுந்திருச்சு கத்தினா, கொட்டி மூட வேணும்."

இல்லாத கொடுமையை வாய் விட்டுப் புலம்பித் தீர்த்துக் கொண்டாள் அங்கச்சி.

ஏதோ நீரும் சோறுமாக, இரண்டு 'மளர்' குடித்து விட்டு குறை வயிற்றை நிரப்பிக் கொண்டு தெரு வாயிலுக்கு வெற்றிலைப் பெட்டியுடன் போய்ச் சேர்ந்தான் மாடசாமி.

"ஏந்தே! இதிலே ரெண்டு புளகு வெத்திலை போட்டு வைக்கிறதுக் கென்னவாம்?" வாசலிலிருந்து குரல் கொடுத்தான் மாடன். ஐந்தும் பத்தும் அடுக்காக வேண்டும் அவனுக்கு.

வதங்கல் வெற்றிலையில் காரை சுண்ணத்தைத் தடவி, இரண்டு வெட்டுப் பாக்கையும் சேர்த்து எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள் அங்கச்சி.

கொண்டு வந்ததை வாங்கிக் கொண்டு வெகு அக்கரையாக விசாரித்தான்.

"ஏ பிள்ளே! நீ ரெண்டு கொரிக்கிறது தானே?"

அங்கச்சி 'உம்' கொட்டினாள். அவளைப் பார்க்கவே என்னவோ செய்தது, மாடனுக்கு.

"இந்தா, பாரு பிள்ளே! இப்பொவே உன் உடம்பிலே, அறுத்துப் போட்டா அறை தூக்கு கொழுப்புக் கூட ஆவாது. நாய் கடிச்ச எலும்புத் துண்டா பழு வேறிக் கிடக்குது. இப்படியே நீ பட்டினி கிடந்தால்...?"

மாடன் இவ்வளவு பேசினான்; எல்லாம் உபசார வார்த்தைகள் தான். சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வருவதற்கு? கலயம் காலி என்பது அவனுக்குத் தெரியாததல்ல!

ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளாதவளாய், உள்ளேசென்று விட்டாள் அங்கச்சி!

'சவுக், சவுக்' கென்று வெட்டுப் பாக்கை, பாக்கு வெட்டியால் "செதிள், செதிளா'கச் சீவி, வாயிலிட்டு மென்றபடி, அண்ணாந்து பார்த்தான் மாடசாமி.

ரசம் அழிந்து போன கண்ணாடியில் பிரதி பலிக்கும் பிம்பத்தைப் போல், தெளிவில்லாத வானத்தில் ஒரு பாதி மழுங்கிப் போய், வெண் மதி ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

மாடசாமி நினைத்தான்—அதற்குக் கூட தவழச் சக்தி இல்லை போலும்!

இன்றைக்கு மூன்று நாட்களாகின்றன. மூன்று நாட்களுக்கு முந்திய நாள்?— பௌர்ணமி! அன்று நிலவுக்கன்னி, பூரணமாய் பொலிவோடும் வனப்போடும், வானையே ஆட்சி செய்தாள்! ஆனால் இன்று... பழகித் தேய்ந்து, ஒளி மங்கி...!

அங்கச்சியின் நினைவு வந்தது அவனுக்கு. அங்கச்சி! அவள் கூட ஒரு நாள். பௌர்ணமி நிலவாய்த் தானே காட்சியளித்தாள்! வறுமையும் சோகமும் அவளை அன்று வாட்டிச் சாறு பிழியாத நிலை. தளதள

" யாருங்க பாடறது ?"

" பாகவதர் !"

வென்று கொடிக்காலில் விட்டிருந்த தளிர் வெற்றிலையாகத்தான் சுவை தந்தாள்.

இன்றைக்கு அந்த பவுஷ் குறைந்து விட்டது. தென்றலாகத் தவழ்ந்தவள் வாடையாக வீசத் தலைப்பட்டாள்! ஏன் ? எல்லாம் காலம் செய்த கொடுமை! இல்லை. காலம் என்ன செய்யும். எல்லாம் அவன் செய்த கொடூரம்! ஆம், அவனே தான்!

மனக்குளத்தில் கற்பனையின் பாசி படர்ந்து பரவியது.

வெள்ளைச்சிக்கு வயது ஆறு நிரம்பி விட்டது. ஆனாலும் பார்வைக்கு எப்படி இருக்கிறாள்? மூன்று வயது மதிக்க முடியாது. சூம்பிப் போன உடல், உலைவாயின் துருத்தி போல உப்பிப் போன வயிறு. மேடும் பள்ளமுமாய் இரட்டை மண்டை. அசுர உருவம்! பாவம்! பெண்ணாகப் பிறந்து விட்டது.

இத்தனைக்கும் காரணம் ?

அப்போது வெள்ளைச்சியை பிரசவித்து மாதம் மூன்றாகவில்லை. தாய்ப்பால் அற்ற குழந்தை தினைக் கொல்லை பூச்சாண்டியாகக் காட்சி அளித்தது. அடுத்து வந்தவன் வீரன்.

வெள்ளைச்சிக்கும் வீரனுக்கும் வயதில் வித்தியாசம் அதிகமில்லை. ஏதோ அவனும் ஒரு பிள்ளை! பிறந்த போதே எல்லோரையும் அழ வைத்து விட்டுப் பிறந்தான். ஆயிற்று—உருப்படிகள் இரண்டு!

மாடசாமிக்கு எல்லாம் புரிந்து விட்டது. வாழ்க்கையில் காளான் பூத்து துர்நாற்ற மெடுக்கத் தொடங்கி விட்டது!

"சை!" என்று தன்னைத்தானே வெறுத்துக் கொண்டான். கட்டுப் படுத்தப் படாத உணர்ச்சி காட்டாற்று வெள்ளம் தான். அது கரை புறண்டு ஓடும்போது பயிர் பச்சை என்று பார்ப்பதில்லை. எல்லாம் நாசம்!

வாயிலிட்ட பாக்கு கரைந்து விட்டது. கைவிரலில் வழித்து எடுத்த சுண்ணாம்பு உலர்ந்து போயிற்று. மடித்த வெற்றிலையை வாயில் போட்டுக் கொள்ளவில்லை.

மாடசாமி ஒன்றும் புரியாமல் உள்ளே நடந்தான்.

'முணுக், முணுக்' கென்று மின்னிக் கொண்டிருந்த அகல் விளக்கை, தூண்டிப் பெரிதாக்கி விட்டு, படுக்கையை விரித்துப் போட்டு உதறினான்.

ஆள் அரவங் கேட்டு விழித்துக் கொண்டாள் அங்கச்சி.

"என்னா, அங்கே ?"

"அட, ஒண்ணுமில்லே, படுக்கப் போறேன்."

"இங்கேயா?"

"ஆமாம் !"

"என்ன ஆமாம் கொட்டுறே! ஒரே புழுக்கம், உடல் வேகுது. பேசாமெ தெருத் திண்ணைக்குப் போ!"

அங்கச்சி உரிமையாகக் கடிந்து கொண்டாள்.

"மழை வந்தா?"

"மழை வந்தா, வர்ர தானே!"

மாடசாமி முகத்தில் ஈயாடவில்லே. அதற்கு மேல் பேசுவதற்கு என்ன இருக்கிறது? ஓலேப்பாயை சுருட்டிச் அக்குளில் அடக்கிக் கொண்டு தெருத் திண்ணேக்கு வந்து சேர்ந் தான் மாடன். அப்போது தான் நினேவுக்கு வந்தவன் போல், உச்சி மேட்டில் கையை விட்டுத் துழாவி ஞன். ஏதோ தட்டுப்பட்டது ஒரு துணுக்கு பீடி! ஒரு முறை எரிந்து பிறகு ஆபத்திற்கு வேண்டுமே என்று அணேத்து வைக்கப் பட்டி ருந்த அவனது சிறுவாடு அது!

பீடியைப் பற்ற வைத்து ஆத்திரம் தீர, ஒரு இழுப்பு இழுத்தான். புகை, கண்மூக்குத் தெரியாமல் உச்சி மண்டைக்கு ஏறியது. ஒரே எரிச்சல்!

வாழ்க்கையே எரிச்சல் எடுத்தது; எரிந்து எரிந்து வெந்து போய் விட் டது. எஞ்சியது சாம்பல்தான்.

ஆம். அங்கச்சியின் உடலில் எலும்பு இல்லே. சதைப் பிடிப்பு இல்லே. இருப்பதெல்லாம் எரிந்த சாம்பல்தான்!

"ஆவ்!"

நெற்றி மண்டையில், முட்டிக் கை யால் இரண்டு இடி இடித்துக் கொண்டான், அவ்வளவு வேகம்!

கட்டையைச் சாய்த்து கண்ணே மூடிஞன். எண்ணங்கள் நிழலாகப் பரவின.

அங்கச்சி முழுக வில்லே. மாதம் மூன்று. அடிவயிற்றில் 'சொரே' ரென்றது மாடசாமிக்கு.

எதையோ நினேத்துக் கொண்டு திடீரென்று தனக்குத் தானே சிரித் துக் கொண்டான்.

"இந்தப் பொண்ணுக்கு எதிலும் அசாத்ய கண்டிப்பு!"

முணு முணுத்தபடி புரண்டு படுத்தான் மாடன்.

நாதாங்கி அசைந்து ஓசை எழுப் பியது. தனக்குப் பின்னுல் நிழற் படம் விழுவதை உணர்ந்தான் மாடசாமி!

"என்ன, உன்னேத்தானே! கண்ணே மூடலியா?"

மாடசாமி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். எதிரே அங்கச்சி நின்றிருந்தாள்.

"இல்லே, பிள்ளே! உறக்கம் பிடிக்கலே"

"ஏனும்?"

"காத்து சிலுசிலுப்பு; நடுக்கல் எடுக்குது!"

பரிதாபமாக ஒலித்தது அவன் குரல்.

"போவட்டும், உள்ளே வந்து மறி..."

அங்கச்சி கருணே காட்டினுள்.

குமுறிக் கொண்டு வந்த பெரு மூச்சுகளே "உஸ், புஸ்" என்று விட்டபடி, உள்ளே போய்ச் சேர்ந் தான் மாடசாமி.

விடிந்த அன்றைக்கு வெள்ளிக் கிழமை. மூன்று கல் தொலேவில் உள்ள திருச்சம்பள்ளியில் வாரச் சந்தை. சத்த வண்டியில் 'கருவாடு' ஏற்றிக் கொண்டு போவான் மாட சாமி. அன்றைக் கொரு நாள் நல்ல வரும்படிதான்.

உச்சிப் பொழுதிற்கு, வியர்த்து வடிய வீடுவந்து சேர்ந்தான் மாடன்.

"அங்கச்சி, அங்கச்சி!"

அடுக்களேயில் சோறு ஆக்கிக் கொண்டிருந்தவள், விழுந்தேன், கெட்டேனென்று ஓடிவந்தாள்.

"ஏன் இப்படி வயித்தெரிச்சான் கோயிலாட்டும் அடிச்சுக்கிறே!"

கடுகு தாளியலின் வேகம், அவள் பேச்சிலிருந்தது.

"ஆமாம், பிள்ளே! சங்கதி கேட் டியா? பக்கத்து ஊரிலே, பட்ட ணத்து டாக்டர் ஐயா வந்திருக் காங்க."

அவன் சொன்னது, அவ்வளவு சுவாரஸ்யமாகப் படவில்லே அவ ளுக்கு. அங்கச்சி 'ச்சு' கொட்டி விட்டு உள்ளே திரும்பினுள்.

"ஏய், நில்லுதே! என்ன அப்படி ஒரே முட்டா உதறிப் போட்டே! வெவரம் புரியுமா உனக்கு?

அவரு நல்ல நல்ல மருந்தா கொடுக்கிறாராம் !''

"என்ன உளரிக் கொட்டுறே?"...

"கேளு, சொல்லுரேன், நம்மைப் போல புள்ளேகுட்டி பெத்தவங்களுக்கெல்லாம் இனி கஷ்டமில்லே! தெய்வம்போல வந்தாரு!" இதைச் சொல்லி விட்டு, மாடன் அரைமடியில் மடித்து, வைத்திருந்த பொட்டலம் ஒன்றை எடுத்து, அதிலிருந்த மாத்திரை பில்லேயை அவளிடம் கொடுத்தான்.

"என்னது"

"மருந்து"

"யாருக்காம்"

"உனக்குத்தான்!"

அங்கச்சியின் மோவாய்க்கட்டை தோள்பட்டை வரை நீண்டு ஒரு இடி இடித்தது.

"எனக்கென்ன, நோவா, நொடியா? இதை நீயே மெண்டு விழுங்கு!"

அவன் கொடுத்த மாத்திரையை 'தொப்'பென்று விசிறி எறிந்தாள் அங்கச்சி.

"ஏய், ஏய், என்னது, பிடிவாதம் பண்ணுரே, எல்லாம் காரணமாத்தான். பேசாமெ சாப்பிடு"

"ஊகும்"

"எல்லாம் நல்லதுக்குத்தான். இதை சாப்பிட்டா, பிறகு பிள்ளே குட்டின்னு பயப்பட வேணும்"

"அப்படியா?"

"ஆமாம், இது

கெர்ப்பத்தலட மருந்து.''

"ஆ, அடப்பாவி''

கொதித்துக் கொண்டிருந்த பால் குபீரென்று பொங்கி வழி வதைப் போல், கோபாவேசத்தில் வார்த்தைகள் சிதறின.

"அடக் கடவுளே! கருவைக் கொல்லச் சொல்றியா? பாவம் ஏழு சன்மத்துக்கும் தீராதே! எந்தப் பாவிமவன் கொடுத்தான். அவனுக்கு பிள்ளை குட்டி கிடையாதோ?''

அங்கச்சி அலறிப் புடைத்தாள். கையை 'நற நற' வென சொடுக்கி "இப்படியே போகவேணும்'' என்று சாபமாரி பொழிந் தாள்.

மாடனின் பாய்ச்சல் அவளிடம் பலிக்க வில்லை. வீசி எறியப்பட்ட மாத்திரையை எடுத்து, இடுப்பில் முடிந்து கொண்டு, வெளியே நடந்தான்.

மறுதினம்! பொழுது விடிந்ததா அல்லது விடியாமலே இருந்து விட் டதா? ஒன்றும் தெரியாது அங்கச் சிக்கு. அவள் அழுதகண்ணும் சிந் திய மூக்குமாக உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் பாய் விரிப்பில், வெள் ளைச்சி முக்க லும் முனகலு மாகப் படுத்துக் கிடந்தாள். நெற்றிப் பொட் டில் பத்து! இரவு பூராவும் காய்ச்சல்!— உடம்பு அன லாய் வெந்தது.

"ஏ, பிள்ளே! வைத்தியர் அய்யா வந்திருக்காரு!'' மாடன் நாட்டு வைத்தியர் ஒருவருடன் அவசர அவசரமாக உள்ளே நுழைந்தான்.

வைத்தியர் நாடி பிடித்துப் பார்த்தார். நாக்கை நீட்டச் சொன்னுர். கண் வண்டயத்தை பிதுக்கிப் பார்த்தார். பிறகு, செந்தூர பஸ்பத்தைத் தேனில் குழைத்து மூன்று வேளே கொடுக்கச் சொல்லி சென்று விட்டார்.

அன்றையிலிருந்து மூன்று நாட்களுக்கு விடாமல் காய்ச்சல் அடித்தது. மூன்றும் நாள் சற்று தேவலே. "உம் ஆங்...'' என்று முனகினுள் வெள்ளேச்சி.

அங்கச்சி இரண்டு டம்ளர் கஞ்சியை அவள் வாயில் ஊற்றினுள்; அதுவே குமட்டி எடுத்தது அவளுக்கு.

"அடி என் செல்வமே!'' என்றபடி அவளே எடுத்து ஆரத் தழுவினுள் அங்கச்சி. பாவம், பெற்ற மனம்! வெள்ளேச்சி அவள் தோளில் கிடந்தாள்

அப்போதுதான் அங்கச்சி அதைக் கவனிக்க நேர்ந்தது. வெள்ளேச்சியின் இரண்டு கால்களும்—?

வாடிப்போன முருங்கைக்காயைப் போல, கால்கள் இரண்டும் சூம்பிப் போய் துவண்டு கிடந்தன. இடது காலின் ஒரு பாதம்-குதியின் முட்டு உள்ளங்காலுக்கு சரிந்து விட்டது. பாதம் சற்றே பிறண்டு கோணலாய்—

அதற்குமேல் அந்தக் காட்சியை அவளால் பார்த்து சகிக்க முடியவில்லே. பொங்கி வந்த நீர் பார்வைக்குத் திரையிட்டது.

"ஐயோ சாமி!'' வாயிலும் வயிறிலும் 'லபோ, லபோ'வென அடித்துக் கொண்டாள் அங்கச்சி!

மூன்று நாளேய சுரம்,குழந்தையை முடக்கிப் போட்டு விட்டு, தன் வேலே இத்துடன் தீர்ந்ததென்று போய்ச் சேர்ந்தது.

அங்கச்சி வாய்விட்டுக் கதறினுள்.

"பாவி, எந்த வாயால் அன்னிக்குச் சொன்னியோ! பச்சைக் கருவைக் கொல்லச் சொன்னியே! பாவம் திருமா?''

மாடன் நிலே கொள்ளாது துடித்தான். உள்ளத்தில் எண்ணங்கள் முட்டம் போட்டன.

மாடன் கணக்குப் போட்டான். மூன்றில் ஒன்று—? அந்த ஒன்று வீணுகி விட்டது. வெள்ளேச்சி இனி வீண் சுமை! செல்லாக்காசு தான்.

இடையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அங்கே அந்த மாத்திரை!

ஒன்றை குறைக்க வேண்டி மாத்திரை கொண்டு வந்தான்-ஆனுல்? ஒன்று தானுகவே குறைந்து விட்டது.

பழக்கூடை சுமக்கும் கிழவியின் நினைவு வந்தது அவனுக்கு. கூடை நிறைய பழங்கள்! அத்துணையும் விலே போய் விடுகின்றனவா?

அதில் ஒன்றிரண்டு அழுகல்—தூக்கி எறியப்பட வேண்டியவை! ஒரு சில பாதி விலேக்குப் போவதே பெரிது! எல்லாம் நஷ்டம் போகத் தான் லாபம்.

மாடனுக்கு விடை கிடைத்தது. மக்கட்பேறு! எல்லோருக்கும் எளிதில் கிடைக்காத வரப் பிரசாதம்!

ஆண்டியானுலும்—அவன் பெற்றது ஒன்ருனல் என்ன? பத்தானுல் என்ன?—வேண்டாமென்று எவன் சொல்வான்?

அக்கிளில் செருகி வைத்திருந்த மாத்திரையை எடுத்து, எட்டிய மட்டும் விட்டெறிந்தான் மாடசாமி.

"அப்பாடா, விட்டது சனி''

அமைதியும் சாந்தமும் அவன் உள்ளத்தை ஸ்வீகரித்துக் கொண்டன. அக் குடும்பத்தில் நிலவிய புயலும் ஓய்ந்தது.

★

— கன்னி —

'புனலன்'

நிலவுப் புனலில் குளிக்கின்றாய்
நெடுவான் ஏறிப் பறக்கின்றாய்;
குலவும் மேகத் திரளூடே
கூடிக் கூடித் திரிகின்றாய்;
புலரும் காலைப் பொழுதைப்போல்
போதை மயக்கம் தருகின்றாய்;
தொலைவில் மின்னும் மீனோடு
தோன்றிச் சிமிட்டிச் சிரிக்கின்றாய்!

கிண்ணம் வழியும் மதுவைப்பார்!
கிறங்கும் விழியால் என்னைப்பார்!
கண்ணும் விண்ணும் கைகோக்க
மதுவில் முழுகிச் சுவையாயோ?
வண்ணக் கதவும் திறவாயோ?
வழியும் மதுவைத் தாராயோ?
எண்ணக் கடலில் சதிராடி
ஏக்கக் கலவை நல்காயோ?

நழுவி வருவாய் பெண்ணே, நீ
நாணங் கொள்ளல் என்னேடி!
புழுதித் தரைமேல் புரளாயோ?
புனிதக் கவிதை கேளாயோ?
அழுது சிவந்தக் கன்னம்போல்
அழகின் வானம் புலராமுன்,
விழியில் நிலவின் அமுதூற
வெறியைக் கிளற நழுவாயோ?





போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1.	அருப்புக்கோட்டை	To ராஜபாளையம்
2.	அருப்புக்கோட்டை	To தூத்துக்குடி
3.	விருதுநகர்	To பெருநாழி
4.	விருதுநகர்	To கடலாடி (Via) முதுகுளத்தூர்.
5.	மதுரை	To சாயல்குடி
6.	மதுரை	To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

எரி நட்சத்திரம்

'இருகூரான்'

பொறி வீழ்ந்தது!

" கமலீ...கமலீ..."

" ஏண்டி...?"

" நாளைக்கு, ஆத்துக்காரனோட ஊருக்குப் புறப்படற பெருமையிலே நீ எங்கேடியம்மா என்னிட்டே பேசப் போறே...?"

" இல்லைடியம்மா! ஏது வேணும்னாலும் பேசறேன்!"

" இப்படி வா. உன்னை ஒரு விசயம் கேட்கணும்னு நெனைச்சேன்"

" என்னது? கேளேன்!"

" இப்ப இப்படித்தான், ஆசையாப் பேசுவே, கேட்டால் மொகத்தை 'உம்'னு வெச்சுக்காதே!"

" சொல்லேன் சுசீ!"

" எதைச் சொல்ல...?"

" கணவனோட பழகறவ! இனித் தனிக் குடித்தனம் வைக்கப்போறே. ரவிக்கு சொத்து எதினாச்சும் உண்டுன்னு கேள்விப்பட்டாயா?

" சொத்து ஏதுக்கடி...? நமக்கேன் அந்தக் கவலையெல்லாம்!"

"உனக்குப் புள்ளை குட்டி பெத்துப் பிழைக்கணும்னு ஆசையில்லையா?"

" போடி...! ஆசையிருந்தா இப்பவே முடியுமா?"

" ஆமா, அதற்குள்ளே உள்ளங்கையிலே சுட்டு விரலைச் சுற்ற ஆரம்பிச்சுட்டியா? ராத்திரி......முகூர்த்தம்லே...?"

"...ஹி...ஹி..."

" அதுதான் விடியச்சே குளிச்சிண்டையோ?"

" சுசீலா! உன்னை யொண்ணு கேட்கறேன்,"

" ஏண்டி...?"

" ...அவர் நெஞ்சிலே ஏதோ வெள்ளையா இருக்கு அது என்னடி?"

" ஐய்யைய்யோ!"

" ஏண்டி...?"

" அது பெரிய நோயடி...!"

" என்ன...?"

" ஏழுவருசமா பூத்து நின்னு, கிளியைப் பூனைகிட்டேவா கொண்டு போய்ச் சேர்த்துட்டார்?"

" என்ன சுசீ?"

" அந்த ரோகம் உனக்கும் பரவி விடலாம். ஜாக்கிரதையாப் பழகணும்!"

" இனி என்ன இருந்தாலும் நான் அவர் மனைவிதானே?"

" பலே...! பரவிட்டா, பரம்பரையா விடாது!"

" கல்லுன்னாலும், கணவன்; புல்லுன்னாலும் புருசன்!"

" வேதாந்தம் வேதனை தருண்டி"

" கமலீ!"

" அதோ அவர் கூப்பிடறார்! வந்துட்டேன் அத்தான்!"

* * *

" மாப்பிள்ளை ! பெட்டியெல்லாம் எடுத்து வண்டியிலே வைத்தாயிற்று. பத்து முப்பதிற்கு நல்ல நேரமாம் !"

" நானும் ஆச்சு மாமா ! கமலியை 'ரெடி' செய்யுங்கோ !"

" கமலீ...!"

" ஆயிட்டு இருக்குப்பா !"

தீயாயிற்று !

" ரவி ! 'சோடியத்தை' கொட்டிவை !"

" ஆச்சு சார் !"

" இன்னைக்குத்தான் ஊரிலே இருந்து வந்தாயா ?"

" ஆமா சார் !"

" சாந்தி தீர்ந்துதான் அழைச்சிட்டு வந்தாயா ?"

"................"

" உம் ! எல்லாம் சரிதான். குடியிருப்புக்கு எங்கே வீடு தேடி இருக்கே !"

" ஏன் சார் நானிருந்த வீட்டிலே தான் !"

" ஸார்......"

"..............."

" யாரது......?... வாப்பா ! என்னது ?"

" கிள்ளினல் இந்த இடத்லே சொரணையில்லே சார் !"

" அதை ஆரம்பத்லேயே 'க்யூர்' செய்திட்டால் அருகிலே அணுகாது. என்ன ?"

* * *

" இது, அவ்வளவா பாதிக்காது மிஸ்டர் ! தினம் வந்து ரெண்டு வேளை மருந்து போட்டுக்கோ. நாளைக்கு ஒரு 'இன்ஜக்ஸன்.'"

" எப்படியோ, வெள்ளை தெரிஞ்சுடாமே இருக்கணும் சார் ! மகளைக் கலியாணம் செய்ய வரன் வேறு வந்துட்டான் !"

" கவலைப்படாதே ! மிஸ்டர் !"

" வணக்கங்க !"

" வணக்கம் !"

"..............."

" ஏன் ரவி பார்த்தாயா ! மகளைக் கலியாணம் செய்து கொடுக்கறதுல்லே எவ்வளவு சிரமம்னு ? நீ டபார்னு கலியாணம் பண்ணிண்டே ! இனித்தான் உனக்கு 'பார்சூன்' அடிக்கப் போறது !"

" அன்றைக்கு 'அது' வீழ்ந்த போதே உயிர் போயிருந்தால் இன்றைக்கு என் பெயர் கூட மறைஞ்சு போயிருக்கு மல்லவா சார் ?"

" நானிருக்க அப்படி நடக்க விடுவேன ?"

புகை சூழ்ந்தது!

" கமலி !"

"..............."

" ஏன் கமலீ ! பேச மாட்டேன் என்கிருய் ? உடம்புக்கு என்ன ? ஏதாவது கெட்ட கன ?"

" என் விசயத்தில் பெரிய அக்கறைதான் போங்கள் !"

" கமலீ ! நீ என் கண்ணல்ல !"

" மோவாயைத் தொட்டுப் பேசறது இருக்கட்டும் ! என்

கன்ன மெல்லாம் கன்றிக் கிடக்கிறது ! விடிந்ததும் விடியாததுமாக என்ன விளையாட்டு ?"

"கமலீ ! நீ இவ்வளவு சீக்கிரம் குளித்து முடிப்பாய் என்று எதிர்பார்க்கவே இல்லை ! நீ என் தெய்வம் !"

"அத்தான் ! என் வாழ்வு பாழாகக் கூடாது என்று உங்களுக்கு ஆசையிருக்கா அத்தான்?"

"குடித்தனம் வைத்து ஒரு மாதம் ஆகிறது; இது வரையில் கேட்காமல், இன்று ஏன் கேட்கிறாய்? ஏதாவது கனாக் கண்டாயா, என்ன ?"

"அத்தான் எனக்கு..."

"என்ன வேண்டும் சொல்லு ! ஒன்றுமே இல்லாது, ஆஸ்பத்திரி பிழைப்பை நம்பி, வீடு வாசல் கிடையாது ஒண்டியா இருந்த என்னைப் புல்லுன்னாலும் புருஷன்னு ஏத்துண்டையே, உன்னைத் தெய்வமாப் போற்றறேன் கமலீ! உன்னைப் போன்றவர்களால்தான் இந்நாடு பெருமையடைகிறது !"

"அத்தான்...அத்..."

"ஏன் அழறே கமலீ ?"

"நான் அழல்லே... அத்தான் நான் அழல்லே! இனி அழ மாட்டேன் !"

'கமலீ! என்னை என்ன சந்தேகம் வேணும்னாலும் கேள் ! இங்கே யார் இருக்கா ? நாம்தானே ?"

"நானும் குழந்தை குட்டி பெத்து..."

"வாழவேண்டியவர்கள்தானே ? அதிலென்ன ?"

"அவைகள் நலிந்து ரோகிகளாகி விடக் கூடாதல்லவா ?"

"கமலீ !"

"அத்தான்...! அதனால்தான் !"

"என்ன கேட்கிறாய் ?"

"அத்........"



விண்ணென்று பாய்ந்தது!

" ஸார்......"

"யாரது...?"

"உங்களோட தனியாப் பேசணும்!"

"சற்று இரேன்! இந்தப் 'பேசன்டை' அனுப்பிவிட்டு வருகிறேன்!"

"................"

"ஏம்பா! இந்த இடத்லே, இப்ப சொரணை இருக்கா?"

"இன்னும் வரலே சார்!"

"ஆமாம்! இது உனக்கு மட்டுமா? மனைவிக்குமா?"

"அவளை இரண்டாந்தாரமா கட்டிக்கிட்டதன் விளைவுதான் சார் இது!"

"அடடே!"

"அவளுக்கு அடிவயிற்றிலே பரவி இருக்கு! இது அவா குடும்ப நோயாம்! அதை இனி ஒண்ணும் செய்ய முடியாதாம்! அவகிட்டே இருந்துதான் எனக்கும் பரவி விட்டது ஸார்!"

"இது மிகப் பொல்லாத ரோகம்!"

"என் வாழ்வு இப்படிக் குலையும்னு எதிர்பார்க்கவே இல்லே சார்! எதிர்பார்க்கவே இல்லே!"

"கவலைப்படாதே! மிஸ்டர்! மேற்கொண்டு பரவாத மாதிரி செய்துடறேன்!"

"ரவி எங்கே சார் காணும்?"

"உனக்கு மருந்து வாங்கி வரத்தான் போயிருக்கான்!"

"வெள்ளை, கருப்பு! ரெண்டு வகையிலே இந்த நோய் பரவும். இது மேற்கொண்டு உன் சந்ததியைப் பாதிக்காத மாதிரி செய்யறேன். நாள்பட்டால் ஒன்றும் செய்ய முடியாது!"

"நான் வர்றேன் சார்"

"தேங்யு!"

"வணக்கம்!"

"................"

"யாரம்மா வெளியிலே!"

....

"டக்...டக்...டக் க்ரீச்"

"அடடே!"

"யார் சார் அது?

"கிடைத்ததா ரவி? வந்து ஒரு பொண்ணு தனியா ஏதோ கேட்கணும்னு உட்கார்ந்திருந்திச்சி காணமே!"

"கிடக்கிருள் சார், வாங்க உள்ளே!"

ஜ்வாலை விட்டு அணைந்தது!

"கமலி"

"ம்ச்ஹ"

"கமலீ!!"

"ஹ்...ஹ்"

"கமலீ...என்ன இது?"

"அத்தான்!"

"ஏன் இப்படி சதா அழுதிட்டு இருக்கே! உனக்கு என்ன சந்தேகம்!"

"என்னைக் குத்தாதீர்கள்?"

"ஏன் நான் வேறொருத்தியோடு கூடிக் குலாவுகிறேனு?"

"அதை மட்டும் சொல்லாதீர்கள் அத்தான்!"

"ஆஸ்பத்திரியிலிருந்து எத்தனையோ முகத்தைத் தரிசித்து விட்டு, ஆசைமுகத்தைக் காணலாம் என்று வந்தால் கணவனது காலடி

தொழுது ஏற்கும் மனைவியின் அழுகை முகத்தையா பார்க்க வேண்டும்?''

"அத்தான்?''

"நானும் பார்க்கிறேன்! இந்த இரண்டு நாட்களாக ஏதோ ஒன்றைப் புதிர் போடுகிறாய்! தாய் தந்தையைக் காண வேண்டுமென்று கண் பூத்துப் போயிருக்கிறதா? நான், அழைத்தால் வர மாட்டேன் என்றேனா?''

"அதில்லை அத்தான்?''

"பின்னெது? ஆஸ்பத்திரியிலிருந்து வரும்போது, அழகி ஒருத்தியுடன் கை கோர்த்து ஆனந்தமாக 'பீச்சு'க்குப் போனேனே அதுவா?''

"அத்தான்......வீணை பழி போடாதீர்கள்?''

"என்ன கமலீ! என் கண்ணல்ல! என்ன?''

"நானும் வாழ வேண்டியவள்!''

"அதற்காக...''

"எனக்கும் உங்கள் நோய் பரவிவிடக் கூடாதல்லவா?''

"விளங்க வில்லையே கமலீ!''

"என்னைத்...தொடாதீர்கள்!''

"ஏன்...?''

"நானும் வாழ வேண்டியவள்! எனக்குச் சகல ஆசையும் ஆண்டவன் கொடுத்திருக்கிறான்!''

"கமலீ!''

"உங்கள் குஷ்டரோகத்தை நிவர்த்தி செய்து விட்டு என்னைத் தீண்டுங்கள்! நம் சந்ததியைக் கெடுக்க நான் விரும்ப வில்லை!''

"அடி அசடு! குஷ்டமா? யாருக்கு?''

"உங்களுக்குத்தான்!''

"இதுவா, குஷ்டம்? மண்டூகமே! அன்று ஆஸ்பத்திரியில் 'ஆசிட்'டை எடுத்த போது கை தவறி என் மேல் வீழ்ந்து விட்டது!''

"அத்தான்...!!!''

"அன்று டாக்டர் ராகவன் இல்லையென்றால் இன்று உன்னிடம் பேசிக் கொண்டிருப்பேனா?''

"டாக்டர் ராகவன் தெய்வம் அத்தான்!''

"என்னைக் காப்பாற்றிய அவர் தெய்வமல்லாமல் வேறு என்ன? 'இது' இன்னும் இரண்டு ஆண்டுகளில் எல்லாம் மறைந்துவிடும்!''

"அங்கேயா நீங்கள் வேலை செய்கிறீர்கள்?''

"ஆமாம் ஏன்?''

"அன்று நான் அங்கு வந்த போது உங்களைக் காண வில்லையே!''

"எதற்காக வந்தாய்?''

"அத்தான்.........''

"கமலீ.........''

"......இதைத் தெரிந்து கொள்ளத்தான்! ஆனால் முடியவில்லை!

★

நான் எவ்வளவோ ஜாக்கிரதையா இருந்தும் நேத்து சறுக்கி விழுந்து கையிலே அடிபட்டு விட்டது ஸார்!

உம்..ஆனைக்கும் அடி சறுக்கும்னு தெரியாமலா சொல்லியிருக்காங்க!

தென்னாட்டின் தலைசிறந்த அச்சகம்

நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர் ரோடு, :-: சிவகாசி.

தபால் பெட்டி நெ. 30

போன் : 58 & 75 தந்தி : "லித்தோகிராப்"

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஒர்க்ஸ், ஜவுளி, காபி, டீ, மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபிள்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்டூன்களும், லித்தோவிலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். கவர்ச்சிகரமான பல வர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாண பத்திரிகைகள் ரெடிமேடாக ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

கிரீஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரி

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

"இங்கோகிராப்" :: சிவகாசி

போன் : 151 தந்தி : VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

பெ. சி. சி. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.



குமுதக் குமரி

"ஷேரலி"

குமுதம் :

காரிருள் வாணைக் கலைத்துமென் இதழில்
  களிப்பைத் தெளித்திடுவார்—மகிழ்
  ஒளியைத் தெளித்திடுவார்—அவர்
தேனில் வந்து செழித்த முகத்தொடு
  சிரிப்பைத் தெளித்திடுவார்—உளம்
  விரியப் பிரிந்திடுவார் !

அம்புலி :

ஊடல் மகிழ்விணை இரவினில் தந்திட
  ஓடி வந்திடுவேன்—உணைத்
  தேடி வந்திடுவேன்—நனிப்
பாடல் பொழிந்துணை கட்டித் தழுவிட
  பாரில் உதித்திடுவேன்—எழில்
  பூரிப் புதிர்த்திடுவேன் !

குமுதம் :

தண்ணொளி பட்டதும் வதனம் மலர்ந்திடும்
  சாபம் தந்திடுவார்—மனத்
  தாபம் தந்திடுவார்—இருள்
விண்வழி வந்திட விரட்டியென் நெஞ்சை
  மீட்டிச் சென்றிடுவார்—இருள்
  ஓட்டிச் சென்றிடுவார் !

அம்புலி :

இன்பத் துயர்வை எழுந்துப் பிடித்திட
  இன்று பொழிந்திடுவேன்—ஒளி
  சிந்திக் களிப்படைவேன்—இளம்
கன்றென் றிருக்குமும் இதத்தில் காதலின்
  கள்ளைப் பிழிந்திடுவேன்—கவின்
  கிள்ளை மொழிந்திடுவேன் !

வீட்டிற்கும் தோட்டத்திற்கும்
வேண்டியமட்டும்
தண்ணீர் எடுக்க
ஒரு

டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்

அமைத்துவிடுங்கள்.

இந்த பம்பு செட்டுகளைத் தற்போது உங்கள் வீட்டிலுள்ள கிணற்றிலும் அல்லது குழாய்க் கிணற்றிலும் சுலபமாய் அமைக்கலாம். நீளமான குழாய் மாட்டுவது, உயரத்தில் டாங்கிகள் கட்டுவது முதலியவை தேவையில்லை. அவை முழுவதும் தானாகவே ஆட்டோமாட்டிக் வேலை செய்வதுடன் வருஷக் கணக்கில் திருப்திகரமாக சேவை புரியும்.



குழாயைத் திறந்தால் தண்ணீர் கிடைக்கும்

டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்

விசாரிக்குமிடம்:

ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்.,
5-7, செகண்ட் லைன் பீச், மதராஸ்-1.

கானல் நீர்!

“எல்லார்வி”

சங்கரனும் சந்தானமும் கடை வீதியிலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். சங்கரன் உள்ளூர் வாசி. அடுத்த தெருவில் அவர் வீடு. சந்தானம் அவருடைய நண்பர். வெளியூரில் வசிப்பவர். விடுமுறையைக் கழிக்கக் கிராமத்திற்குச் செல்கிற வழியில் சங்கரனின் விருந்தினராய் இரண்டு நாள் தங்கியிருந்தார். முக்கியமான சில சாமான்கள் வாங்கும் பொருட்டு இருவரும் கடை வீதிக்குப் போய்விட்டுத் திரும்பி வந்துக் கொண்டிருந்தார்கள். எதைப் பற்றியோ மிகவும் சுவாரஸ்யமாக உரையாடியபடி வந்து கொண்டிருந்த அவர்கள் கவனத்தை அங்கே தென்பட்ட காட்சி கவர்ந்து இழுத்தது.

அது பெரிய வீதிதான். இருந்தும் ஜனநடமாட்டம் தடைபட்டு இருந்தது. காரணம், கொட்டு முழக்கத்துடன் தெரு நடுவே வந்து கொண்டிருந்த ஊர்வலந்தான். பாண்டு வாத்திய முழக்கம் வான் முகட்டை எட்டிற்று. ‘பம் பம் பம் பம்’ என்ற சங்கநாதத்தின் ஒலி திசை எங்கும் பரவிற்று. புஷ்பத்தின் நறுமணமும் வத்தியின் வாசனையும் மக்களின் மனதைக் கிறுகிறுக்க வைத்தன.

சங்கரன் நின்றார். சற்று நேரம் ஏதோ யோசனை செய்தார். பிறகு நிதானமாகச் சொன்னார். “சந்தானம், நாம் ஒன்று செய்யலாம்; அதோ அந்த மாடி வீட்டிலேதான் என்னுடைய நண்பர் தாமோதரன் இருக்கிறார். நாம் சற்று நேரம் அங்கே தங்கியிருப்போம். ஊர்வலம் சென்றபின் வீட்டுக்குப்போகலாம். தாமோதரனிடம் உங்களைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இப்போது அறிமுகப்படுத்தி வைக்கிறேன். மிகவும் சந்தோஷப்படுவார்” என்றார் சங்கரன். சந்தானம் முதலில் தயங்கினார்; பிறகு இணங்கினார். இருவரும் தாமோதரன் வீட்டை நோக்கி நடந்தனர்.

“இது என்ன? இந்த நேரத்தில் கூட ஊர்வலமா?”

“சே சே, இது கல்யாண ஊர்வலம் இல்லை; அதற்கு மாறான ஊர்வலம். இடுகாட்டை நோக்கிச் செல்கிறது.”

“அதற்கா இத்தனை தடபுடல்?”

“பணம் இருந்தால் தடபுடலுக்கு என்ன குறைவு?”

“பண வசதி உள்ளவர்கள் எல்லோருமே இம்மாதிரி காரியங்களில் செலவு செய்வார்களா என்ன? பணம் இருந்தால் மட்டுமே போதாது; மனமும் வேண்டும்.”

இதற்குள் அவர்கள் தாமோதரன் வீட்டை அடைந்துவிட்டார்கள். தாமோதரன் தெரு வாயிலிலேயே நின்றிருந்தார். வந்துகொண்டிருக்கிற ஊர்வலத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். நண்பர்களைக் கண்டதும் இன்முகத்துடன் வரவேற்றார். அறிமுகம், குசலப் பிரச்னம் முதலியன நடந்தேறின. பேச்சின் நடுவே சங்கரன் அந்த ஊர்வலத்தைப் பற்றி வினவினார்.

“ஓ! உங்களுக்குத் தெரியாதா? கலெக்டர் எஸ். கே. சுந்தரத்தின் தகப்பனார் நேற்றிரவு காலமாகிவிட்டார். அந்த ஊர்வலம்தான் இது” என்றார் தாமோதரன்.

சங்கரனின் முகம் ஆச்சரியத்தைத் தோற்றுவித்தது. “அடடே! கலெக்டரின் தகப்பனாரா...?” என்று வாயைப் பிளந்தார்.

சந்தானம் லேசாகச் சிரித்துக் கொண்டார். அதைக் கவனித்த

சங்கரன், "என்ன சிரிக்கிறீர்கள்?" என்றார்.

"ஒன்றுமில்லை. நீங்கள் இருவரும் கலெக்டர் சுந்தரம் என்று பேசிக்கொண்டதும் என் நினைவு எங்கோ ஓடிற்று."

"ஒருவேளை சுந்தரத்தை உங்களுக்குத் தெரியுமோ?"

"இவரைத் தெரியாது. இந்தப் பெயரையுடைய வேறு ஒருவர் எங்கள் ஊரில் இருந்தார். உங்கள் பேச்சு, சட்டென்று எனக்கு அந்தப் புண்ணியவானின் நினைப்பை உண்டுபண்ணிற்று. இவருக்கும், அவருக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை எண்ணிப் பார்த்தேன்; பைத்தியம்போல் சிரித்துக்கொண்டேன்; அவ்வளவுதான்."

தாமோதரன் குறுக்கே பேசினார். அவர் குரலில் பெருமிதம் தோன்றிற்று: "எங்கள் ஊர் கலெக்டர் சுந்தரத்தைப் போன்ற புண்ணிய புருஷரை நீங்கள் எங்குமே கண்டிருக்க முடியாது!"

சங்கரன் தாமோதரன் பேச்சுக்குத் தாளம் போட்டார்.

"சந்தேகம் என்ன? செயலுக்கு ஏற்றபடி மனிதர் ராஜகளை உடையவர். புத்தியிலே பிரகஸ்பதிதான். நியாய பரிபாலனத்தில் நெருப்புத்தான். அன்பின் அவதாரம் என்றால் அவருக்கே தகும். அவருடைய தர்ம குணத்தைச் சொல்லப் போனாலோ ......அடாடாடா !... என்னத்தைச் சொல்வது ?"

மறுபடி தாமோதரன் பேசினார்: "கல்யாணம், கார்த்திகை என்றோ, நோய் நொடி என்றோ, மக்களின் படிப்பு என்றோ, சோற்றுக்கு வழியில்லை என்றோ, யாராவது போனால் மன்னன் நோட்டு நோட்டாக அள்ளி வீசுவாரே தவிர, 'இல்லை' என்ற சொல்லோ, 'நாளைக்கு' என்ற பேச்சோ, அவரிடம் கேட்க முடியாது. அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு இந்த ஊர்ப் பள்ளிக்கூடங்களில் படிக்கிற குழந்தைகள் எவ்வளவு பேர் தெரியுமா? கோயில் குளம், சத்திரம், சாவடி முதலியவை உருவாக இவர் அளித்திருக்கிற நன்கொடை கொஞ்சமா? நஞ்சமா? எதைக் கூறுவது? எதைக் கூறாமல் விடுவது?"

அவர் சற்று நிறுத்திப் பெருமூச்சு விட்டார். அப்போது சங்கரன் சந்தானத்தினிடம் கேட்டார்: "நீங்கள் சொன்ன நபருக்கும் இவருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எண்ணிப் பார்த்தேன் என்கிறீர்களே, அவருக்கு இம்மாதிரி தர்ம சிந்தை உண்டா?"

சந்தானத்தின் முகத்திலே வியப்புக்குறி சுடர்விட்டது. "என்ன ஆச்சரியம்! எங்கள் ஊரில் இருந்தவர் பெயர் எஸ். கல்யாணசுந்தரம். ஆனால் எஸ். கே. சுந்தரம் என்றுதான் அவர் கையெழுத்திடுவார். அங்கிருந்து கலெக்டர் பதவி ஏற்றுத்தான் அவர் வெளியூர் சென்றார். இரு அம்சங்களிலும் பெரும்பாலும் ஒற்றுமை இருக்கிறது. நீங்கள் இருவரும் இப்போது மூச்சு விடாமல் அடுக்கிக் கொண்டே போனீர்களே, இவருடைய தர்மச் செயல்களைப் பற்றி. அந்த விஷயத்திலே நான் குறிப்பிடுபவரும் இவருக்குச் சற்றும் சளைத்தவர் அல்ல. ஆனால்..."

"ஆனால்?" தாமோதரன், சங்கரன் இருவரும் ஒரே சமயத்தில் கேள்வி போட்டார்கள்.

"எல்லா அம்சங்களிலும் இருவரிடையேயும் நிரம்ப ஒற்றுமை இருந்தாலும் ஒரே ஒரு விஷயத்தில் உள்ள வேற்றுமை மலைக்கும் மடுவுக்கும் போன்றது."

"அப்படியா? அது என்ன?" என்று வினவினார் சந்தானம்.

"இந்த மனிதர் தம் தகப்பனாரின் சடலத்திற்கே இத்தனை மரியாதை நடத்துகிறாரே. அவன், அந்த மனிதன், மனிதனா அவன்? பெற்ற தகப்பனைப் பட்டினி போட்டு வதைத்தான்."

"சீ சீ! அப்படிப்பட்ட பதிதனை யும் சேர்த்துப் பேசுவது கூடத் தவறுதான்."

ஊர்வலம் மெல்ல மெல்ல நகர்ந்து வந்து கொண்டிருந்தது. உள்ளூர் வாசிகளான சங்கரனும், தாமோதர னும் எட்டிப் பார்த்தார்கள். பூப் பல்லக்கின் முன்னே ஊர்ப் பிரமுகர் கள் பலர் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். தூரத்துப் பார்வையில் யார் யார் வருகிறுர்கள் என்று நிதானிக்க முடியவில்லை. நண்பர்களிடையே மறுபடி உரை யாடல் தொடர்ந்தது.

"அது சரி மிஸ்டர் சந்தானம்; ஒரே ஒரு சந்தேகம்."

"என்ன அது?"

"நீங்கள் சொல்வதில் முன்னுக் குப் பின் முரண்பாடு காண் கிறதே? உங்கள் ஊரில் இருந்த கல்யாண சுந்தரம் என்பவரும் தான தருமங்களில் சிறந்தவர் என்கிறீர்கள். அப்படிப்பட்டவர் பெற்ற தகப்பனுர் விஷயத்திலே மட்டும் ஏன் அத்தனை கொடூரமாக நடந்து கொள்ள வேண்டும்?"

"என்ன பதில் சொல்வது? அது அந்தக் கிழவர் செய்த மாகா பாவம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த மனிதன் ஊரார் மெச்ச வேண்டி, தான தருமங் களைத் தாராளமாகச் செய்தான். உள்ளுக்குள் நடப்பதைக் கண்டவர் யார்? நான் அந்த மனிதன் இருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் இருந்த தால் எனக்கு எல்லாம் தெரியும். தெருவிலே இன்னும் சிலருக்கும் அந்த கொடுமை தெரிந்துதான் இருந்தது. ஆனுல் எல்லாரும் அந்தக் கிழவருக்கு அங்கிலே வேண் டும் என்றுதான் சொன்னுர்களே தவிர, விவரம் அறிந்து அநுதாபப் படுபவரே இல்லை. அத்தனை தூரத் திற்குக் கிழவரைப் பரம துர்க்குனி யாக உருவகப்படுத்தியிருந்தார்கள் அவருடைய பிள்ளையும் மருமகளும். எனக்கும் என் மனைவிக்கும் மட்டுமே அந்தரங்கம் தெரியும். அதற்குக் காரணம் நான் எதிர் வீட்டில் குடியிருந்தது மட்டுமே அல்ல; அவர்கள் வீட்டுச் சமயற் காரர் அந்தரங்கமாக என்னிடம் கூறிய செய்திகளும் காரணமாகும்.

"கிழவர் அடிநாளில் எப்படியோ தெரியாது. நான் அறிந்த வரையில் அவரிடம் வெறுக்கத் தக்க அம்சம் எதுவுமே இல்லை.எனக்குத் தெரியா மல் ஏதாவது சிறு குறை இருந்தா லும் இருக்கலாம். அதற்காக அரும்பாடுபட்டு அவர் வளர்த் துப் படிக்க வைத்து உருவாக் கினதால் தானே அந்த மனித னுக்கு யோக வாழ்வு? அதை யெல்லாம் சிறிதாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா? கண்ண ராவி! தெருத் திண்ணைக் கோடி யிலே மூங்கில் தட்டி மறைப்பாலான ஒரு சிறு அறை. கிழவர் அங்கே தான் கிடப்பார். பாவதோஷத் திற் கஞ்சிச் சமையற்காரன் உதவு வான். வெயிலின் காங்கை தாளா மல், மழை, பனி ஆகியவற்றின் குளிர் தாங்காமல் அந்த உடலும் உயிரும் என்னபாடு பட்டனவோ, ஆண்டவனே அறிவான்! வரு வாரும் போவாரும், விருந்தும் கேளிக்கையும், பாட்டும் கூத்துமாய் வீடு அமளி குமளிப்படும்; கிழவர் காண்பது எப்போதோ இரண்டு வேளைகளில் குத்துச் சோறு.

"திடீரென்று அந்த மனிதனுக்கு உத்தியோக உயர்வும் மாற்றலும் ஆயின. அப்போது என்ன செய் தான் தெரியுமா அந்தப் பாவி? மனைவி மக்களையும், சாமான்களை யும் முன்னதாகவே அனுப்பிவிட்டு அந்தப் பரிசாரகனின் உதவியை நாடினுன். சொற்பப் பணத்தை அவனிடம் கொடுத்துச் சில நாள் கிழவரைக் கவனித்துக் கொள்ளும் படிக்கும், பிறகு, தான் வந்து அழைத்துப் போவதாகவும் கூறிச் சென்றுன். சமையற்காரன் முதலில் தயங்கினுன். பின்னர் வெகுவாக

யோசித்து, 'இந்தக் கிழப் பிராணன் இந்தப் பாவி கையில் சிக்கித் துடிப்பதை விடச் சில காலம் நம்மிடமாவது சுகமாக இருக்கட்டும்' என்று அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். ஆனால் பல காலம் ஆகியும் பிள்ளை வந்து தகப்பனைக் கூட்டிச் செல்லவும் இல்லை; பணம் அனுப்பவும் இல்லை. அந்நிலையில் எனக்குக் குடும்பத்தோடு வெளியூர் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. திரும்பி அங்கே வந்த போது அந்தப் பரிசாரகன் குடும் பத்தோடு வெளியூர் போயிருந் தான். கிழவரை என்ன செய் தானோ தெரியாது. அந்தப் பாவி கல்யாணசுந்தரம்கூட இந்தப் பக்கந் தான் எங்கேயோ மாற்றலாகி வந்திருக்கிறான். ஆனால் நிச்சய மாக இந்த மனிதராக இருக்க முடியாது அவன்.

"ஹூம்! அவன் நாசமாய்ப் போக! இந்த மனிதர் பிணத்திற்கு செய்கிற வரிசைகளில் லட்சத்தில் ஒரு பங்கு கூட அவன் உயிரோடு இருக்கிற தந்தைக்குச் செய்ய வில்லை. என்ன உலகம்! என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது!" என்று வெறுப்பும் வேதனையுமாய் முடித்தார் சந்தானம்.

"இவருடைய சகோதரி எங்கோ வடக்கே இருக்கிறாள். இத்தனை நாளும் அவளிடந்தான் இருந்தார் மாண்டுபோனவர். சமீபத்திலே தான் இவர் போய்த் தகப்பனாரை அழைத்து வந்தார்."

"அப்போ சரி; கண்டிப்பாக நான் கூறுகிறவன் வேறேதான். ஏனென்றால் அவனுக்குச் சகோதரி யும் இல்லை, சகோதரனும் இல்லை. ஒரே பிள்ளை. பெற்றவள் ஒரு வகையில் பாக்கியசாலிதான். தகப் பனைப் போல் பிள்ளையிடம் இருந்து சீர்கெட வில்லை."

ஊர்வலம் அவர்கள் இருந்த இடத்தை நெருங்கி வந்தது.

"நீதிக் கதைகளைப் படிக்கிறோம் கேட்கிறோம், நாடகங்களிலும் திரைப்படங்களிலும், பார்க்கிறோம்; எங்கள் ஊர் கலெக்டர் துரை நீதி களை நடத்திக் காட்டுபவர். இப் படிப்பட்டவர் இந்த நகரத்திற்கு அதிகாரியாக வர இங்கிருப்பவர் கள் மகத்தான புண்ணியம் பண்ணி யிருக்..."

"சங்கர்!..." என்று கூவினார் சந்தானம். அருகருகே நின்றிருக் கையில் அவர் அப்படிக் கூவினதும் நண்பர்கள் திடுக்கிட்டுப் போனார் கள். சந்தானத்தின் பார்வை பல்லக்கின் முன் வந்துகொண் டிருந்த பிரமுகர் கூட்டத்தில் ஊடுருவி நின்றது.

'அதோ, அதோ!... ...அதோ நான் சொன்ன மனிதன்!...அதோ தடித்த மனிதருக்கும், கறுத்த மனி தருக்கும் நடுவிலே வருகிற பேர்வழி தான் நான் சொன்ன..."

"ஆ! அவர்தாம் இவ்வூர் கலெக்டர்!"

"என்ன ஸார் இது? நீங்கள் குறிப்பிட்டவருக்குச் சகோதரி..."

"சரிதான் சுவாமி, சரிதான்! விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டது! அந்தப் பாவியேதான் இவன்.

ஆகா! பலே கைகார ஐயா! சுய விளம்பரப் பட்டியலில் தகப்ப னின் பிண ஊர்வலத்தையும் சேர்த் துக் கொண்டுவிட்டான்!

ஊர்வலம் அவர்களைக் கடக்கும் தருணம். தற்செயலாகச் சங்கரன் முதலியோர் இருந்த பக்கம் கலெக் டர் சுந்தரத்தின் பார்வை ஓடிற்று. ஒருகணம் சுந்தரத்தின் கண்களும் சந்தித்தன.

"ஊரை ஏமாற்ற நல்ல வெளிச் சம் போடுகிறானடா இந்த மகா பாவி! தூ!......" என்று காறி உமிழ்ந்தார் சந்தானம்.

சட்டென்று தலை கவிழ்ந்தார் கலெக்டர்துரை. அதன் பின்னர் அந்த வீதி கடக்குமட்டும் அவர் தலை நிமிரவே இல்லை.

'கானல்நீர்' என்று முணுமுணுத் தார் தாமோதரம்.

பிளாக்குகள் என்றாலே

நியூடோன்

கம்பெனிதான்

ஞாபகம் வரும்

★

மிகச் சிறந்த
மூவர்ண, லைன்,
ஆப்-டோன் பிளாக்
வேலைகளுக்கு

★

நியூடோன்

அன் கம்பெனி

வாலாஜா ரோடு,

சென்னை-2.

தந்தி: 'ஜுவல்லர்ஸ்' போன்: 49



பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

கிளைகள்: சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

ராஜபார்ட் ராமதுரை

ஜெகசிற்பியன்

மனோனந்த சுக மாலை நேரம்.

தலைநகரிலுள்ள குடிமக்கள், பெருமக்கள் அனைவரும் அரசரின் மேற்பார்வையில் நிர்மாணிக்கப் பெற்றிருந்த நாடக மண்டபத்தில் திரளாகக் குழுமியிருந்தனர்.

அயல் நாடுகள் பலவற்றில் அரச வேஷம் போட்டு அமோகப் புகழ் பெற்றிருந்த 'ராஜபார்ட் ராமதுரை'யின் ரம்மியமான நாடகமொன்று அன்று நடக்கவிருந்தது. அந்த நல்ல நடிகனின் நடிப்புப் புலமையைக் காணவும், அவனை கௌரவிக்கவும் நாட்டின் அரசரே அந்த நாடக விழாவுக்கு தலைமை தாங்கச் சம்மதித்திருந்தார்.

குறித்த நேரம் வந்தது.

தார்வேந்தர் வந்து தலைமை பீடத்தில் அமர்ந்தார். நாடக மண்டபம் எங்கும் நீல இருட்டுச் சூழ்ந்தது. அரங்கத்தில் திரை ஆரோகணமாகியது.

ராஜபார்ட் ராமதுரை அற்புதமான அரச அலங்காரத்துடன் மேடை மீது தோன்றினான். அவன் அணிந்திருந்த ஆடையணிமணிகளும் கிரீடமும் அவனை ஓர் அசல் மன்னனைப் போல் ஆக்கிக் காட்டின. அவனுடைய வீர நடிப்பும் வெற்றிப் பேச்சும் அவனொரு வெறும் நடிகன் என்ற எண்ணத்தையே அகற்றி விட்டன. அத்தனை பிரமாதமாக நடித்தான் அவன்.

ராமதுரையின் நடிப்பைக் கண்ட குடிமக்களும் பெருமக்களும் மெய் மறந்து போயினர்.

'அரசனாக இருந்தால் இப்படியல்லவோ இருக்க வேண்டும்? ஆகா, என்ன வீரமான பேச்சு! எத்தகைய வாள் வீச்சு! குடி மக்களிடத்தில் எப்பேர்ப்பட்ட தயாள சிந்தை! இவனே மன்னன்! இவனே வேந்தன்!' என்றெல்லாம் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் வாய்விட்டு ஆரவாரம் செய்ய ஆரம்பித்தனர்.

நாடகத்திற்குத் தலைமை தாங்கிய மன்னனுக்குக்கூட ராமதுரையின் நடிப்பைக் கண்டு உள்ளம் பூரித்தது. தான் உண்மையான அரசனா, அல்லது அவன் நிஜமான மன்னனா என்ற சந்தேகம் பிறந்து விட்டது அவருக்கு! அத்தனை அற்புதமாகவும் அபாரமாகவும் ராஜவேஷம் தாங்கி நடித்தான் ராமதுரை.

ராமதுரை நடித்துக் கொண்டிருந்தான். அவன் நடிப்பிலே மக்கள் சிந்தை குழைந்து கட்டுண்டு கிடந்தனர்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது..

ராமதுரையின் நடிப்பைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள், அவன் ஒரு நடிகன் என்ற எண்ணத்தை அறவே மறந்து விட்டனர். தம்மை ஆளும் மன்னர் தம்முடன் அங்கே அமர்ந்திருக்கிறார் என்ற நினைவும் அவர்களிடம் துளிகூட இல்லாமற் போய் விட்டது.

"மன்னன் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும்; ராமதுரைதான் இந்நாட்டின் முடிமன்னனாகத் திகழத்தகுதியுள்ளவன். அவனிடம் தான் அரசனுக்குரிய தகுதியும் திறமையும் இருக்கின்றன. மக்களிடத்தில் அவனுக்கு எத்தனை பாசம்! நாட்டின்மேல் அவனுக்கு எவ்வளவு பக்தி! வீரமும் விவேகமும் அவனிடம் உறைந்திருக்கின்றன! எனவே

அவன்தான் இந்நாட்டின் மன்னனுகத் தகுதியுள்ளவன்! அவன்தான் நம்மை ஆளும் அரசனுக வேண்டும்'' என்று நாடகம் பார்த்த ஜனங்கள் அனைவரும் ஒன்றுசேர எண்ணினர்.

இந்த எண்ணம் ராமதுரையின் நடிப்பால் விநாடிக்கு விநாடி வலிவு பெற்றுக்கொண்டே போயிற்று! அவனை அக்கணமே தங்கள் அரசனுக்கிக் கொள்ளத் துடிதுடித்தனர்!

நாடகம் முடிவடையும் கட்டத்தை நெருங்கியது. மக்களின் 'புதிய எண்ணம்' மலைபோல் வளர்ந்து கொண்டே போயிற்று.

நாடகம் இன்னும் முடியவில்லை. ஜனங்களின் மனதில் விசுவரூபம் கொண்டுவிட்டிருந்த அந்தப் 'புதிய எண்ணம்' திடீரெனப் புரட்சிக் கோஷமாக உருவெடுத்தது!

"ராமதுரைதான் எங்களுக்கும் எங்கள் நாட்டுக்கும் மன்னனுக வேண்டும்! அவனிடம்தான் அரசனுக்குரிய தகுதியும் திறமையும் இருக்கின்றன! ஆதலால், அவனே எங்கள் அரசன்! அவனே எங்கள் மன்னன்!'' என்று ஆவேசமாகக் கூச்சலிட்டனர்.

இந்தச் சமயத்தில், வெறி முற்றிய வாலிபன் ஒருவன், தலைமை வகித்தமர்ந்திருந்த மன்னனின் மீது பாய்ந்து சற்றும் சிந்தியாமல் அவன் தலையை வாளால் சீவியெறிந்து விட்டான்!



மன்னன் மடிந்தான். மக்களுக்கு மட்டில்லா ஆனந்தம்!

ராஜபார்ட் ராமதுரையை ஜனங்கள் தேடினர், அவன் தலையிலே நாட்டின் அரசகிரீடத்தைச் சூட்டி அகமகிழ்வதற்காக! அவனைக் 'கிரீட ஜாதி'யாக்கி வைக்க மக்கள் துடித்தனர்!

ஆனால், ராஜபார்ட் ராமதுரை?

அவனை அங்கு காணோம்! எங்கேயோ ஓட்டம் பிடித்துவிட்டான்! ஏனென்றால்,

அவன் நடிகன், வெறும் நடிகன். அவனது அரச நடிப்பும் அசல் நடிப்பே! அத்தகையவனால் ஒரு நாட்டை ஆள முடியுமா? அதற்குத் தக்க தகுதி அவனிடமுண்டா?

இல்லை — ஏனென்றால்; அவன் நடிகன்!

தன் ராஜ நடிப்பைக் கண்டு, தன்னை உண்மை மன்னன் என்று எண்ணித் தன்னைக் கிரீட ஜாதியாக்க நினைத்த அந்த முட்டாள் ஜனங்களிடம் அகப்பட்டு விடக்கூடாதெனக் கருதி அவன் ஓடியே விட்டான்!

ராஜபார்ட் ராமதுரை ஓடிவிட்டான்; ஏனென்றால், அவன் ஒரு நடிகன்!

ஆனால், அந்த நாட்டின் கதி...? அதன் மக்களின் கதி...?

அனுமார்

முசு, முசுக்கை தைலம்.

ANUMAR ANJANAM DEPOT TM

குளுமை, கூந்தல் வளர்ச்சி, அழகு தருவது

நித்திரைக் குறைவு, கண் எரிவு, பித்த மயக்கம் போன்ற நித்திய உபத்திரவங்களை நிவாரணப்படுத்துவதில், சிறந்த ஔஷதத தைலம். குணத்திற்கு உத்திரவாதம், எங்கும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.

தாதுவிருத்திக்கு

அனுமார் சாலாமிஸ்ரி லேகியம்

தாது பலவீனம், நரம்பு தளர்ச்சி, இடுப்பு வலி, திரேக பலவீனம் நீங்கும். அபார வீரிய விருத்தியுண்டாகும். இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தரும். பத்தியமில்லை. முழு விபரம் மருந்துடன் 1 சேர் விலை ரூ. 10-00; ½ சேர் ரூ. 5-50; ¼ சேர் ரூ. 3-00.

M. A. செபஸ்தியன் R.I.M.P.
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
ஆறுமுகநேரி,
திருநெல்வேலி ஜில்லா-S. I.



★

மின்னல்

—: கோ. பொன்னுச்சாமி :—

❋

வானமெனும் நங்கையவள் கண்வீச்சோ?
வளைந்தோடும் தங்கப்பெரும் பிழம்போ?
ஏனிந்த இயற்கைஎழில் வாள்வீச்சு?
இன்பத்தை அள்ளிப் பருகிடவே!

மேகத்தைக் கிழித்தோடும் மின்விளக்கோ?
மெல்லியலார் பல்முத்தோ? வெண்மருப்போ?
தாகத்தைத் தணித்தற்கோ வருகின்றாய்?
தந்தபின் மறைந்தோடி விடுகின்றாய்!

விண்ணுலகில் பாய்கின்ற பாலாறோ?
வெள்ளியினாற் செய்திட்ட வேல்வடிவோ?
கண்ணொளியை மறைக்கின்ற சக்திதனைக்
கற்றவிதம் சொல்லுவையோ
கலையமுதே!

★





THE LAKSHMI MILLS COMPANY LIMITED

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Telephone : 18 & 818
Telegrams : 'LAKSHMI'

Branch at **Kovilpatti** : Telephone : 18. Telegrams: 'LAKSHMIMIL'

SPINDLAGE AT { COIMBATORE—59,680 & LOOMS 200
KOVILPATTI — 51,120 }

*

SPINNERS OF :

Quality Cotton Yarn 20^s to 100^s Combed and Staple Fibre Yarn

*

Manufacturers of :

GREY LONGCLOTH AND MULLS

: MANAGING AGENTS :

G. KUPPUSWAMY NAIDU & CO.,

COIMBATORE.

உதயம்

ஆர். பி. மல்லாரி

தாமரைக் கன்னி தன் நாயகன் ஆதவனை எதிர் நோக்கியவாறு கொடிய இரவை விரட்டிக் கொண்டிருக்கிருள். "எப்போது விடியும்? எப்போது விடியும்?" என்ற எண்ணந்தான் அவள் மூச்சில் !

திடீரென்று யாரோ ஒய்யாரமாகச் சீட்டி அடிக்கும் சப்தம் கேட்டது. அவள் அருகிலும் அந்தச் சப்தம் நெருங்க அவளிடமே பேசவும் தொடங்கினுன்.

உலகம் அப்படித்தானே இருக்கிறது? தனிமையில் ஓர் கன்னி; அதுவும் இரவு நேரத்தில் இருந்தால், யார் வேண்டுமானுலும் பச்சாதாபப்பட ஆரம்பித்து விடுகிருர்கள். தாமரைக் கன்னியின் முகம் சுளித்தது. எட்டிப் பார்த்தாள்; மைனர் போல காற்று தேவன் நின்று கொண்டிருந்தான். அகமெல்லாம் முகத்தில் பிரதிபலிக்க இலேசாக புன்முறுவல் பூக்கவும் செய்தான். இந்தப் பார்வையைத்தான் ஜ்வாலை நோக்கில் ஏந்தினுள் தாமரைக் கன்னி. அவள் மனதில் பொங்கி எழுந்த வெறுப்பைச் சமாளிக்க இயலாமல் மைனர் நழுவ ஆரம்பித்தார்—வாயுவேகம் மனேவேகமாக !

அடுத்தபடி, தாமரைக் கன்னியை வட்டமிடுவதில் 'க்யூ'வில் நின்றிருந்தவர் ஸ்ரீமான் வண்டு. சங்கதிகளுடன் வந்தார். நளின மலர் நாயகன், கிம்புரியாழோன், நாத பிரம்ம தாஸன் என்றெல்லாம் தன் புராணத்தை ரீங்காரம் செய்தவாறு, தாமரைக் கன்னியை அணுகினர். "பண்ணுரும் இசைபாடும் காமுகப் பாவலரே ! பதிலுக்கு ஒரு கும்பிடு!" என்று தாமரையாள் இவரையும் விரட்டி அடித்தாள். அவள் மனம் ஆதவன் ஒருவனுக்காகவே ஏங்கிக் கிடந்தது.

ஆயிற்று; அதிகாலை நெருங்கிக் கொண்டு வந்தது. சீதளமான தென்றல் உல்லாசமாக வீசிக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது பொழுதுதான் என்று தாமரைக் கன்னி விநாடிகளை எண்ணிக் கொண்டிருந்தாள்.

அந்த சமயத்தில்...ஆ! இது யார்? பனிமாது ! நிர்மலமான ஒரு துளிப் பனி அந்தி வெளிச்சங் கலந்த இருட்டில், தாமரை இதழ் மேல் உட்கார்ந்து மின்னியது !

தாமரைக் கன்னியின் கோபம் எல்லை மீறிப் போய்விட்டது. எப்பேர்பட்ட சமயத்தில் இன்னெருத்தி வந்து சேர்ந்திருக்கிருள். கதிர் மன்னன் வர ஒரு நாழிகை கூட இல்லை. அந்த சமயத்தில் இவள் குறுக்கிடுவதானுல்?

"ஏய்! யாரது?.........போடி அப்பால்?" என்று ஆங்காரமாக அதட்டினுள்.

பனிமலர் நடுநடுங்கிப் போய் விட்டாள். தாமரையாளின் சிவந்த முகமும், மலரும் தருவாயில் அப்படியே நின்றுவிட்ட அவள் தோற்றமும் கண்டு பனியாள் வெடவெடவென நடுங்கினுள்.

"அம்மா ! தாயே ! இதோ ஒரு நாழியில் போய்விடுகிறேனம்மா !" என்று பனிமாது கை கூப்பினுள்.

தாமரையாளின் சினம் அடங்குமா ?

"சீ! என் கதிர்க்காளை என்னை அணையும் நேரத்தில் பெண் பிசாசு போல நீ குறுக்கிடுவதா? நீ போகாவிட்டால், இதோ உன்னை பஸ்மீகரம் செய்துவிடுகிறேன் பார்!"

தாமரை மலராள் சினத்தால் ஆடினாள். பனி மங்கை உடலெல்லாம் நடுங்கினாள். சின்னாபின்னமடையும் வகையில் அவள் அங்கு மிங்கும் அலைக்கழிக்கப்பட்டாள். கடைசியில் ஒரு முத்தாகச் சேர்ந்தாள். "இனி சாவுதான் எனக்கு அடைக்கலம்!" என்று ஆதவனை நோக்கிக் கண்ணீர் மல்கினாள்.

பொழுது 'பொலபொல'வென விடிந்து கொண்டு வந்தது.

மனம் நொந்து விழ்ந்த பனி மங்கையை தன்னுடைய பல கரங்களாலும் ஆதவன் தாங்கினான். அவனுடைய போதையில் அவள் வேதனை அனைத்தும் மாண்டது. மெய்ம்மறந்து தன் காதலனுள்ளேயே பனி மங்கை ஐக்கியமானாள்.

இந்தச் சம்பவம் கணப்பொழுதில் நடந்துவிட்டபடியால் தாமரையாள் திகைத்து மனம் நொந்து நின்று விட்டர்ள். அவளால் இதை நிறுத்தவும் முடியவில்லை. பொருமையால் எரிந்து தகித்தாள்.



“ஓய் வஞ்சகரே! இரவு முழுவதும் தங்கள் வருகையை எதிர்நோக்கி நான் மலர்ப் புன்னகையுடன் காத்து நின்றேன். என்ன பயன்? என் முன்னாலேயே இந்தச் சின்னஞ் சிறு பனிக் கன்னியை நீங்கள் அணைத்துக் கொண்டீர்கள்! என்னைவிட இந்தக் கழிசடை எதில் உயர்ந்தவள்? எனக்குப் பதில் வேண்டும்!” என்று கோபத்துடன் கேட்டாள்.

ஆதவன் மென்மையான தளிர்ச் சிரிப்புடன் பதில் சொன்னான்:

“பெண்ணே! உலகில் உன்னைவிட அழகி வேறு யார் உண்டு? மக்கள் எல்லோரும் உன்னைத்தான் என் காதலி என்று காவியங்களிலும் தீட்டுவார்கள். ஆனால் பனி மங்கை என் மேல் கொண்ட காதலுக்கு முன் எந்தக் காதலும் நிற்காது. அன்பில் கட்டுப்பட்டுத் தன்னை அர்ப்பணம் செய்துவிடுகிறாளல்லவா? எத்தனைக் காதலிகள் தன் காதலுக்காகத் தங்களையே தியாகம் செய்யக் காத்திருக்கிறார்கள்?”

தாமரையாள் ஒன்றும் பேசவேயில்லை. புதுமையும் தூய்மையும் நிறைந்த பனிக் கன்னியின் முன் அவளுடைய காதல் வெறும் பனிப் படலமாகவே அவளுக்குத் தோன்றியது! ★

தயாரிப்பாளர்:

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை

பெரம்பூர், சென்னை.

வியாபார விஷயமாக விசாரிக்குமிடம்:

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை-5.

தமிழகத்தின் பங்கு

சகுந்தலா பாரதி

பாரதமாதா அடிமைத்தளையில் கட்டுண்டு கிடந்த நாளில் அன்னையின் துன்பத்தை நீக்க பல வீரப் புதல்வர்கள் முன் வந்தார்கள். 1957-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி தாய் நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட வீரர்கள் முதன் முதலாகத் தொடங்கிய போராட்டத்தின் நூற்றுண்டு விழாக் கொண்டாடினேம்.

இந்த தேசிய விழாவிலே தமிழ் நாட்டின் பங்கு பற்றித் தமிழ் நாட்டார் நன்ருகத் தெரிந்து போற்றிக் கொண்டாட வேண்டும். தமிழ் நாட்டார் மட்டுமென்ன? மற்ற மாகாணத்தாரும் வெளி நாட்டாரும் தமிழ் மக்களின் வீரத்தை, பெருமையை அறிந்து பாராட்ட வேண்டும். அதற்கு ஆவன செய்ய அறிஞர்கள், தலைவர்கள் முன் வர வேண்டும்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் வீரத்தைப் பற்றி அப்பா தன் அமர கிதங்களிலே பாடி வைத்திருக்கிருர்.

"வேளாளன் சிறைபுகுந்தான்
தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதை விரைவிற் கேட்
பாய் நீ
வருந்தலை என் கேண்மைக்
கோவே!
தாளாண்மை சிறிது கொலோ
யாம்புறிவேம்
நீ இறைக்குத் தவங்கள் ஆற்றி
வாளாண்மை நின் துணைவர்
பெறுகெனவே
வாழ்த்துதி நீ வாழ்தி வாதி."

* 'ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது' * 'தேச பக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி' என்ற பாடல்களிலேயும் காணலாம்.

சுப்பிரமணிய சிவா, சுரேந்திரநாத் ஆர்யா, வ. வே. சு. ஐயர், சக்கரை செட்டியார், வாஞ்சி ஐயர், பாரதியார் இன்னும் எத்தனையோ வீரர்கள், தியாகிகள் இருந்திருக்கிருர்கள். அவர்கள் பெருமையை நாம் சரியாக அறிந்து பாராட்ட வகை செய்யவேண்டும்.

தமிழ் நாட்டு தேச பக்தர்கள் அத்தனை பேருக்கும் தனித்தனி ஞாபகார்த்த மண்டபம் கட்டுவது இயலாத காரியம். எனவே தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையிலே ஒரு மாபெரும் மண்டபம் அமைத்து அதன் சுவர்களிலே தேசபக்தர்களின் உருவப் படமும் அவர்கள் வாழ்க்கை வரலாறு, தேச சேவை, முதலிய குறிப்புகளும் எழுதி மாட்டி வைத்தால் வருங்காலத் தமிழ் மக்கள் பார்த்துப் படித்து பயன் பெறுவார்கள்.

மண்டபத்தைப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கும் உபயோகித்துக் கொள்ளலாம்.

சுதந்திரப் போரிலே தமிழ் நாட்டாரின் பங்கை வெளி நாட்டார் அறிந்து கொள்வதற்கு உகந்த ஞாபகச் சின்னமாக அமையும்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய பாரத மணித்திரு நாடு!

வந்தே மாதரம்!

★

இயற்கை வைத்தியம்

என். எஸ். சுப்பையர்

நம் தேகம் தன் சிக்குகளை, தானே குணப்படுத்திக் கொள்ளும் சக்தி பெற்றிருக்கிறது (Self healing power). கட்டிகள், புண்கள், காய்ச்சல் முதலிய வியாதிகளைக் கண்டு பீதி அடையாமல், அவைகளை நம் நண்பர்களாகக் கருத வேண்டும். இவைகளெல்லாம், தன்னைத்தானே சுத்திகரித்துக் கொள்ளும் முயற்சிகளின் வெளித் தோற்றங்களே. டாக்டர்கள் நோய்களைக் குணப்படுத்துவது இல்லை. இந்த வேலையைத் தேகம்தான் செய்கிறது. உதாரணமாக, வெட்டுக் காயங்களுக்கு டிஞ்சர் ஐயோடின் தடவி பான்டேஜ் கட்டி விடுகிறார்கள். இது வெளியிலிருந்து புண்ணில் கிருமிகள் போகாமல் தடுக்கும் வேலையை மாத்திரம் செய்கின்றது. ஆனால் அறுபட்ட ரத்தக் குழாய்களையும் தசை முதலியவைகளையும் புதுப்பிக்கும் வேலையைத் தேகமே செய்கிறது. ஆங்கில முறையில் கொடுக்கப்படும் மருந்துகள் வியாதிகளின் சின்னங்களை மாத்திரம் அமுக்கி, அவைகளை தேகத்தினுள் ஆழமாய் பதிய வைக்கின்றன. (Suppress the symptoms and drive the disease deeper into the issues) உறுப்புகள் சரியாய் இயங்கவில்லை என்று நமக்குத் தேகம் கொடுக்கும் எச்சரிக்கைதான் வியாதிகளின் வெளித் தோற்றங்கள் (Symptoms). இயங்காததின் காரணங்களைக் கண்டுபிடித்து, அவைகளை நீக்காமல் சின்னங்களை அமுக்குவது புத்திசாலித்தனமான செய்கை அல்ல என்பது நன்கு விளங்கும். உதாரணமாக, ரயிலை ஓட்டிக் கொண்டு போகிற ஒருவன் கை காட்டி அபாயம் அறிவிக்கும் நிலையில் இருப்பதைக் காண்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அது கொஞ்ச தூரத்திற்கப்பால் அதே தண்டவாளத்தில் வேறொரு ரயில் நிற்கிறது; நேரே ஓட்டிப் போனால் மோதலும், ஆள் பொருள் சேதமும் ஏற்படும் என்பதற்கு எச்சரிக்கை. ஆனால் ரயிலோட்டி கீழே இறங்கி, அபாய நிலையிலுள்ள கை காட்டியை வலுக்கட்டாயமாக தனக்கு சாதகமான நிலையில் இரக்கி, ரயிலை ஓட்டிச் செல்வானாகில், மோதலும், சேதமும் ஏற்பட்டே தீரும். இதே போல், வியாதிகள், வெளித் தோற்றங்களை அமுக்குவதினால் குணமடையா. பின்னும் ஆங்கில வைத்தியத்தில் கையாளப் படும் ரஸம் (mercury), ஆர்ஸனிக் (Arsenic), கந்தகம் (Sulphur), ஐயோடின் (iodine), பிராமைட் (bromide) முதலிய மருந்துகள் விஷத் தன்மை வாய்ந்தவை

மூன்றாவது தத்துவம்

சிகிச்சை என்பது தேகத்தினுள் வெளியிலிருந்து ஒரு புது சக்தியை புகுத்துவதல்ல. ஆனால் தேகத்தின் தானே குணப்படுத்திக் கொள்ளும் சக்தியை ஊக்குவித்து (Self healing power), கட்டுப் படுத்தி, உபயோகரமான வழியில் செலுத்துவதுதான் இயற்கை வைத்தியத்தின் லக்ஷ்யம்.



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

IC. 424

நமது வளர்ச்சி

உங்கள் ‘புதுமை’ பிறந்து ஓராண்டு ஓடிவிட்டது. ஆண்டுமலர் வெளியீடு அந்தப் பெருமையின் எதிரொலி. உலகம் புகழும் பாரத அன்னையின் சேவையில் ‘புதுமை’ தவழ்ந்து முன்னேறுவது நமது அட்டைச் சித்திரத்தில் திகழும் காட்சி.

ஊக்கமும், உள்ளத் திண்மையும் வாய்ந்த நமது எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் படங்களை உங்கள் பார்வைக்குப் படைத்திருக்கிறோம். இவர்கள் உருவாகி வரும் புதிய சமுதாயத்தின் இலட்சியக் கலைஞர்கள்! வாழ்க இவர்கள் பணி! வளர்க இவர் தம் திறன்!

இத்துணை அளவு ‘புதுமை’ வளர்ந்து, நிலைத்தமைக்குப் பெரிய அளவு துணை புரிந்தவை நமது தலையங்கங்கள். அவைகளை நினைவுறுத்தும் வண்ணம் சாரத்தைக் கார்ட்டூன்களாகப் பிழிந்து தந்திருக்கிறோம்! பருகுங்கள்!

சிறு கதைச் செல்வங்கள், கட்டுரைக் களஞ்சியங்கள், தலையங்கத் தங்கக் கட்டிகளைத் தரும் இலக்கியச் சுரங்கமாக ‘புதுமை’யை உயர்த்த பாடுபடுவோம் என்று இந்த நேரத்திலே உறுதி பூணுகிறோம்!

நேயர்களே! நீங்களும் நீங்காத ஆதரவை என்றும் நல்குவீர்களாக!

— ஆசிரியர்.



மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர் க ளாக்குவோம்
K.T. கோசல்ராம்
பி.எக்ஸ்.ஆர்
ஆரெஸ்ஸஸ்

எழுதுகோல் தெய்வம்

திருச்சி வாசுதேவன்

எம்.எஸ்.கமலா

டி.ஜே.இன்பராஜ்

இறைவன்

ச.து.சு. யோகியார்

புஷ்யன்

ஜாய்ஸ் பொன்னையா
கன்னிக்கண்ணான்
த. சண்முகசுந்தர பாண்டியன்
திருவிடைமருதூர் சேஷாத்ரி
ம. ஜயனிறை

ஜி.கே. பொன்னம்மாள்
பாசொலி
குமரி அனந்தன் எம்.ஏ
க. நாராயணன்
தி.சு. ஜனககுமாரி
நிலக்கோட்டை சங்கரசுப்பு
சகுந்தலா பாரதி
கு.ப. சேது அம்மாள்
ஷேரலி

எஸ்ஸார்ஸி
வேல்முருகேசன்
கலாபாரதி
தே.ப.பெருமாள்
வியார்ஜி
கே.ரகுபதி

வல்லிக்கண்ணன்
சுகி
அழகரசன்
சிங்காரவேலன்
இருகூரான்
ஏ.வி.எஸ்.ரமணி

சோமநாத்
ராமு
வைரம்
ஓவியம் புனைவோம்
A. ஜெகன்
கங்கன்


'கமிஷன் கவனிக்குமா?'
ஆகஸ்ட் '57.
"அவரையும் நிறுங்கள்"
மத்திய சம்பளக்
கமிஷன்
என்.ஜி.ஓ.
பொது ஜனம்
மத்திய சர்க்கார்
சம்பள உயர்வு
அலவன்ஸ் உயர்வு
மத்திய சிப்பந்திகள்


மொழிக் கமிஷன்
செப்டம்பர் '57
'அம்மா! குழந்தை இதைச் சாப்பிட முடியாது! வளரட்டும்.... 1965 வரட்டும்'
சாப்பிடு! சாப்பிடு
இந்தி
டாக்டர். சுப்பராயன்
பாரதம்
இந்திய சர்க்கார்
ராஜு

முதுகுளத்தூரிலே!
அக்டோபர் '57
உள்ளே போகாதீர்கள்! இது சர்க்கார் பள்ளிக்கூடம்
முதுகுளத்தூர் முனிபுங்கவர்!
நவம்பர் '57
'புதுமை'
ராஜு

“நிர்வாகத்தை நேராக்குக!” டிசம்பர் '57.



ஈரோடும் திரு அரங்கமும் ஜனவரி '58.


முடிந்ததா, மொழிப் பிரச்னை?
பிப்ரவரி '58.
'வாழ்க இந்தி'
1937
1958
"ஒழிக இந்தி"


முதலாளித்துவத்தின் முதல் வெற்றி!
மார்ச் '58.
முதலாளித்வம்
டி. டி. கே
'மனிதரைக் கொல்லும் வேங்கை ஜாக்கிரதை!'
ராஜு

என்.ஜீ.ஓ.விற்கு இரங்குக! ஏப்ரல்'58

திருவாடானை தந்த தீர்ப்பு மே '58



ஆச்சாரியார் ஆவி!
ஜூன் '58.
'ஆயிரம் பேர் படிச்சாச்சே! நீங்களும் ஏன் படிக்கணும்!'
சென்னை அரசாங்கம்
வேண்டாம் இனி வேலை நிறுத்தங்கள்!
ஜூலை '58.
வேலை நிறுத்தம் ஓங்குக!
வாழ்க ஐந்தாண்டுத் திட்டம்
ராஜு.

'புரு' மார்க்
தீப்பெட்டிகள்

வெண்மையான குச்சிகள் மழை காலத்திற்கும்
காற்றுக்கும் உத்திரவாதமுள்ளவை.



விற்பனை டிப்போக்கள் :

கோயம்புத்தூர், கடலூர், மதுரை,
நாகப்பட்டினம், பாலக்காடு, பன்ருட்டி,
பய்யனூர், திருச்சி, திருவாரூர், விழுப்புரம்.

தந்தி : 'LOTUS'

தி லோட்டஸ் மேட்ச் ஒர்க்ஸ்

த. பெ. நெ. 52 : : சிவகாசி

INSTALL

DPF

PUMPS

DHANDAYUTHAPANI FOUNDRY PRIVATE LTD.,

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Phone: 219 - P.B. No. 278 - Grams: MOTORPUMP.



பார்சலை குழந்தை போல் அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்பட்ட 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றாப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SB 177a

தொடர் நாவல்

கு. ப. சேது அம்மாள்

அத்தியாயம் 21

ஒன்றுபட்ட உள்ளம்

சுகமாயினும், கஷ்டமாயினும் வரும்பொழுது தனித்து வருவதில்லை என்பது ஆன்றோர்களின் வாக்கு.

கந்தப்பனுடைய வாழ்க்கையில் கஷ்டத்தைத் தவிர சுகம் என்பதை அவன் அனுபவித்தறியான். கஷ்டம் என்பது அவனுடைய பிறப்புரிமை!

ஆனால் வினாத்தெரிந்த நாள் முதலாக அவன் அனுபவித்தறியாத கஷ்டம் இன்று அவனுடைய அந்திம காலத்தில் சம்பவித்து விட்டது.

மூக்கனுடைய வாயினால் வள்ளிக்கு நேர்ந்த துர்க்கதியைக் கேட்டதும் கந்தப்பனுடைய ஆவி துடித்தது.

அடதெய்வமே, தோளிலே சுமந்து வளர்த்தேனே, அந்த துரையா என் மகளைக் கெடுக்கப் பார்த்தான்? பாதுகாக்கக் கடமைப்பட்ட அந்தப் பிள்ளையா செய்தான் இந்த அநியாயத்தை!

"கடவுளே உனக்குக் கண்ணில்லையா?" என்று தீனமாகக் கதறியபடி உயிரும், உள்ளமும் துடிக்கக் குப்புறக் கிடந்து தேம்பியழும் குமரியைப் பார்த்தான்.

"அடி திக்கில்லாத பெண்ணே! அடே ஆறுமுகம், உன்னை இதுக்காகவா வளர்த்தேன்? கையை ஒடி, ஒடித்து அடுப்பிலே போடு. நான் வளர்த்ததெல்லாம் பேய்கள்! பேய்களையா வளர்த்திருக்கிறேன்? ஐயையோ......"

உன்மத்தம் பிடித்தவனைப் போல கந்தப்பன் உரத்த குரலில் அலறியதைக் கண்டு வள்ளி திடுக்கிட்டு எழுந்தாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு அருகில் வந்து நின்ற மகளைப் பார்த்து, "மகளே, பாவி வயிற்றிலே பிறந்து பரதேசியாயிட்டே. யாருமில்லாத அநாதியாயிட்டே! உன்னைக் கடவுளுதான் காப்பாத்த வேணும். ஆ, அப்பா, வலி உயிர் போகுதே.." என்று வீரிட்டவாறு ஒரு கேவு கேவினான் கந்தப்பன். முடங்கிய கால்கள் நீண்டன. விழிகள் நிலைகுத்தினதோடு ஆவி துறந்தான் ஏழை கந்தப்பன்!

வள்ளி பிரமைபிடித்து நின்றிருந்தாள்!

அந்த சமயம் லாந்தரும், கையுமாக உள்ளே நுழைந்த நாகு கந்தப்பன் கிடந்த கிடையைக்கண்டு

திடுக்கிட்டுக் குனிந்து பார்த்தான். அவன் முகம் வெளுத்தது.

பயத்தால் வார்த்தைகள் குளற, "என்ன மச்சான்?" என்றாள் வள்ளி.

"என்ன? ஒண்ணுமில்லே! ஆயிப் போச்சு எல்லாம்!" என்றான் குனிந்த பார்வையுடன்.

"அப்பா," என்று அலறியபடி கந்தப்பன் மார்பில் சாய்ந்தாள் வள்ளி.

இரவு கழிந்து பொழுது புலர்ந்ததும் உழவன் கந்தப்பனுடைய அந்திமக்கிரியைகள் ஆடம்பர மேதுமின்றி சடலம் மயானத்திற்குப் புறப்பட்டது. துக்கத்திற்கு வந்திருந்த தாயாரைப் பார்த்து, "அம்மா, வள்ளியம்மாளை நம் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறியா?" என்று கேட்டான் நாகு.

"ஆமாம்ப்பா, இங்கிட்டு அதைத் தனியா விடக்கூடாது" என்றாள் பூங்காவனம்.

தகன க்ரியைகளை முடித்துவிட்டு நாகு வீட்டுக்கு வந்ததுமே, வடபாதி எஜமானன் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது.

எழுந்து சென்றான் நாகு.

தென்பாதி பண்ணை விவகாரத்தில் சம்பந்தப்பட்டதைப் பற்றி ராமநாதய்யர் நாகுவைக் கோபித்துக் கொண்டார்.

நாகுவுக்கு வேகம் பிறந்தது! அன்றே வேலையிலிருந்து விலகிக் கொள்வதாகக் கூறிவிட்டு வந்துவிட்டான்!

நாகு வேலையிலிருந்து நீங்கிவிட்டதைப்பற்றி பாலம்மாளுக்கு உள்ளூர மிக்க வருத்தம். ஆனால் அதை அவரிடம் காட்டிக் கொள்ள முடியவில்லை!

ராமநாதய்யர் யோசனையுடன், "பாரேன், பண்ணையைப் பற்றி கவலையில்லாமல் இவனிடம் விட்டு விட்டு, பட்டணத்தில் குடித்தனம் போடலாம் என்று பார்த்தால், கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்ட கதை மாதிரி ஆகிவிட்டதே?"

"நமக்கும், அவனுக்கும் விட்டுப் போகணும் என்று எமனாக முளைத்தான் தென்பாதியான் பிள்ளை" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் பாலம்மாள்.

கவலையும், கோபமும் கொண்டவனாக வீட்டுக்குத் திரும்பி வந்த நாகுவைக் கண்டதும் அவன் தாயார் "சாப்பிடாமல் எங்கே போனாய் நாகு?" என்று கேட்டுவிட்டு தட்டை எடுத்துவைத்துப் பறிமாறினாள்.

"நீங்களெல்லோரும் சாப்பிட்டாச்சா?"

"யாருக்கு சாப்பாட்டிலே தேட்டம்? நானும், அகிலுவும் சாப்பிட்ட பேர் ஆச்சு, வள்ளியம்மாளுக்குத் தான் பிடி சோறுகூட இறங்கலே" என்றாள் பூங்காவனம்.

நாகு உணவை முடித்துக் கொண்டு, எழுந்து கையலம்பியதும் லோட்டாவை எடுத்துக் கொண்டு போய் காபி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான் வள்ளிக்கு!

பூங்காவனம் இதிலிருந்து நாகுவின் உள்ளுணர்வை உணர்ந்து கொண்டாள்! அவள் மூளை சுறுசுறுப்புடன் வேலை செய்யத் தொடங்கியது.

'சே! தாய், தகப்பனில்லை, செப்புக் காசுக்கு வழியில்லை, இருந்திருந்து என் மகனுக்கு இப்படியா வரணும் ஒரு பெண்சாதி? கூடாது. இதை முளையிலே கிள்ளியெறிந்தே விட வேண்டும்' என்ற நினைப்புடன் மெள்ள நாகுவிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"இருந்தாலும் ஆறுமுகத்துக்குத் தான் கொஞ்சம் யோசனை வேணும்? அண்ணன் தான் முடங்கிக் கிடக்குதே என்று இந்தப் பெண்ணை ஒருத்தன் கையிலே புடுச்சிக் கொடுத்திருக்கக்கூடாது?" என்றாள் கசப்புடன்.

நடையில் படுத்திருந்த வள்ளி எழுந்து மெதுவாக கொல்லைப்புறம் சென்றாள்.

இந்த சமயத்தில் சோமு நாகுவைக் கூப்பிடுவதாக வந்து சொன்னான்.

நாகுவுக்கு இந்தச் செய்தி தெம்பைக் கொடுத்தது. எழுந்து சென்று கொய்யாத்தோப்புத் திடலில் தனக்காகக் காத்திருந்த சோமுவைக் கண்டு இருவரும் நடந்து போன சந்திகளைப் பற்றி பேசி வருத்தப் பட்டுக் கொண்டிருக்கும் சமயம்



தொலேவில் தெரியும் சாலேயோடு வள்ளி கனவேகமாக நடந்து செல்வதைக் கண்டு எழுந்து ஓட்டமாக ஓடினான் நாகு.

சாலேயின் ஒரு ஓரத்திலிருந்த பாம்புப் புற்றை இடிக்க ஒரு பாருங் கல்லேத் தூக்கிவைத்துக் கொண்டிருந்த வள்ளியைக் கண்டுவிட்டு குடல் தெறிக்க ஓடிவந்து, "என்ன வேலேயிது, ஓடு சீக்கிரம்...நிற்காதே ஆபத்து" என்று பதறினான் நாகு.

"எனக்கு உயிரிலே ஆசையில்லே மச்சான்."

"எனக்கு உன் உயிர் வேணும். வீட்டுக்கு நட சட்டுனு."

"எங்க வீட்டுக்குப் போகிறேன்."

"சொன்னதைக்கேளு வள்ளியம்மா. என் மனசைப் புண்படுத்தாதே. நம் வீட்டுக் கடுத்த சவுக்கண்டியில் போய் உட்கார். எனக்கு எல்லாம் தெரியும். ஏதாவது செய்கிறேன்" என்று அவளேத் தெரு திரும்பும் வரையில் கொ[illegible] விட்டு, சோமு இருந்த இடத்திற்கு வந்தான்.

197696

நடந்த சங்கதியைக் கேள்விப்பட்டதும் சோமு வியப்படைந்தவனாக, வள்ளியின் சித்தத் துணிவையும் சுயகௌரவத்தையும் வெகுவாகச் சிலாக்கித்து விட்டு, "இப்போது நீ என்ன செய்யப்போகிறாய் நாகு?" என்று கேட்டான்.

"உன் ஒத்தாசைதான் வேணும் சோமு."

"என்ன ஒத்தாசை?"

"இதுவரையில் நான் சொன்னதிலிருந்தே, வள்ளியம்மாளை வீட்டில் வைத்துக்கொள்ள அம்மாவுக்கு இஷ்டமில்லை..."

"எங்கே அவள்மேல் உனக்கு ஆசை பிறந்து விடுமோ என்று,"

"ஆமாம் எனக்கும் இனி பிழைப்பு வேணுமில்லியா, ஆகையால், பட்டணத்திற்கு அவளைக் கூட்டி வந்து நல்ல இடத்திலே வேலைக்கு வச்சுடணும். என்னையும் எங்கேயாவது வேலையிலே வச்சிடு. இவ்வளவுதான் நான் எதிர் பார்க்கிறேன் உன் கிட்ட சோமு!"

"திவ்வியமாகச் செய்கிறேன் நாகு. பட்டணத்தில் அத்தையிருக்கிறாள். அவள் வீட்டில் வைத்துவிடலாம். ஒன்று மட்டும் நினைவு இருக்கணும் உனக்கு,"

"என்னது, நான் உன் ஆதரவிலே மெட்ராசு வருவது உன் அப்பாவுக்குத் தெரியக்கூடாது, அதுதானே?"

"ஆமாம். இப்போதைக்குத் தெரியவேண்டாம். சமயம் பார்த்துத் தெரியப்படுத்தவேண்டும்; அதற்காகத்தான் இப்பொழுது வேண்டாமென்பது. இன்னொன்று சொல்ல மறந்து விட்டேன் நாகு, தென்பாதி ஐயருக்குக்கூட ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறதாமே?"

"ஆமாம், என்னவோ போதாத காலம் அந்தய்யருக்கு."

"சரி. பத்தாம் தேதி ராத்திரி நான் புறப்பட்டாக வேண்டும். வேண்டிய ஏற்பாடு பண்ணிக்கொள். நான் போய் அந்தப் பழிகாரனைப் பார்த்து விட்டு வருகிறேன்..."

"எங்கே, கண்ணமங்கலம் போயா?"

"ஆமாம். இப்பவே போனால் இரவு பத்து மணிக்குத் திரும்பி விடக்கூடாது நாகு?"

"வேணும் சோமு, காலையில் போ. ஊர் கெட்டுக்கிடக்குது பார்" என்றான் நாகு.

"என் மனசு கேட்காது நாகு. போய்த் திரும்பினால் தான் தூக்கம் வரும். நீ போ வீட்டுக்கு. நாளைக்குப் பேசிக் கொள்ளலாம்" என்று கூறி எழுந்தான் சோமு.

நாகுவும் வீட்டை நோக்கி நடந்தான்.

இருவரும் எண்ணங்களுடன் போராடியவாறு நடந்தார்கள்.

நாகு உள்ளே வந்ததும் வராததுமாக, "நாகு, தென்பாதி ஐயருக்கு ஆவத்தா இருக்குதாமே, புரையோடி இருக்குதாம். காலை எடுக்கணுமின்னு சொல்றாங்களாமே டாக்ட்டரு" என்று படபடப்புடன் சொன்னாள் பூங்காவனம்.

"சொன்னது யாரு அம்மா?"

"நம்ம மூக்கண்டா!" என்றாள்.

சவுக்கண்டியிலிருந்த வள்ளி இந்தச் சங்கதி காதில் விழுந்ததும் எழுந்து வந்து முழுவதும் கேட்டுவிட்டு, "கந்தப்பன் மேலே ஐயருக்கு உயிர். ஐயர் மேலே கந்தப்பனுக்கு உயிர். சாதியிலே என்ன இருக்கு மண்ணாங்கட்டி! ஒருத்தர் செத்துட்டார். இன்னொருத்தர் சாகப்பார்க்கிறாராக்கும்! அந்தரங்க விசுவாசம் என்கிறமே, அது இதுதான் ஆச்சி!" என்றாள் வள்ளி.

நாகு திடுக்கிட்டு விழித்தான். 'கழனி வெளியிலும், வீட்டிலும் பாடுபடத்தான் தெரியும் என்று இருந்தேன்; இதெல்லாம் கூடத் தெரியுமா உனக்கு?' என்று கேட்பது போல் இருந்தது அவன் பார்வை.

"ஆமாம். அது மெய்தான். உங்கப்பாரைப் போன்ற எஜமான விசுவாசம் யாருக்கு இருக்குது இந்தக் காலத்தில்? பாவம், அவர் குணத்துக்கு இந்த மாதிரி நோயும், சாவும் வந்தது ரொம்ப அனியாயம்" என்று அங்கலாய்த்தாள் பூங்காவனம்.

தாயாரின் இந்தப் பேச்சால் வள்ளி எங்கு கண் கலங்குகிருளோ என்று சட்டெனத் திரும்பிப் பார்த்தான் நாகு.

அவள் கண் கலங்கவில்லை! வெறித்த பார்வையுடன் தன்னை மறந்தவளாக நின்று கொண்டிருந்தாள்.

"எது நியாயமாக நடக்குது உலகத்தில்! இது இருக்கட்டும். காபி கீபி ஏதாவது போட்டியா என்ன சங்கதி?"

"மூணுமணிக்கே போட்டுவிட்டு உன்னைப் பார்த்தால் உன்னையும் காணோம், வள்ளியம்மாளையும் காணோம். அப்படியே அடுப்பு மேலே வச்சு மூடியிருக்கிறேன். இதோ கொண்டு வருகிறேன்" என்று கூறிய வண்ணம் உள்ளே போய் இரண்டு டம்ளர்களில் காபியை ஊற்றி எடுத்து வந்து வள்ளியிடம் ஒன்றும், நாகுவிடம் ஒன்றும் கொடுத்தாள்.

நாகு காபியைக் குடித்துவிட்டு, "அம்மா, உன்கிட்ட கொஞ்சம் பேசணும், உட்காரு இப்படி" என்ருன் நாகு.

சமயமறிந்தவளாக வள்ளி நடைப் பக்கமாகச் சென்ருள். பூங்காவனம் கலவரத்துடன், "என்ன, என்ன சங்கதி?" என்று கேட்டு விட்டு உட்காரவும், "நல்ல சங்கதி தான். மிரளாமல் உட்காரு. இந்தப் பொண்ணு விஷயம் நாம் உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்தாகணும்."

"ஆமாடாப்பா. முதல் வேலையாகச் செய்து ஆகணும்! கன்னி கழியாதது அது, நீ வயசு ஆம்பிள்ளை."

"அதான், அதான், அதுக்குத் தான் ஒரு வகையா முடிவு பண்ணியிருக்கிறேன்."

"என்ன பண்ணியிருக்கிறே?"

"நம் பண்ணையார் மகன் சோமுவுக்குப் பட்டணத்தில் வேலையாயிட்டதாம். அதனுலே எஜமானரும், அம்மாவும் பட்டணத்தோட போகப் போகிருங்களாம்..."

"பண்ணை?"

"அது பாட்டுக்கு இங்கேயே இருக்கும்!"

"அட நீ ஒண்ணு. அதை வச்சு நடத்துறது யார்னு கேட்டா?"

"குத்தகைக்கு அடச்சுடப் போகிருங்க."

"நீ எடுக்கப் போறியா குத்தகை"

நாகு ஒரு கணம் திணறி விட்டு, "அது இன்னும் செட்டிலாக வில்லை. அது கொஞ்சம் நாளாகும். இது கெடுபிடியாச்சே!"

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்குதம்மா! சோமுவுட அத்தை இருக்கிருங்களாம் அங்கே. ரொம்ப நல்ல மாதிரியாம். அவங்க வீட்டிலே வேலைக்கு வைச்சுடலாம்னு சோமுவும், நானுமாகத் தீர்மானித்திருக்கிருேம். நீ என்ன நினைக்கிறே?"

"மனுசாள் நல்லவங்களானுல் வச்சுடறது தான் நல்லதப்பா. ஏதோ கடவுளு புண்ணியத்திலே அவங்க சித்தப்பாரு வந்து சேர்ந்துட்டால் அப்புறம் அவுங்கபாடு" என்று கூறி நிம்மதியாக மூச்சு விட்டாள் பூங்காவனம்.

தாயின் உள்ளத்தை செம்மையாகப் புரிந்துக் கொண்டான் நாகு. மனதில் வேதனை உதித்தது அவனுக்கு. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "அப்படின்னுல் வள்ளியம்மாளை அங்கே கொண்டு அமர்த்திட்டு வந்திடலாமில்லியா?"

"யாரு, நீயா போகப் போறே?"

"போகாம எப்படி முடியும்? தனியாக அதை அனுப்பலாமா,

அனுப்பினுல் போகுமா அது ?'' என்று கேட்டான் குத்தலாக.

"ஆமாம். கொண்டு வச்சிட்டுத் தான் வரணும்'' என்ருள் பூங்காவனம்.

'இந்த மட்டில் ஒப்புக்கொண்டாயே மகராசி' என்று மனத்துள் நினைத்துக் கொண்டான் நாகு.

"ஆமாம் செலவுக்குப் பணம் ?" என்று கேட்டாள் பூங்காவனம்.

"இனிமேல் தான் ஏற்பாடு செய்யணும். ஏம்மா, அக்கம் பக்கத்திலே எங்கியாவது ஒரு அம்பது ரூபா கடன் கிடைக்குமா? அடுத்த மாசம் ஐயர் கிட்டக் கேட்டு வாங்கிக் கொடுத்துடலாம்."

"நவநீதம் நேத்துத்தான் சீட்டு எடுத்திருக்கிரு, கேட்டுப் பார்க்கிறேன். கொடுப்பாள்'' என்ருள் பூங்காவனம் சிரத்தையுடன்.

வள்ளியை வீட்டைவிட்டு வெளியேற்றுவதில் தாய்க்குள்ள அக்கரையைக் கண்டு நாகுவின் உள்ளம் கனன்றது. "காலையிலே கேட்டு சொல்லு. அதுக்கு மேலே யோசிப்போம்'' என்று கூறிவிட்டு எழுந்து வாசலுக்கு வரும்போது நடையிலிருந்த வள்ளியிடம், "கவலைப் படாதே. தைரியமா இரு. என்னை நம்பு வள்ளியம்மா'' என்று மூன்று வார்த்தைகளை மெல்லிய குரலில் ஓதிவிட்டு வாசலை நோக்கி நடந்தான் நாகு.

சொட்டுத் தேனினுல் நாவெல்லாம் இனிப்பாகி விடுவது போல, நாகுவின் சின்னஞ்சிறு ஆறுதல் மொழியால் வள்ளியின் மனதெல்லாம் நினைவெல்லாம் தித்தித்தது.

அத்தியாயம் 22

பட்ட காலிலேயே பட்டது.

வாலிப வயதில் எவ்வளவு சிரமமும், கஷ்டமும் வேண்டுமானுலும் படலாம். வயோதிக திசையில் சௌக்யமாக இருப்பவர்களே சுகிர்தசாலிகள் என்பது அனுபவஸ்தர்கள் கூறும் வாக்கு !

சிவராம ஐயரோ, வாலிப வயதில் சௌக்யமும் சந்தோஷமுமாக வாழ்ந்துவிட்டு அந்திம காலத்தில் சொல்லொண்ணுத துக்கமும், சிரமமும், வேதனையும் தேக உபாதியுமாகத் தவித்தார் !

"அப்பனே, ஷண்முகா. தாங்கவில்லையடா'' என்று கதறினுர். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்தார்கள் உறவினர்கள் !

அன்னம்மாளின் தமையனுன பஞ்சநதம் டாக்டரை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

நோயாளியைப் பரீட்சித்துப் பார்த்து ஒரு ஊசி போட்டுவிட்டு பஞ்சநதத்தை அழைத்துச் சென்று முழங்கால் வரையிலுள்ள பாகம் 'ஸெப்டிக்' ஆகிவிட்டதால் காலை வெட்டி எடுத்தாக வேண்டுமென்றும்,உடனே டாக்சி வைத்து கண்ணமங்கலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் கூறிவிட்டு, புறப்பட்டார்.

பஞ்சநதம் மூலமாக சங்கதி தெரிந்ததும், "சிவனே, வேண்டாம் ! ஜாதகரீதியாக என் ஆயுசு இவ்வளவுதான் அக்கா ! ஆணி குத்தின காயம் ஆறுமாதமாக ஆருதது இதற்குத்தான்."

"அம்பி, வலிதாங்கா விட்டால் எதுவேணுச் சொல்லுகிறதா ? என் மனசு என்னமாடா இருக்கும் ?"

"ஐயோ அக்கா, இனிமேல் பிழைக்க மாட்டேன். அன்னத்தை அந்த அஸத்து கையில் காட்டிக் கொடுக்காதே......"

"சிவா, என்கண்ணே, கேட்கச் சகிக்கல்லேடா. என்னை எடுத்து எரிந்து விட்டுன்னுடா நீ போகணும் ?" என்று எதற்கும் கலங்காத

திடசித்தம் படைத்த கமலம் தைரிய மிழந்து ஆவிகுலைய அலறினாள்.

"அழாதே அக்கா, என் தாயே. உன்னைத் தவிக்க விட்டு விட்டு போகிறேன். தைரியப்படுத்திக் கொள். அரும்பாடுபட்டு என்னை வளர்த்தாய். உன்மாரிலே போட வேண்டிய நெருப்பை உன் வயிற்றிலே போட்டு விட்டுப் போகிறேனே அதுதான் எனக்கு நெஞ்சுக் குறை, அன்னத்துக்கு உலகம் தெரியாது. ஒரு மாச முன்னேயே எல்லாம், எதெது எப்படிச் செய்யணும் என்று 'வில்' எழுதி வைத்திருக்கிறேன். எதிர் வீட்டு சாமாவிடம் எல்லாம் சொல்லியிருக்கிறேன். அந்த தூர்த்தன் கை நெருப்பு இல்லாததே க்ஷேமம். கோவிந்தாக் கொள்ளி போடச் சொல்லு..."

"ஐயோ, சிவா. பேசாமலிரேன்" என்று கதறினாள் கமலம்.

அன்னம்மாளோ குலதெய்வத்திடம் முறையிட்டபடி நெய் விளக்கேற்றி, "தண்டாயுதபாணி, காலை சொஸ்தம் பண்ணு. காவடியோடு நடந்து வருகிறோம். என் வயிற்றிலே பாலை வார். உனக்கு பாலபிஷேகம் பண்ணிவைக்கிறேன்" என்று கண்ணீர் சோர பிரார்த்தனை செய்து கொண்டு, காபியெடுத்துக் கொண்டு வந்தாள் ஐயரருகில்.

சற்று அயர்ந்திருந்த ஐயர் மறுபடி கண்விழித்துப் பார்த்து," அன்னம், இப்படி வந்து உட்காரு. நீ நல்ல பூஜை செய்து பிள்ளையைப் பெறவில்லை. அவனைப்பற்றி கவலைப் படாதே. இனிமேல் அவன் ஆயுசுக்கும் பஞ்சமில்லை! அக்காவைப் பார்த்துக் கொள். வெறுமனே அழாதே..."

அன்னம்மாள் உடல் பதற அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு, "பழநியாண்டிமேலே ஆணையிட்டு காப்பாத்து என்று வேண்டிக் கொண்டிருக்கிறேன். உடம்பு தேவலையாகி விடும். என்னை பயமுறுத்தாதேயுங்கள்" என்று அழுதாள்!

இந்தப் பரிதாபக் காட்சியைக் காணச் சகிக்காமல் எழுந்து அப்பால் சென்றாள் கமலம்.

"அன்ன லக்ஷ்மி, என் தங்கமே எனக்கு முன்னே நீ போய் விடுவாய், நித்திய சுமங்கலியாக இருப்பாய் என்று இருந்தேன். ஒரு பாபமும் அறியாத உனக்கு குருநாதன் இந்த அபாக்கியத்தைக் கொடுக்கிறார்."

"ஏதுக்கு இப்படியெல்லாம் சொல்லுகிறீர்கள்?"

"பைத்தியமே, ஆபத்பந்து, ஹரே கிருஷ்ணா, நாராயணா, என்ன உபாதி, என்ன ரணஉபாதி ஆறு மாசமாக..."

"அம்மா" என்ற குரலுடன் கருப்பையா அங்கே தோன்றினான். "என்னடா, என்னமாக இருக்கிறான்?" என்று தேம்பினாள் கமலம்.

"நினைவு வர இன்னும் நாலு மணி நேரமாகுமாம். நம்ம வாசு கிட்டத்திலே இருக்கு. நர்சம்மா இருக்கிறாங்க. ஐயருக்கு எப்படியிருக்கம்மா? டாக்டர் வந்தாரா?"

"வந்து பார்த்து, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறார். டாக்ஸிக்கு ஆள்போயிருக்கு" என்று பெருமூச்சுடன் கூறினாள் கமலம்.

"அட சிவனே" என்று அயர்ந்து நின்றான் கருப்பையா.

"அக்கா, அன்னம், இப்படி உட்காரு. கருப்பையா, எல்லாரையும் கவனித்துக் கொள்ளடாப்பா. அப்பனே, பிராணசக்தி ஒடுங்குகிறது. துஷ்மனா துராசாரியோ, சாகிற சமயத்தில் பக்கத்திலில்லை! அவன் நன்றாக இருக்கணும் என்று பட்டபாட்டுக்கு நலம் குலையக் கண்டேன். போதும் அப்பா ஷண்முகா, நாராயணா..." என்று புலம்பி அடங்கினார் ஐயர்.

மெள்ள அடங்கி வந்த மூச்சுடன் மலர விழித்து ஆவி துறந்தார் ஐயர்!

போன் : 86729

தந்தி : NEWTYPES

எல்லாவிதமான அச்சு
எழுத்துக்களையும் சிறந்த
முறையில் தயார்
செய்பவர்கள் :

★

நியூடன்
டைப் பவுண்டரி

தமிழகத்தின் சிறந்த
அச்சுக்கூடங்கள்,
பத்திரிகைகள் ஆகியவற்றிற்கு
நாங்கள் சப்ளை செய்கிறோம்

★

நியூடன் டைப் பவுண்டரி
80, வாலாஜா ரோடு
சென்னை-2.

வீடு அதிர அலறி அழுதார்கள்!

ஜன்ம சத்துருவான ராமநாதய்ய ருடைய மனதையும் கரைத்து விட்டது பரிதாப மரணம்! போய் விட்டார் என்ற செய்தி கேட்டதும், பலபலவென கண்ணீர் உதிர்த்து, "மானி, மனுஷன்! பிராணனைக் கொடுத்து விட்டான்! அடடா, என்ன கண்ராவி. த்ஸொ த்ஸொ... அடிபாவம், ஐயர் காரியம் ஆகிவிட்டதாமடீ?" என்று இரைந்தவாறு உள்ளே வந்தார்.

"அடடா! என்ன அநியாயம்! அந்தப் படுபாவிப்பிள்ளை, அப்பனை சந்தோஷமாக வைக்கத் தெரியா விட்டாலும், கர்மாவைச் செய்யக் கூடஇல்லாமல்...சேச்சே இருந்தாலும் மனுஷாளுக்கு இந்த மாதிரி கஷ்டம் வரவே கூடாது."

"வந்தாகி விட்டது! இனிமேல் என்ன?"

"கிழவி இருக்கிருள் கல்லைப் போல, அவள் போகப் படாதோ பதமாக? பாவம், அன்னத்தை நினைத்தால் வயிறெரிகிறது. உடம்பு நிறைய நகையும் நெற்றிக் குங்குமமும், புடவை ரவிக்கையும், மகாலக்ஷ்மியாட்டமா இருப்பாளே! சூது வாது ஒண்ணுதெரியாது. அவளுக்கு வர்ரகஷ்டமில்லை இது" என்று கண்ணீர் சிந்தினுள் பாலம்மாள்.

"இதோடு போச்சா? இன்னும் அந்தப் பிள்ளை கதி எப்படியோ? அடடா, ரொம்பப் போதாத காலம். பகைமை ஒரு சட்டி நெருப்பிலோ, ஒரு சட்டி பருப்பிலோ கூட வேண்டும் என்பார்கள் பெரியவர்கள். போய்ப் பார்க்கிறேன். முன்னடியே எல்லாம் தெரிந்து சொத்து பூரா ஒழுங்கு பண்ணிவிட்டாராம். கையிலே என்ன இருக்கிறதோ இல்லையோ? சின்ன மரப் பெட்டியிலே ஒரு பையில் சில்லறையிருக்கிறது. அதிலிருந்து நூறு ரூபாய் எடுத்துத் தனியாக வை. வேண்டியிருந்தால் எடுத்துக் கொள்ளலாம். மணி அஞ்சாகிறது" என்று கிளம்பினுர் ஐயர்.

"அவர்கள் துடுக்காக ஏதாவது சொன்னல்?" என்ருள் பாலம்மாள்.

"சொல்லட்டுமே! போகமலிருக்க மனசு வரவில்லை. குடும்பம் அலைந்து போய்விட்டது பார். சற்றுக் கெல்லாம் நீயும் வா" என்று கூறி விட்டுச் சென்ருர் ராமநாதய்யர்.

ஊருக்கு உயர்வாக வாழ்ந்த சிவராமய்யர் இன்று ஊரே கண்டு அங்கலாய்க்கும் கதியில் அவருடைய காரியங்கள் நடை பெற்றன.

ராமநாதய்யர் இருந்து யாவற்றையும் நடத்திவைத்தார். பாலம்மாள் அன்னத்திற்கும், கமலத்திற்கும், ஆறுதல் கூறிவிட்டு வந்து காபி, சமையல் எல்லாம் தயாரித்து வண்டியில் வைத்து அனுப்பினுள். வண்டியுடன் சோமு போய் யாவற்றையும் இறக்கி வைத்து, பரிதபித் தழும் கமலத்திற்கும், அன்னத்திற்கும் தைரியம் கூறி துரையைப் போய் பார்த்து விட்டு வந்து செய்தி தெரிவிப்பதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டு வந்தான்.

அவன் வந்ததுமே, "ஏனடா சோமு, நாகுவைப் பார்த்தாயோ அப்புறம்?" என்று கேட்டாள் கவலையுடன்.

"பார்த்தேன்"

"என்ன சொல்லுகிறுன்? இனிமேல் பயிர்ச் செலவு பண்ணமாட்டானுமா?"

"பண்ணமாட்டேன் என்று சொல்லவில்லை. கொஞ்சநாள் வேலையிலிருந்து விட்டு அப்புறம் வந்து செய்வானும்."

"வேலையா? என்ன வேலை? எங்கே போய் செய்யப் போகிருனும்?"

இதுதான் சரியான சமயமென்று நினைத்து, "என் கூடபட்டணம் வருகிருனும். ஏதாவது வேலை தேடி வைக்கச் சொல்லுகிருன்! பைத்தியக்காரன்." என்று சிரித்தான் சோமு!

"அவன் ஒன்றும் பைத்தியக் காரனில்லை! ரோசக்காரன்,

யோக்கியன். அவனைப்போய் உங்கப்பாதாறுமாறுகப் பேசினதும் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது...''

"அவனைக் கோபித்துக்கொண்டு விட்டு இவரேன் இப்பொழுது விழுந்தடித்துக்கொண்டு ஓடினுராம் அவர்கள் வீட்டுக்கு?''

"யார் கேட்பது அவரை? நீ ஒன்று செய் சோமு. நாகுவை நீ அழைத்துக் கொண்டுபோய் உன் ரூமில் வைத்துக் கொள். ஒரு சாப்பாடு எடுத்தால் இரண்டு பேர் சாப்பிடலாமல்லவா?''

"சாப்பிடலாம். சொல்லு,''

"எடுத்து சாப்பிட்டுக் கொண்டு அவனுக்கு வேலை கிடைத்தாலும் தனியாக விடாதே. உன் ரூமிலேயே வைத்துக் கொள். ஒரு வருஷத்திற்குள் பட்டணம் 'சீ'என்று ஆகிவிடும் அவனுக்கு. அப்பொழுது அனுப்பி விடு அவனை. சரியாகப் போகிறது'' என்றுள் பாலம்மாள்.

"ஏனம்மா இவ்வளவு பாடு. இவன் போனல் வேறே ஆளு அகப்படமாட்டானு நமக்கு?''

"ஆள் கிடைப்பான்கள். ஆனல் நாகுவைப்போலநாணயஸ்தன்இனி மேல்பிறந்து வந்தால்தான் உண்டு. உனக்கென்ன தெரியும் அவனைப் பற்றி. பேசாமல் சொன்னபடி கேள். கூட்டிக் கொண்டு போ அவனை......''

"அவனுக்கும் சார்ஜ் கொடுத்து''

"அட பிரமாதம் பத்து ரூபாய்! ஏதேது அப்பாவுக்கு மேலே கஞ்சப் பிரபுவாக இருக்கிருயேப்பா? எப்ப புறப்படணும் உனக்கு?''

"நாளை நின்று மறு நாளிரவு புறப்பட்டாக வேண்டும். அந்தப் பாவி கதி என்ன ஆகுமோ?''

"அதைப் பற்றி உங்கப்பா கவனித்துக் கொள்ளுவார்'' என்றுள் பாலம்யாள்.

நிம்மதியுடன் தூங்கச் சென்ருன் சோமு.

மறுநாட் காலையில் நாகு சோமுவை எதிர்பார்த்துக்கொண்டு திடலில் உட்கார்ந்திருந்தான்.

சோமு வரும்போதே, "ரொம்ப நேரமாக காத்துக் கொண்டிருக்கிருயோ நாகு?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

"ஆமாம், ஐயர் தலையோட பகையும் போய்விட்டாப் போலிருக்குதே!'' என்ருன் நாகு.

"ஆமாம்ப்பா, அப்பா மனசு மாறினது அதிசயமில்லையா நாகு?''

"அதிசயமில்லைசோமு! இது யுகம் யுகமாக நடந்து வரும் வளமுறை! ராவணனைக் கொன்றுவிட்டு ராமன் அழவில்லையா?வாலியைக் கொன்றுவிட்டு அவன் தம்பி அழவில்லையா? மனிதன் உயிரோடு உள்ளவரை தானே பகை? குப்பன் வீட்டிலே பாரேன். அவன் உயிரோடு இருந்தவரையில் அவன் தங்கையும்,பெண் சாதியும் அடித்துக்கொண்டு நின்னது நமக்குத் தெரியும். இப்ப பாரு, அவன் மண்டையைப் போட்டதும் இரண்டு பேரும் ஒண்ணுகியிருக்கிருங்க. ஐயரு செத்ததும் நம்மய்யரு போனதுகேட்டு எனக்கு இதெல்லாம்நினைப்பு வந்திட்டுது!''

"அது கிடக்கு. உன்னைக் கட்டாயமாக மெட்ராசுக்குக் கூட்டிக் கொண்டு போகணுமாம்!''

"யார் சொன்னது இப்படி?''

"அம்மாதான்''என்று கூறி நடந்த வரலாற்றை சோமு கூறியதும் எஜமானி தன் மீது வைத்துள்ள அபிமானத்தைக் கேட்டு நாகுவுக்கு புல்லரிப்புக் கண்டது! கண்களில் நீர் முட்டியது!

அதைச் சுண்டிவிட்டு, "வள்ளி வருவதைக்கூட சொன்னுயா சோமு?''

"அதை இப்போது சொல்லக் கூடாது! அதற்கொரு சமயம் வரும்''

"உன் தாயார் சங்கதி என்ன? உன்னை அனுப்பச் சம்மதம்தானு அவளுக்கு?''

"சம்மதத்தோடு மட்டுமில்லை. பயணம் நின்று விடக்கூடாதே என்று ஐம்பது ரூவா கடன்கூடக் கேட்டு வாங்கிக் கொடுத்துவிட்டாள்!''

"வள்ளியை வெளியேற்றுவதில் உள்ள அக்கறை?"

"ஆமாம் அதேதான்!"

"அவளை நீ விரும்புகிருயென்பது தெரியுமோ அவளுக்கு?"

"நன்ருகத் தெரியும்!"

"என்ன ஆட்சேபனை அவளுக்கு?"

"பெண் ஏழை. நாதியில்லாதவள்"

"அவ்வளவுதானே?"

"ஆமாம்.வள்ளியின் குணம் நடத்தையைப் பற்றி அதுக்கு நன்ருகத் தெரியும்."

"அது மட்டில் திருப்தி. நல்ல வேளையாக நான் வந்து சேர்ந்தேன் பார் சமயத்திற்கு. அம்மா, அப்பாவை அழைத்துப் போகலாம் என்று வந்தேன். அதுமாறி உன்னையும் வள்ளியையும் கூட்டிப் போகப் போகிறேன்!"

"நானும் பண்ணையிலிருந்து விலகப் போவதாகக் கனவு கூடக் காணலே. நாம் ஒன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது" என்ருன் நாகு.

"நடக்கட்டும் நாகு! நேரமாகிறது. நாளைக்குச் சந்திப்போம் மறுபடி" என்று கூறி வீட்டுக்கு வந்து உணவை முடித்துக் கொண்டு சிந்தனையிலாழ்ந்தவனுக சோபாவில் சாய்ந்தான்!

அத்தியாயம் 23

திரும்பு முனை

யோசனையிலாழ்ந்திருந்த சோமு அதனின்றும் விடுபட்டவனுக சமையலறையை நோக்கிச் சென்ருன். அடுப்பங்கரையில் வேலையாக இருந்த தாயாரை அணுகி, "அம்மா, அப்பா வந்தால் நான் தஞ்சாவூர் போயிருக்கேன்னு சொல்லு, அவர் நாளைக்குப் போகட்டும்."

"தஞ்சாவூருக்கா!" என்று பிரமித்தாள் பாலம்மாள்.

"ஆமாம்மா, வருஷக்கணக்கா ஒரு ரூம்லே இருந்து பழகிட்டோம். அவனைப் பார்க்காமல் புறப்பட்டுப் போனுல் அங்கே இருப்பே கொள்ளாது எனக்கு. அதனுலே இந்த 'ஒன்பதரை'யிலே புறப்பட்டுப் போயிட்டு ராத்திரியோ,காலை வண்டிக்கோ வந்துடறேன்."

"ஏண்டா, நாளை ராத்திரியே மறுபடி தூக்கம் முழிக்கணுமே."

"நாகுதான் கூடவரானே அம்மா. அவனை முழிச்சிருக்கச் சொல்லிட்டு ஹாய்யா 'பெர்த்'லே ஏறிப் படுத்துண்டுடமாட்டேன்?"

"என்னவோ உன் பாடு"

"உனக்கு மனசில்லைன்னு நான் போகல்லேம்மா."

"போ, போ, உன் மனசு சுணங்குவானேன். போயிட்டு வா" என்ருள் பாலம்மாள்.

சோமு உத்தேசித்தபடி 'ஒன்பதரை' ரயில் தவறி விட்டதால் பஸ்ஸில் பிரயாணம் செய்து பிற்பகல் நாலு மணிக்கு தஞ்சாவூர் வந்து ஜட்கா பிடித்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்து, உடல் பதைக்க உள்ளம் பதைக்க துரையின் கட்டிலருகில் பாய்ந்து சென்ருன்.

அவன் கிடந்த கிடையைக் கண்டு சோமுவுக்கு வயிற்றை அள்ளிப் பிடுங்கியது. வாஞ்சையும், துக்கமும் கொந்தளிக்கும் குரலில், 'துரை' என்று கூப்பிட்டான் சோமு.

மூடிக்கிடந்த துரையின் கண் இமைகள் விலகின. அருகில் அமர்ந்திருந்த சோமுவின் கரத்தைப் பிடித்துக் கொண்டான் துரை. அவன் கண்கள் கலங்கின. பேசத் துடித்தன அவன் உதடுகள். ஆனுல் குறுக்கும் நெடுக்குமாக கட்டுகள் பரவி இருந்தன.

"பேசவேண்டாம் நீ, துரை, பிழைச்சு எழுந்து வந்தால் போறும்டா."

"நான் சாகத்தாண்டா வேணும்" என்று அவன் வாய் அசைந்தது.

"உம், பேசாமலிரு. கட்டு அசையறது. நர்ஸ் வரா அதோ" என்று துரையின் கண்களைத் துடைத்தான் சோமு. அவள் அருகில் வந்ததும் நோயாளியைப் பேச வைக்கக்கூடாதென்று எச்சரித்து துரையின் வாயில் துளித்துளியாக மருந்தைச் செலுத்திவிட்டுப் போனாள் நர்ஸ்.

"துரை, பைத்தியக்கார எண்ணங்களையெல்லாம் இந்த ஆஸ்பத்திரியோட விட்டுவிடு. உன் வீட்டுக்கு இனிமேல் நீதான் கர்த்தா. அதனாலே உடம்பைக் கவனிச்சுக்கணும். உன்னைக் கண்டுதான் அவா தேறுதலடையணும். உன்னைப் பார்க்கணும்னு நேத்திக்கு கண்ண மங்கலம் ஆஸ்பத்திரிக்கு வந்தேன்..."

"ஊரிலிருந்து எப்போ வந்தாய்" என்று ஜாடை செய்து கேட்டான் துரை.

"வந்து மூணு நாளாச்சு. வந்ததும் சமாசாரம் காதிலே பட்டது. நான் வரத்துக்குள்ளே, நீ இங்கே வந்துட்டேன்னு தெரிஞ்சுது. எங்கப்பா இங்கெங்கே வந்தாரங்கறையா, உன்னைப் பார்க்கத் தாண்டா! அவர் மனசு இப்போ ரொம்ப மாறிப் போச்சு. ஒண்ணும் மனசிலே வச்சுக்காதே. கவலையே படாதே. பொல்லாத வேளை. நேர வேண்டியது நேர்ந்து போச்சு. நல்லதனமா உடம்பைத் பார்த்துக் கொண்டு வீடு வந்து சேரு. நான் நாளைக்கு போய் விட்டு அடுத்த மாசம் வரேன். நீ பழையபடி எழுந்து நடக்கறதைப் பார்த்தாத்தாண்டா என் மனசு குளிரும்" என்று கண்ணீர் பொங்க மெல்ல துரையின் முகத்தையும் பிடரியையும் தடவிக் கொடுத்தான். 'படுபாவி, அடாத காரியத்தைச் செய்து படாத அவமானத்தையும்பட்டு, ரத்த நஷ்டமும் பட்டாயே,' என்று சோமுவின் உள்ளம் புலம்பியது. தெய்வ கிருபையில் இசிவு கிசிவு எடுக்காமல், ஜுரம் வராமல், ஸெப்டிக் ஆகாமல் சொஸ்தமாகணுமே, என்று பரிதவித்தான்.

வலியும், சிரமமும் தாங்காமல் முனகினான் துரை. வேறொரு நர்ஸ் வந்து க்ளுகோஸ் வாட்டர் கொஞ்சம் கொடுத்துவிட்டுப் போனாள்.

ஐயர் காலமான செய்தி துரைக்குத் தெரிந்ததாகத் தெரியவில்லை. சற்றுக்கெல்லாம் கருப்பையாவும், துரையின் தாய்மாமன் பஞ்சநதமும் வந்தார்கள். சோமு அவசரமாக எழுந்து முன்சென்று, "துரைக்கு சேதி தெரியுமா?" என்று பஞ்சநதத்தைக் கேட்டான் ரகசியமாக.

"தெரியப்படுத்தக்கூடாது என்றிருக்கிறார் டாக்டர். நீ சொல்லி விட்டாயா?" என்றார் அவர் பீதியுடன்.

"சொல்வேனா?" என்று பேசிக் கொண்டு மூவரும் படுக்கையருகில் வந்தார்கள். 'துரை' என்றார் துயரம் தோய்ந்த குரலில் பஞ்சநாதம்.

கண்களைத் திறக்கு முன்பே, குரல் மாமாவினுடையது என்பது தெரிந்துவிட்டது துரைக்கு. அவருக்கு எப்படி செய்தி தெரிந்து வந்தார் என்ற நினைப்பு வந்ததும் அவமானமும், துக்கமும் அவன் நெஞ்சை வெதுப்பின.

"தூங்குது போலிருக்குது. எழுப்ப வேணாம். அதுவா எழுந்துகட்டும்" என்று சொன்னான் கருப்பையா. ஆனால் உண்மையில் துரை தூங்கவில்லையென்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அவன் அனுபவமிக்க வேலைக்காரனல்லவா?

"சரி. கருப்பையா, துரை எழுந்திருந்ததும் நான் போயிட்டு மறுபடி வரேன் ஒரு மாசத்திலேன்னு சொல்லு அவன்கிட்ட. எனக்கு வண்டிக்கு நேரமாச்சு" என்று எழுந்தான் சோமு.

சோமு போகிறானே என்று அடித்துக்கொண்டது துரையினுடைய மனம். மறுபடியும், ஒரு அருமை, யார் வந்தாலென்ன,

யார் போனுல் என்ன,என்று தோன்றிய நினைவில் பேசாதிருந்தான் துரை.

ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வந்து, பஸ்ஸில் ஏறி நாற்பது மைலேயும் கடந்து, ஊர் வந்து சேருமட்டும் துரையின் முகத் தோற்றமும் பாண்டேஜும் மனக் கண்ணை விட்டு அகலவேயில்லை !

என்ன கேவலம்,என்ன வெட்கக் கேடு, என்ன தலை குனிவு! சேச் சேச்சே! எவ்வளவு புத்திமதி கூறியும், அவனுடைய கிரஹசாரம் அவனை விடவில்லையே ! இந்த அபக்யாதி, தலைமுறை தலைமுறையாக வழங்கிக் கொண்டு வருமே என்கிறது அந்த மடையனுக்குத் தெரியவில்லையே கொஞ்சம்கூட ! இவ்விதமான துயரங்களில் வேதனை நிரம்பிய மனத்தினனுக வீடு வந்து சேர்ந்தான் சோமு.

கூடத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த அவன் தகப்பனுர், "என்னமாடா இருக்கான்?" என்று கேட்டார். சோமுவின் குரல் கேட்டதும் பாலம்மாள் ஓடி வந்தாள்.

"நல்ல பிரக்ஞை வந்துடுத்து. இனிமேல் பிராண பயமில்லைன்னு தோன்றது. நான் வரப்போ, கருப்பையாவும், அவன் மாமாவும் வந்தா."

"தகப்பனுர் போயிட்டதை..."

"இல்லையில்லை, தெரியாது அவனுக்கு. டாக்டரும் இன்னும் ஒரு வாரத்திற்கு சொல்லக்கூடாதுன்னு சொல்லியிருக்காரும். நான் கூட ஏதோயோசனையிலே, 'நீதான் இனிமேல் உன்விட்டுக்குக் கர்த்தா'ன்னு சொல்லிட்டு, சட்டுனு முழிச்சிண்டேன்! அவனுக்கு ரண இசிவு பாவம். ஒண்ணும் அவன் காதிலே ஏறல்லே. கட்டுப் போட்டிருக்கிற கண்ராவி, பார்க்கச் சகிக்கல்லேம்மா!" என்ருன் சோமு.

"அவனு விலை கொடுத்து வாங்கினுன் இந்த ஆபத்தை!" என்ருள் பாலம்மாள்.

"பிள்ளை மண்டை உடைஞ்சஅதிர்ச்சியேதான் அவரை" என்ற ஐயரை இடைமறித்து.

"ஊம், அது போற பிராணன் தான். இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாள் இழுத்துப் பறிச்சுண்டு நிக்கும் உசிரு, பிள்ளை மண்டை பிளந்து விழணும், தகப்பனுக்குப் பிராணன் போகணும்னு பிராப்தம் போலே இருக்கு! பிள்ளையிருந்தும் கொள்ளி யில்லை அவன் கையாலே..."

"சொல்லாதே, பாபம். கேட்கக் கஷ்டமாயிக்கு" என்ருர் வேதனையுடன் ஐயர்.

"எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கு. பாழும் பிள்ளைக்கு புத்தி போச்சு பாருங்கோ..."

"போச்சு, எல்லாம் ஆச்சு. இலை போடு. குழந்தை பசியோட இருக்கான்..." என்ருர் ஐயர்.

தகப்பனுருக்கும் பிள்ளைக்குமாக இலை போட்டுப் பறிமாறினுள் பாலம்மாள்.

"சங்கதி கேட்டேளா, நம்ம சோமுவோட நாகுவும் பட்டணம் போகப்போருனும்." ஐயர் திடுக்கிட்டு விழித்தார், சோமுவைப் பார்த்து, "நிஜமாவாடா?" என்று கேட்டார்.

"என்னவோ 'வரேன்' என்கிருன்..."

"ஏதுக்காம்?"

"எங்கேயாவது வேலையிலே அமரணும், சம்பாதிக்கணும்னு ஆசை!"

"ஏன் இனி மேல் பயிர் செலவு பண்ணமாட்டானுமோ?"

"அதையெல்லாம் இப்போ அவனை நிண்டப்படாது. நாளாவட்டத்திலே அவன் மனசைத் திருப்பிக் கொண்டு வரணும். அதை உத்தேசம் பண்ணித்தான் 'சரி வா'ன்னேன்."

"நல்ல யோசனைதான், குக்கிராமத்திலே பிறந்து வளர்ந்தவனுக்கு பட்டண வாசம்..."

"வேணுல் பாருங்கோ—ஆறு மாசத்துக்குள்ளே ஓடி வந்துடப் போருன்!" என்று ஜோசியம் சொன்னுள் பாலம்மாள்.

"வரது இருக்கட்டும்டி, இவ னுக்கு என்ன வேலை தெரியும்? வாச்மென், ஆபீஸ் ப்யூன்... அந்த மாதிரி ஏதாவது வேலைதான் இவனுக்கு லாயக்கு. வணங்கா முடி மன்னனுச்சே இவன். எவ்வளவோ நாசுக்காப் போகிற மாதிரி..."

"போயிட்டு வந்தான்னுல் தன்னுலே தெரியறது எல்லாம்னு தான் கூட்டிண்டு போடான்னேன்" என்ருள் பாலம்மாள்.

"ரொம்ப சரி. ஏண்டா, வேஷ்டி, ஷர்ட் எல்லாம் இருக்கா சோமு உனக்கு?"

"வேண்டியது இருக்கு. தீபா வளி வரைக்கும் ஒண்ணும் வேண்டியதில்லை" என்று சொன் ஞன் சோமு.

"அப்போ, கையிலே உனக்கு என்ன வேணும்?"

"ஹோட்டல் பாக்கி ஒரு நாற் பது, இப்ப சார்ஜ் இருபது, மற்றச் செலவுக்கு எண்பது, ஆக நூத்து நாற்பது ருபாய் வேணும்?"

"சரி, சிகப்புப் பர்ஸிலே ஒரு நூறு ருபா நோட்டும், எழுபது ருபா சில்லறையும் இருக்கு. அதை எடுத்துக்கோ. வேணும்னுல் எழுது. செலவுக்குக் கஷ்டப் படாதே. இப்ப இரண்டாவது ஆசாமி வேறே ஆச்சு. பணச் செலவாறதேன்னு உடம்பைக் கெடுத்துக் கொண்டுவிடாதே. ஆமாம்" என்ருர் ஐயர். இப்படி பேசிக்கொண்டே சாப்பாடு முடிந்து எழுந்தார்கள் இருவரும்.

நாகுவைப் பற்றி அம்மா பிரஸ் தாபித்து விட்டாளே, எங்கு அப்பா வேண்டா மென்பாரோ என்று உதைப்பு நீங்கி, நிம்மதியும், திருப்தி யும் அடைந்தான் சோமு.

மறுநாள் பொழுது விடிந்ததும், பிரயாணத்திற்கு வேண்டிய அனைத் தையும் சித்தம் செய்து வைத்து விட்டு பத்து மணி சுமாருக்கு, குளித்து சாப்பிட்டுவிட்டு, கொய் யாத் தோப்பை நாடிச் சென்ருன்.

இவனுடைய வரவை எதிர் பார்த்துக் கொண்டு நாகு அங்கே உட்கார்ந்திருந்ததைக் கண்டதும் "ரொம்ப நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிருயோ நாகு?" என்று கேட்டுக் கொண்டே மேலே இருந்த துண்டை மணலில் விரித் துக்கொண்டு உட்கார்ந்தான் சோமு.

"இல்லே, இப்பதான் வந்தேன். இவ்வளவு நாழியா எனக்கும் எங்கம்மாவுக்கும் வாக்கு வாதம்" என்ருன் நாகு.

"எதுக்கு?"

"நான் பண்ணையை விட்டு வில கிட்டதும், வேலைக்காகப் பட்டணம் போறேன்னும் அவங்க கிட்ட யார் சொல்லி யிருப்பாங்கன்னு தெரி யல்லே, 'ஓ, நீ அவத்துவமா ஏதோ செய்யறே' உள்ளதைச் சொன்னுல் என்ன, நீ போய் பட்டணத்திலே குந்திக்கிட்டா, வயசு பொண்ணை வீட்டிலே வச்சுக்கிட்டு நான் என்ன பண்றதுன்னு கத்தினுங்க. நான் சொன்னேன், 'நம்ம அயிலு மாதிரி, அதுவும் வயசு பொண்ணு தானே, அதும் இங்கியே இருக்கட் டும். நான் ஏதோ சம்பாதிச்சு அனுப்பறேன். விளைஞ்சுவர மகசூ லோட இதையும் வச்சுக்கிட்டு பொழுதை தள்ளிக்கங்கன் னேன்."

"அது முடியாது என்ருளோ!"

"உம், ஐயையோ, ஊராமுட்டு மகளை நான் வச்சுக்கறதாவது'ன்னு கிளம்பினுங்க."

"அப்ப சரி. அவளைக் கொண்டு எங்கியாவது பொம்பளைங்கபள்ளிக் கூடத்திலே எதிலேயாவது வேலைக் குத்தான் வைக்கணும். நான் சோமு வோட தங்கிக்கப் போறேன்னேன். மறிச்சு ஒண்ணும் பேசல்லே" என்று சொன்னுன் நாகு.

" மொதல்லே, நீயும், அவளுமா, குடித்தனம் நடத்தப் போறீங்களாக்கும்னு நெனைச்சாளோ! புத்தியைப் பாரு!" என்று நகைத்தான் சோமு.

' அம்மாவை ஒரு விதமாக வழிக்கிக் கொண்டு வந்துட்டு, இதைச் சம்மதிக்கச் செய்யப் பட்டபாடு போதும்னு ஆயிப்போச்சப்பா!"

" ஏன், என்ன சொல்கிருள்? இங்கேயே இருக்கிறேன் என்கிருளா?"

" இங்கியும் இருக்காதாம். அங்கேயும் வராதாம். அவளை விட்டால் போதுமாம், இப்படி எங்கியாவது போயிடராளாம்!"

" பேஷ், கெட்டிக்காரி..."

" அப்படி இல்லே சோமு, அது மனசு அவ்வளவு உடைஞ்சுபோச்சு. இங்கேயும் இருக்கப்படாது. என்னுேட வந்தால், எங்கம்மாவுக்குச் சம்மதமில்லே. அதனுலே, ஒருத்தருக்கும் ஒவுத்திரிய மில்லாம, என்பாட்டிலே நான் போயிக்கிறேன். என்குது..."

இதைச் சொல்லும் போது, நாகுவின் குரல் கரகரத்ததைக் கண்டான் சோமு.

" சரி. இப்ப சம்மதப்படருளா, உன்னுேடு வர?"

" அப்புறம் நயமாச் சொல்லி, பயமாச் சொல்லி, அம்மாவுக்குத் தெரிஞ்சு கொஞ்சம் தெரியாம கொஞ்சமா சங்கதியை எடுத்துச் சொல்லி, அப்பா, தாவு தீந்து போச்சு போ."

" பின்னே, சும்மாத்தானுன்னேன்!"

" நீ கூடவா, கேலி பண்றே சோமு?"

" கேலி யில்லியே, உள்ளதைச் சொன்னேன்.

" உள்ளது ஒண்ணும் இல்லே!"

" ஏன் மறைக்கிற நாகு? நான் அவ்வளவு மடையனு என்ன, வள்ளி உள் நெஞ்சிலே எந்த இடத்திலே இருக்கான்னு எனக்குத் தெரியும்,"

" எனக்கு இருக்கலாம் சோமு. அதுக்கு அந்த மாதிரி நினைப்பே இல்லே..."

" இனிமேல் வரும், ஏன் என்கிறையா? அவமேலே உனக்கு இருக்கிற கரிசனத்திற்கு, அது கூட சரியான பதமில்லே. விவரித்துச் சொல்ல வார்த்தை அகப்படவில்லே. அது சரீர சுகத்தை அபேட்சித்துப் பிறந்த அன்பில்லே, அவள் உன்னை மணந்து கொள்ளாவிட்டாலும், நீ அவமேலே வைச்சிருக்கும் அன்பு துளிகூட மாருது. சரிதானே."

" அதுவேதான்!"

" அது சத்தியமான அன்பு! மாசு மரு இல்லாதது. அதனுல் அந்தப் பெண் உன் அன்பின் எல்லே தாண்டி அப்பால் போக முடியாது! ஒரு பயம் மாத்திரம் உதிக்கிறது எனக்கு."

" என்ன அது?" என்று சட்டென்று கேட்டான் நாகு.

" நல்ல பாதுகாப்பான ஒரு பெண் பிள்ளைகள் ஸ்தாபனத்திலே அவளுக்கு ஒரு வேலே கிடைச்சுட்டால், உத்தமமாகப் போயிடும். இல்லேயானுல், சரி பார்ப்போம். ஆண்டவன் வழிகாட்டுவான். நீ என்ன பண்றேன்னுல், சரியா மணி நாலுக்குப் புறப்பட்டு ஆறு மணிக்குள்ளே குறிஞ்சிப்பாடி பஸ் ஸ்டான்டண்டை இரு."

" எந்த பஸ் ஸ்டாண்டு?"

" அதுதான், பூவர்ச மரத்தடி... ரெட்டியார் பங்க் இல்லே,"

" ஆமா."

" அந்த பஸ் ஸ்டான்டில் நில்லு, நான் சரியா ஆறு மணிக்கு வந்துடுவேன். நான் வந்து டிக்கட் வாங்குகிறேன், என்ன?"

" சரி."

" ஆறு நாப்பத்தஞ்சுக்கு வண்டி, கோட்டை விட்டுடாதே. ஆமாம்" என்ருன் சோமு.

" இல்லே யில்லே. அஞ்சரைக்கே அங்கே இருக்கிறேன். உம். பயணம் நிச்சயம்தானே?" என்று கேட்டான் நாகு.

"பதினோராம் தேதி நான் டியூடியிலே இருக்கணும்ப்பா" என்றான் சோமு.

"சரி சோமு, வெய்யிலாவுது, நீ வீட்டுக்குப் போயிட்டு டேசனுக்கு வா" என்று கூறியபடி எழுந்தான் நாகு.

மாலை மூன்று மணிக்கு, பெற்றோரிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டு வாசலில் வந்து நின்ற வண்டியில் ஏறினான் சோமு.

"யாருது வண்டி?" என்று எட்டிப் பார்த்தாள் பாலம்மாள்.

"முருகன் வண்டிதான்" என்றார் ஐயர்.

"கடையாணி சரியா இருக்கா பாருங்கோ" என்றாள் பாலம்மாள்.

"பத்திரம் சோமு. ரயில்லே பெட்டி, கூஜா, பத்திரம். போனதே கடிதாசு போடு" என்றாள் தாயார்.

"நாகு கூடப் போறான்னால் கவலையே கிடையாது. ரயிலை விட்டு இறங்கற மட்டும் கண்ணைக் கொட்ட மாட்டான்," என்றார் ஐயர்.

"போய் வரேன் அப்பா. துரை நிலைமைக்கி அப்பப்போ எழுதுங்கோ" என்று கூறிவிட்டு, "வரேன் அம்மா" என்றான் சோமு.

பாலம்மாள் கண்ணீர் சோர மகனைப் பிரியும் பாசத்தால் துக்கம் தொண்டையை யடைக்கப் பேச இயலாமல் தலையை ஆட்டினாள்.

வண்டி தெருவிலிருந்து திரும்பி மறைந்து குறிஞ்சிப்பாடி ஸ்டேஷனுக்கு விரைந்தது. நடையுமில்லாமல், ஓட்டமுமில்லாமல் குண்டு குண்டென்று ஒரே நிதான நடையில் மணி ஐந்துக்கெல்லாமே ஸ்டேஷனைப் பிடித்து விட்டன அந்தக் காளைகள்.

ஸ்டேஷனுக்குப் பத்து கஜ தூரத்திலிருந்தது பஸ் ஸ்டான்ட். பத்து நிமிஷங்களுக் கெல்லாம் ஒற்றை மாட்டு வண்டி யொன்று அங்கு வந்து நின்றது. முதலில் நாகுவும், அவன் பின் வள்ளியும் வண்டியிலிருந்து இறங்கியதைப் பார்த்தான் சோமு.

(அடுத்த இதழில் முடியும்)

ALL QUALITIES OF

PAPERS

PHONE : Office : **84783**
Residence : **4041**

GRAMS : **'CHELVAM'**

★

T. Chelvaranga Mudaliar & Sons

289, Stringer's Street,
MADRAS-1.

AND

BOARDS

AVAILABLE FROM READY STOCK

★

Distributors for :

★ Titaghur Paper Mills, Co., Ltd.,
★ Mysore Paper Mills Ltd.,
★ Rohtas Industries Ltd.

வானவில்

- ந.ஜயனிறை -

எழுநிறங் களொன்றாய்க் கொண்டாய்
ஏமாப்பும் உன்னுடன் கொண்டாய்
தழுவிநின்றே தண்மதியூர் நெடுவானைத்
தாங்குவதாய்ப் பிறரெண்ணச் செய்திட்டாய்
மழுபடைச் சிவன்கைச் சிலையினும்
மாச்சிலையாய் நினைக்காணச் செய்திட்டாய்
விழுகின்ற நீர்த்துளியில் பிறந்திட்டாய்
விந்தையின் விந்தை நின்பிறப்பே!

பல்நிறச் சேலையும் உடுத்திட்டால்
பாவை யெவருமவ ருடைக்கே
எல்லாரும் நின்பெயரைச் சூட்டி
இகழ்வது போற்புகழ்ந் திடுவார்!
நில்லாச் சிறுகுழவி நின்முகம்
ஏறிட்டால் ஓங்கி வருமந்த
நில்லா அழுகையும் நின்றிடும்
நின்பெருமை சொல்லல் அரிதாமே!

தேய்தோய்ந்த காதலர் எல்லாம்;
இவர்கொண்ட நிலையில் காதலுக்கே
பேய்ந்தோய்ந்த மழையால் பிறந்தநின்
பேர்கொடுத் தறற்றிடு வாரன்றே!
மாய்ந்திடு உயிர்க்கெல்லாம் நீயும்
மங்காத எடுத்துக்காட் டானாய்
தீய்ந்திடு மக்கட்கே வழிகாட்டும்
திறம்வியந்து வாழ்த்துவம் யாமே!

மணித்துளி

சோமு

இந்த இருபதாம் நூற்றுண்டுச் சித்திரக் கலையில் நன்கு புகழ் பெற்று விளங்குபவர் ஓவியர் கடம் பவனம். அவருடைய புகழைக் கேள்விப்பட்ட என்னுடைய நண்பர் ஒருவர் தம் மகனுக்கு அவரிடம் சித்திரம் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சென்னைக்கு வந்தார். நானே தயங்கினேன். காரணம், ஓவியர் கடம் பவனம் மாணவர்கள் யாருக்கும் சித்திரக் கலையில் பயிற்சி தந்து, இதுவரை நான் பார்த்ததில்லை.

“பையனுடைய அதிருஷ்டம் எப்படியிருக்கிறதோ ! பார்ப்போம்” என்று சொல்லி நண்பரையும் பையனையும் அழைத்துக்கொண்டு கடம்பவனத்திடம் சென்றேன்.

“நமஸ்காரம்”, அல்லது “வணக்கம்” என்றே, இல்லை “வாருங்கள்” என்றே வார்த்தைகளினுல் வரவேற்கிற பழக்கம் கடம்பவனத்திடம் என்றைக்குமே கிடையாது ! அப்படியே ஓடிவந்து நம்மைத் தழுவி அணைத்துக் கொள்வார். அந்த அன்பானது’,:‘வணக்கம், நமஸ்காரம்’ என்ற வார்த்தைகளையெல்லாம் விட மிகவும் நெருக்கமாக இருக்கும்.

நாங்கள் சென்றதும் கடம்பவனம் தம்முடைய நெருங்கிய (அணைத்து நெருக்கிய என்றும் சொல்லலாம்) வரவேற்பை வழங்கிவிட்டு, எங்கள் மூவரையும் சித்திரச் சாலையில் உட்காரச் சொன்னுர் ஆரம்ப விசாரணைகள் ஆனபிறகு, விஷயத்திற்கு வந்தோம். உடனே, கடம்பவனம் பளிச்சென்று

பதில் சொன்னார்.

"நண்பரே! மன்னிக்க வேண்டும். சித்திரக்கலையை ஒருவருக்குக் கற்பித்து விடலாம் என்றோ, மாணவர்களைப் பெரிய மேதைகளாக ஆக்கிவிடலாம் என்றோ நம்புகிறவனில்லை நான். ஆனாலும் நெருங்கிய நண்பராகிய நீங்கள் வந்து சொல்வதால் பையனைச் சேர்த்துக் கொள்கிறேன். வர்ணம் பூசுகிற கல்வியைச் சொல்லித் தருகிறேன். அவ்வளவுதான். வர்ணக் கல்வியைத்தான், வர்ணக்கலையை அல்ல! கலையென்பது மனித முயற்சியைக் கடந்தது!"

இவ்வாறு சொன்னார் கடம்பவனம். பையனின் தகப்பனருக்கு முகம் சுருங்கியது. இதைக் கவனித்த ஓவியர் மேலும் சொல்ல ஆரம்பித்தார்:—

"நீங்கள் இந்த அறையிலேயுள்ள படங்களைப் பாருங்கள். அற்புதமாக இருப்பதாக நீங்கள் சொன்னால் அதற்காக நிச்சயம் நான் பெருமையடையப் போவதில்லை. ஏனென்றால் என் வாழ்நாளில் நான் வரைந்துள்ள படங்களில் எல்லாம் மிக மிகச் சிறந்தது என்று கலையன்பர்கள் அனைவரும் பாராட்டுகிற சித்திரம், என்னுடைய திறமையினால் நான் வரைந்ததில்லை!"

இப்படிச் சொன்னபோது ஓவியரின் முகத்தைக்கூர்ந்து பார்த்தேன். அதில் சூது இல்லை. "எல்லாம் கடவுள் செயல்!" என்று புத்தகத்தைப் படித்துவிட்டுத் திருப்பிச் சொல்கிற கிளிப்பிள்ளைப் பாடமாகவும் இல்லை அவருடைய பேச்சு! உள்ளத்திற்குள் உண்மையாகவே அவர் அப்படி உணர்கிறார் என்று முகத்தில் தெரிந்தது.

"நீங்கள் எந்தச் சித்திரத்தைச் சொல்கிறீர்கள்?" என்று ஆவலோடு கேட்டேன்.

"கண்ணம்மா—என் குழந்தை" என்ற தலைப்புடன் மூவர்ணங்களிலே எங்கள் கண்முன் காட்சி தந்த ஓவியத்தைக் காட்டினார் கடம்பவனம். நாங்கள் மூவரும் அந்தச் சித்திரத்தின் அருகிலே சென்று பார்த்தோம்.

"கண்ணம்மா—என் குழந்தை" என்ற அந்த வர்ணச்சித்திரம் ஒரு குழந்தையின் படமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறீர்களோ? இல்லை. உண்மையில் அந்தச் சித்திரத்தில் குழந்தையின் உருவமே இல்லை. அந்த அருமைக் குழந்தையைப் பெற்றெடுத்த அன்னையின் முகத்தைத்தான் சித்தரித்திருந்தார் ஓவியர். கண்ணாடியில் விழுகிற நிழல்போல, அந்தத் தாயின் முகத்தில் அவளுடைய பெருமிதமான தாயுள்ளம் பிரதிபலித்தது. தான் பெற்றெடுத்த குழந்தையின் வேடிக்கை விளையாட்டுக்களைப் பார்க்கும் களிப்பையும், அந்தக் குழந்தையைப் பிறர் பாராட்டக் கேட்கும்போது ஏற்படுகிற பெருமித உணர்ச்சிகளையும் தாயின் முகத்திலே தத்ரூபமாக எடுத்துக் காட்டியது சித்திரம்! "கண்ணம்மா—என் குழந்தை" என்று தலைப்புக் கொடுத்துவிட்டு, குழந்தையையே காட்டாமல் தாயின் முகத்தை மட்டும் வரைந்து, அந்த முகத்தின் சாயலினூடே குழந்தையைப் பற்றிய கற்பனைகள் பார்க்கிறவர்களுடைய மனக் கண்ணிலே துலங்கும்படியாகச் செய்துவிட்ட அந்த அற்புதத்தை, எப்படிப் பாரட்டுவது?

சித்திரத்துக்குக் காரணமாக அமைந்த பாரதியின் பாடல் எனக்கு நினைவு வந்தது.

"சின்னஞ் சிறு கிளியே —
கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே"

—என்று கொஞ்சுகிற தாயின் பரிவு அந்த முகத்திலே, சித்திர வளைவுகளாகத் தெரிந்தது.

"ஓடி வருகையிலே —
கண்ணம்மா
உள்ளம் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால் —
உன்னைப்போய்

ஆவி தழுவுதடி ”

—என்று கவிஞன் பாடிய அந்த உள்ளக் குளிர்ச்சியும், ஆவியின் அரவணைப்பும் சித்திரத் தாயின் முகத்திலே தவழ்ந்தோடின.

“ கன்னத்தில் முத்தமிட்டால்-
உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ-
கண்ணம்மா
உன்மத்தம் ஆகுதடி ”

—என்ற வரிகளிலே உள்ள கள் வெறியும், உன்மத்தமும் அப்படியே அந்த அன்னையின் முகத்திலே பொங்கிக் கொண்டிருந்தன.

“ உச்சிதனை முகந்தால் -
கருவம்
ஓங்கி வளருதடி
மெச்சியுனை ஊரார் -
புகழ்ந்தால்
மேனி சிலுர்க்குதடி ”

ஆமாம். ஒரு தாயின் கருவமும், அவளுடைய மேனியின் சிலிர்ப்பும் மூன்று வர்ணங்களிலே எத்தனை அழகோடு ஓவியம் பெற்றுவிட்டன!

இதற்கெல்லாம் மேலாக,

“ அன்பு தருவதிலே-உனைநேர்
ஆகும் ஓர் தெய்வமுண்டோ ?”

—என்ற பேரின்பநிலையை ஓவியர் கடம்பவனம் எப்படித்தான் அந்த முகத்திலே கொண்டுவந்து விட்டார்!

இப்படி எண்ணும்போது என்னையும் அறியாமல் அந்தக்கடைசிவார்த்தைகளை உரக்கச் சொல்லிவிட்டேன். அதைக் கேட்டதும் கடம்பவனம் ஒரு துள்ளுத் துள்ளினார் : சொன்னார் :

“ எந்தத் தெய்வம் உனக்கு நிகராகும் என்று ஒரு தாய் தன் குழந்தையைப் பற்றி எண்ணினால்,அவள் முகத்திலே என்னவிதமான சாயல், உணர்ச்சிப் படலம் ஏற்படுமோ அதை அப்படியே சித்திரிக்கிறது இந்த ஓவியம். ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் வரைந்தது நான் இல்லை! அதுதான் சொன்னேனே! இறகு ஒன்றைத் தவிர வேறொன்றும் நம் கையில் இல்லை! நாமோ என்றால் வேறெதோ ஒரு சக்தியின் கையில் இறகாக இருக்கிறோம்!”

இப்படிச் சொல்லிவிட்டுக் கடம்பவனம் அந்தச் சித்திரத்தை வரைந்து முடித்த அதிசய நிகழ்ச்சியை எங்களுக்குச் சொன்னார்:

பாரதியாரின் பாடல்களிலே மிகவும் ஈடுபட்ட ஓவியர் கடம்பவனம், வரையாமல் வரைந்து காட்டுவது, என்னும் முறையிலே அன்னையின் முகத்தில் குழந்தை கண்ணம்மாவை உருவகித்துக் காட்ட வேண்டும் என்னும் ஆசையோடு, பல சித்திரங்கள் வரைந்தார். தாயுள்ளத்தின் குளிர்ச்சி, ஆவியின் அரவணைப்பு, கள்வெறி,உன்மத்தம், பெற்றெடுத்த கர்வம், பிறருடைய பாராட்டுக்களினால் ஏற்படுகிற மேனிசிலிர்ப்பு, இத்தனை பாவங்களையும் உணர்ச்சிச் சாயல்களையும் சித்திரத்திலே தாயின் முகத்திலே அவரால் காட்ட முடிந்தது. ஆனால்,

“ அன்பு தருவதிலே —
உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்
டோ?”

என்று ஒரு தாய் தன்குழந்தையைத் தெய்வத்துக்கும் மேலாகப் பாவிக்கும் அந்தப் பேரின்ப நிலையிருக்கிறதே, அதை எப்படி முகத்திலே சித்திரிப்பது? அதுதான் கடம்பவனத்துக்குப் புரியவில்லை. மகிழ்ச்சி, உவகை, பெருமை, உன்மத்தம் அத்தனையும் வரைந்து விட்டார். ஆனால் இவை எல்லாவற்றையும் கடந்த தெய்வப் பேருணர்ச்சியை எப்படிச் சித்திரத்திலே காட்டுவது? எந்தக் கோடுகளை எப்படி வரைந்து, எந்த வளைவு நெளிவுகளை இறகினால் எப்படி இழுத்து அந்தப் பேரின்பப் பெருமிதத்தைத் தாயின் முகத்திலே சித்திரிப்பது ?

கடம்பவனம் மீண்டும் மீண்டும் பல சித்திரங்கள் வரைந்தார். ஒன்றிலும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. மனம் வேதனைப்பட்டது.

துயரம், இன்பம் இந்த இரண்டு உணர்ச்சிகளையும் எப்படி யெப்படி யெல்லாம் சித்திரிக்கலாமோ, அத்தனை உத்திகளையும் கையாண்டு நன்கு தேர்ந்திருந்த கடம்பவனம், கடைசியாக மிகவும் முயன்று இதயத்தையும் வர்ணங்களையும் ஒன்று சேர்த்துக் குழைத்து இறகிலே தோய்த்து, ஒரு சித்திரம் வரைந்து முடித்தார். அதைப் பார்த்த அவருடைய நண்பர்கள் மிகவும் பாராட்டினார்கள். ஆனாலும், " உனக்கு நிகரான ஒரு தெய்வம் உண்டோ? " என்ற அன்னையின் எண்ணத்தைச் சித்திரம் சரியாகக் காட்ட வில்லை, காட்ட முடியவில்லை என்று நினைத்தார் கடம்பவனம்.

ஒரே வேதனையோடு அந்தச் சித்திரத்தை அப்படியே எடுத்து வெளியே இருந்த தாழ்வாரத்திலே போட்டுவிட்டு விரக்தியோடு அந்த முயற்சியையே உதறியதுபோல் கைகளை உதறிவிட்டு, வேறு வேலைகளிலே ஈடுபட்டார் அவர்.

அது மார்கழி மாதம் கழிந்து தை மாதம் ஆரம்பமாகிற காலம். இரவெல்லாம் தாழ்வாரத்திலே கிடந்த சித்திரத்தில் பனி நன்றாகப் பெய்தது ! திவலை திவலையாகக் கொட்டியது !

காலைப்பொழுது விடிந்ததும், தாழ்வாரத்தைத் துப்புரவு செய்யச் சென்ற ஓவியரின் மனைவி சித்திரம் அப்படி நாதியற்றுக் கிடப்பதைக் கண்டு மனம் துணுக்குற்று, ஓடியே போய் அதை யெடுத்துப் பார்த்தாள்! சித்திரம் எல்லாம் பனியிலே சொட்டுச் சொட்டாக நனைந்து கிடந்தது! அதைப் பார்த்ததும் அவளுடைய கண்களிலே கண்ணீர் அரும்பிற்று. ஆனால் இதென்ன ? சூரிய வெளிச்சத்துக்கு அருகிலே ஓவியத்தைக் கொண்டு வந்து பார்த்தாள் அவள். பொட்டுப் பொட்டாகத் தூவியிருந்த பனித்துளிகளிலே இரண்டு, சித்திரத்தில் இருந்த கண்களிலே பட்டுக் கீழ் இமைகளிலே போய்த் தெறித்திருந்தன ! என்ன

ஆச்சரியம்! இப்பொழுது சித்திரத் தாயின் அந்தக் கண்களிலே ஒரு புதிய உணர்ச்சிச் சாயல்! படம் முழுவதிலும் இப்பொழுது ஓர் உருக்கம்; துன்ப உருக்கம் அல்ல. இன்பத்தின் எல்லையைக் கடந்து நிற்கும்போது ஏற்படுகிற உள்ளத்தின் உருக்கம், பேரின்ப உருக்கம், முகத்திலே இப்பொழுது படர்ந்து நின்றது! எல்லாம் இரண்டு துளிப் பனிநீர் செய்த அற்புதம்.

"இங்கே வாருங்களேன் கொஞ்சம்!" என்று சித்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டே பதறினுள் கடம்பவனத்தின் மனைவி!

ஓவியர் ஓடி வந்தார், பார்த்தார். அப்படியே அவர் ஒரு குழந்தையைப் போலத் துள்ளித் துள்ளிக் குதித்தார். சித்திரத்திலே தோன்றிய தாயின் இரண்டு கண்களிலும் கீழ் இமைகளிலே இரண்டு பனித்துளிகள் நின்றன! 'பொல பொல' வென்று உதிரும் துயரத் துளிகள் அல்ல. 'மட மட' வென்று கொட்டும் ஆவேச உவகை வெள்ளமும் அல்ல அது.

"அன்பு தருவதிலே-உனை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ!"

என்று எண்ணும்போது தாயின் உள்ளத்திலே ஒரு பரவசம் உண்டாகிறதல்லவா? அந்தத் தெய்வப் பேரன்பு இரண்டு துளிக் கண்ணீராக, இரண்டு முத்துத் திவலையாக ஒன்று கூடி இமையின் கடையிலே ஊசலாடுகின்றன! கீழே சிதறவில்லை. சூலாகி நிறைந்து நிற்கின்றன அந்தத் துளிகள்.

அவ்வளவுதான்! கடம்பவனத்துக்கு இப்பொழுது மன எழுச்சி உண்டாகிவிட்டது. ஒரு தாயின் வேகம் அவருடைய உள்ளத்தைத் தாக்கிவிட்டது. விறு விறு என்று சென்று அமர்ந்து அன்று மாலைக்குள்ளே வேறொரு புதிய சித்திரம் வரைந்து முடித்து விட்டார். முன் வரைந்த சித்திரங்கள் எதிலும் இராத புதுமையாக, புதுச்சேர்க்கையாகத் தாயின் கண்களிலே இரண்டு பனித் துளிகளை வரைந்து காட்டித் தெய்வீகப் பேரன்பு நிலையை வெற்றிகரமாகச் சித்திரித்து விட்டார், கடம்பவனம். மார்கழி மாதத்துப் பனித்துளி கற்பித்த கலை நுட்பம் அல்லவா அது!

"நண்பரே! இதுதான் இந்தச் சித்திரத்தின் நிகழ்ச்சி. உண்மையிலேயே சொல்லுங்கள். இந்தச் சித்திரத்தின் சிறப்பு என்னைச் சேர்ந்ததா? இல்லவே இல்லை! தெய்வ நிலையைச் சித்திரிக்கும்போது மனிதனுடைய இறகும் மனமும் தவறுகின்றன. தெய்வ அருளாகிய இரண்டு பனித் துளிகள், வானம் என்ற அன்னை, இரவு உதிர்த்த இரண்டு ஆனந்தக் கண்ணீர்ச் சொட்டுக்கள்தான் எனக்கு வந்து உதவின! என் சக்தியில் ஏதொன்றுமில்லை!"

இப்படிச் சொல்லும்போது கடம்பவனத்தின் முகத்தைப் பார்த்தேன். சித்திரம் என்ற குழந்தையைப் பெற்றெடுக்கிற தாய், அல்லவா அந்த ஓவியர், அவருடைய கண்களிலும் முத்துப்போல் இரண்டு பனித்துளிகள் அரும்பி நின்றன. ★

Grams: JAIKAPSO

Phone: 2338

JAI DAYAL KAPUR

PAPER MERCHANTS
&
STATIONERS

—: Distributors for :—

BALLARPUR PAPER & STRAWBOARD MILLS LTD.

—: Agents for :—

MADRAS, MYSORE, ANDHRA
AND KERALA STATES.

2, ANDERSON STREET,
MADRAS-1.

V.V.S. நல்லெண்ணை

உபயோகியுங்கள்!

வே.வ.சண்முகநாடார் & சன்ஸ்

விருதுநகர்

எங்களிடம் தயாராகிற

நயம் நல்லெண்ணை

நயம் உளுந்து

துவரம் பருப்புகளை

வாங்கி உபயோகியுங்கள்

மேலான
குணம்
மணம்
நிறைந்தது!
எங்கும்
கிடைக்கும்.

V.V.ஷண்முகநாடார் & சன்ஸ்

விருதுநகர்

போன்: 88... தந்தி: VEEVEEYES...

நீதிபதியின் லீவு

பி. எச்ஸ். ஆர்

நடிகர்கள் :

1. நீதிபதி
2. பங்கஜம்—அவருடைய மனைவி
3. சங்கர்—அவருடைய கிளார்க்
4. சேகர்—நீதிபதியின் நண்பர்

நீதிபதி : சங்கர் ! நீ உன்னுடைய எதிர்கால வாழ்க்கையைப் பற்றி எப்போதாவது யோசித்திருக்கிருயா? வாழ்நாள் முழுவதும் கோர்ட் கிளார்க்காகவே காலந் தள்ள விரும்புகிருயா ?

சங்கர் : இல்லே, யுவர் ஆனர்.

நீதி : நான் நீதிபதியானது தந்திரத்தாலும் அல்ல, மந்திரத்தாலும் அல்ல. கடும் உழைப்பினுல்தான், சங்கர்! பி. எல். பாஸ் செய்த பிறகு கொஞ்ச நாள் "பீஸ்" இல்லாமலே கட்சிக்காரர்களுக்காக வாதாடினேன். பிறகு முன்சிப் ஆனேன். அதன்பின் எத்தனையோ 'ஹைஜம்ப்', 'லாங் ஜம்ப்' செய்த பிறகுதான் நீதிபதியானேன். நான் சொல்றது விளங்குகிறதா, சங்கர்?

சங் : விளங்குகிறது, யுவர் ஆனர்!

நீதி : என்னுடன் பி. எல். பாஸ் செய்தவர்கள் எத்தனையோ பேர்கள் இன்னும் கோர்ட்டுக்குள்ளே போகவில்லே.

சங் : கேஸ் கிடைத்தால்தானே யுவர் ஆனர் !

நீதி : 'கரெக்ட்'. ஆனல் என்னுடைய பெயர் எப்படியெல்லாம் எங்கேயெல்லாம் அடிபடுகிறதென்று உனக்குத் தெரியுமில்லே?

சங் : தெரியும், யுவர் ஆனர் !

நீதி : இதெல்லாம் தெரிந்துதானு என்னிடம் அரை நாள் லீவு கேட்கிருய்? இந்த லீவு அவசியமா ? வருங்காலத்தில் உன் வாழ்க்கையை இது எவ்வாறு பாதிக்கும் என்றெல்லாம் யோசித்தாயா ? நான் சொல்கிறது புரிகிறதா சங்கர் !

சங் : எஸ் யுவர் ஆனர்.

நீதி : போன மாதம் ஒரு நாள் லீவு கொடுத்தேன். உன் பெற்ரேர்கள் பட்டணம் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னுய். அது சரி ! இப்போது லீவு எதற்கு ?

சங் : என் சிநேகிதனுக்கு, யுவர் ஆனர், கல்யாணம், யுவர் ஆனர்!

நீதி : உன் கலியாணத்துக்கே அரை நாள்தானே லீவு கொடுத்தேன்! முடியவே முடியாது. இதைக் கேட்கும்போதே என் தலே சுற்றுகிறது......ஒரு சிகரெட் பற்றவைத்தால்தான் இந்த மயக்கம் போகும்......மேஜையிலிருந்த தீப்பெட்டி எங்கே ?

சங் : யுவர் ஆனர்! என் தீப்பெட்டியை......

நீதி : ஸில்லி ! ஒரு நீதிபதியிடம் ஒரு கிளார்க் இப்படிக் கேட்கலாமா ? எவ்வளவு மரியாதைக் குறைச்சல் ? அல்லது ஒரு நீதிபதி

கிளார்க்கிடம் கை நீட்டி தீப்பெட்டியைத்தான் வாங்கலாமா? லஞ்சம் வாங்குவதுபோல்தானே இது! சங்கர், உன் நடத்தை பொறுக்க முடியாத, ஏன் மன்னிக்க முடியாத குற்றம்.

சங்: பார்டன் மீ யுவர் ஆனர்!

நீதி: சரி, மன்னித்தேன்! உன்னை மன்னிப்பது இதுதான் கடைசித் தடவை. (சட்டைப் பைக்குள் கையை விட்டு ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்தபடியே) இதென்ன துண்டுக் காகிதம்! என் சட்டைப் பைக்குள் எப்படி வந்தது? என்னவோ எழுதியிருக்கிறதே! [படிக்கிறார்] "வெள்ளிக்கிழமை இரவு 10 மணி! கொ......லை! கொலையா... கலையா? சங்கர்! இதை வாசித்துப் பாரு.

சங்: "வெள்ளிக்கிழமை... கா...லை

நீதி: ஆமா! உனக்கு கண்ணாடி தேவை! 'கொலை' என்கிறதை 'காலை' என்று படிக்கிறியே.

சங்: 'க'வுக்கு முன்னால் 'கொம்பு' இல்லையே!

நீதி: அது மறைந்து இருக்கு! நிச்சயமா கொலைதான், சங்கர். இன்றைக்கு என்ன கிழமை?

சங்: வெள்ளிக்கிழமை, யுவர் ஆனர்.

நீதி: வெள்ளி! ஓ மை காட்! என்னைக் கொல்வதற்கு யாரோ திட்டம் போட்டிருக்கிறார்கள். நீதியை வழங்கினால் அதற்குப் பரிசு கொலைதானா?

சங்: யுவர் ஆனர்! நீங்க சொல்றது ஒன்றும் புரியலியே!

நீதி: ஒரு நீதிபதியின் விஷயம் ஒரு சாதாரண கிளார்க்குக்கு எப்படிப் புரியும்? என் மரணம் நெருங்கிவிட்டது...சங்கர்! சமீபத்தில் நான் தீர்ப்பளித்த வழக்குகள் எவை?

சங்: கள்ள நாணய வழக்கு!

நீதி: அதில் லஞ்சம் வாங்க மறுத்தேன்...அடுத்தது...

சங்: சந்தனத்தேவனுக்குத் தூக்குத் தண்டனை!

நீதி: அப்படிச் சொல்லு! நான் தீர்ப்புக் கூறுவதற்கு முன்னால் அவனுடைய ஆட்கள் என்னையே முறைத்துப் பார்த்துக் கொண்டுநின்றார்கள்!

சங்: யுவர் ஆனர்! தங்களைப் பயமுறுத்த யாரோ இப்படி எழுதியிருக்கிறார்கள்.

நீதி: சங்கர்! எனக்கு இப்போது தான் ஞாபகத்திற்கு வருகிறது. நேற்று கோர்ட்டை விட்டு வெளியே காருக்கு வரும்போது யாரோ ஒருவன் என் பக்கமாக என்னை இடித்துக் கொண்டு போவது போல் போனான். அவனைப் பார்க்கவே பயமாய் இருந்தது. அவன் தான் இந்தத் துண்டுக் காகிதத்தை என் பைக்குள் போட்டிருக்க வேண்டும்.

சங்: யுவர் ஆனர்! சந்தேகப்பட்டிருந்தால் அவனை உடனே பிடித்து 'லாக் அப்'பில் போட்டிருக்கலாமே?

நீதி: அப்படிச் செய்யாதது என் முட்டாள் தனந்தான். நான் தவறு செய்தது இது தான் முதல் தடவை, சங்கர்! கீழே போய் எல்லாக் கதவுகளையும் ஜன்னல் களையும் அடைத்து விடு. பங்க ஜத்தை வரச் சொல். வீட்டில் அந்நியர்கள் யாராவது இருக் கிறார்களா வென்று பார்.

சங்: தோட்டக்காரன் மட்டும் இருக்கிறான்.

நீதி: உடனே அவனை வீட்டுக்குப் போகச் சொல். போகுமுன் கதவு களை எல்லாம் அடைக்கச் சொல், சங்கர்! ஜன்னல் கதவுகளை அடைக்க மறந்து விடாதே!

[சங்கர் போனபின் பங்கஜம் வருதல்.]

பங்கஜம்: என்ன வரட்டுத் தவளை மாதிரி கத்திக்கிட்டு இருக்கீங்க?

நீதி: பங்கஜம் பதறாதே பயப் படாதே!

பங்: உங்களைக் கல்யாணம் செய்து இருபது வருஷமா பயப்பட லையே இனிமேலா பயப்படப் போறேன்!

நீதி: என் அன்பே, பங்கஜம்! உன் கணவனின் உயிர் ஊசலா டிக் கொண்டிருக்கிறது!

பங்: ஊசலாடுதா? ஊஞ்சலா டுதா?

நீதி: விளையாடுவதற்கு இதுதானா நேரம்? பங்கஜம்! என்னைக் கொலை செய்ய சதி நடக்கிறது!

பங்: பேரும் புகழும் வேணும்னு அடிச்சிக் கிடுறீங்க. இப்போ கிடைக்கிறதை ஏற்றுக் கொள் ளுங்க.

நீதி: என் ஆசைப் பங்கஜமே! நீ கூடவா இப்படிச் சொல்றே.

பங்: யாரும் அப்பிராணியாய் இருக்கிறவங்களை சும்மா கொலை செய்ய மாட்டாங்க!

நீதி: பங்கஜம்! இதை வாசித்துப் பாரு!

பங்: எவனோ படிக்காதவன் கிறுக்கின மாதிரி இருக்கு. [படிக் கிறாள்] "வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு க . லை.."

நீதி: 'கலை' யல்ல பங்கஜம் 'கொலை' பாவம்! நீ நாலாம் வகுப்புவரை தானே படித்திருக்கிறாய்? மர ணத்தின் மணியோசை கேட்க ஆரம்பித்துவிட்டது. இன்றைக்கு என்ன கிழமை என்று உனக்குத் தெரியவில்லையா.

பங்: வெள்ளிக்கிழமை! வீடு வாசலெல்லாம் மெழுகினது எனக்குத் தெரியாதா?

நீதி: டியர் பங்கஜம்! ஒரு வெள் ளிக்கிழமை தானே எங்கப்பா இறந்தார்!

பங்: அதற்கென்ன? போன வெள்ளிக்கிழமை நம்ம வீட்டு எருமை மாடு இறந்தது!

நீதி: உன் அம்மா இறந்ததும் ஒரு வெள்ளிக்கிழமை தான் என்று நினைக்கிறேன்.

பங்: போதும்! சித்திர புத்திரன் 'லிஸ்டை' வாசித்தது...... !

நீதி: எவ்வளவோ கனமான விஷ யத்தை இப்படி அலட்சிமாய்ப் பேசுகிறாய்? பங்கஜமே! உன்னைப் பிரியுங் காலம் வந்து விட்டதே. உன்னைப் பிரிவதென்றால் ... ... கொஞ்ச நேரத்தில் என்னைக் கொன்று விடுவார்கள்.

பங்: உங்களை முன்னாலேயே கொன்றிருக்கணும். எந்த வழக் கெடுத்தாலும் தூக்குத் தண்டனை தானா? எத்தனையோ நீதிபதிகள் 'White gloves' வாங்குகிறார் கள். தூக்குத் தண்டனை போடு கிறதென்றால் உங்களுக்கு 'குலோப் ஜான்' சாப்பிடறது மாதிரி இருக்கு! அதன் பயனை அனுபவித்துத்தானே தீரணும்.

நீதி: பங்கஜம்! நான் என்ன செய் வேன் சட்டம் அப்படி இருக்கு! நீதிபதி ஒரு கூத்தாடி அல்ல, சட் டத்தை ஜனங்கள் விருப்பத் திற்கு வளைத்துக் காண்பிப்ப தற்கு! சட்டம் ஒரு கல் தூண். கண்டிப்பான நீதிபதியாய் இருந் தால் கொலைதானா வெகுமதி, பங்கஜம்?

பங் : உங்களை ஒருத்தனும் கொல்ல மாட்டான். நீங்கள் இன்றைக்கு நிச்சயமாகச் சாக மாட்டீர்கள். வெங்காயச் சாம்பாரும் உருளைக் கிழங்கு பொடி மாஸும் வச்சி ருக்கு. திருப்தியாகச் சாப்பிட் டிட்டு வலைக்குள்ளே போய் படுத் துக் கொள்ளுங்கள். அங்கே ஒரு கொசு கூட உங்களைத் தொடாது.

(சங்கர் வருகிறான்)

நீதி : சங்கர்! எல்லாக் கதவுகளை யும், ஜன்னல்களையும் அடைத்து விட்டாயா? குளிக்கின்ற அறை யில் தண்ணீர் போ கிற சிறு துவாரத்தைக் கூட அடைத்து விடு.

சங் : எல்லாத் துவா ரத்தையும் அடைச் சாச்சு!

பங் : நல்லா யிருக்கு கூத்து! இன்னுங் கொஞ்சம் பொறுத்து பையன் ரொட்டி கொண்டு வருவானே? அதை வாங்க வேண்டாமா?

நீதி : பங்கஜம்! என் உயிரைப் பார்க்கிலும் உனக்கு ரொட்டி பெரிதாய்ப் போச்சா?

பங் : சரி! இந்தக் காகிதம் உங்களுக் குத்தான் வந்தது என்று எப்படித் தெரியும்?

நீதி : அது என் பையில் இருந்தது. தீப் பெட்டியைத் தேடும் போது என் கையில் அகப்பட்டது.

பங் : தீப் பெட்டியா? மறுபடியும் சிகரெட் குடிக்க ஆரம்பித்து விட் டீர்களா?

நீதி : இல்லை. ரொம்பக் குறைத்து விட்டேன், பங்கஜம். கொஞ்சம் 'டல்' லாக இருந்தது. அத னால் தான்...! ஒரு நெட்டை யான கறுத்த மனிதன் என் பை யில் போட்டு விட்டு வேகமாகப் போய் விட்டான். அவனுடைய கிருதா மீசையைப் பார்க்கவே பய மாயிருந்தது. பெரிய அயோக் யன்!

பங் : அவன் அவ்வளவு அயோக் 'ன் அல்ல!

நீதி : உனக்கு எப்படித் தெரியும்?

பங் : பெரிய அயோக்கியனாய் இருந்திருந்தால் அந்த இடத்தி லேயே உங்களைக் கொன்றிருப் பான். கொஞ்சம் நல்லவனாய் இருந்ததினால்தான் உங்களை எச் சரிக்க இந்தக் காகிதத்தைப் போட்டிருக்கிறான். நல்ல சமயத்தில் கண்டு பிடித்தீர்கள். இல்லாவிட்டால் பீச் சுக்குப் போயிருப்பீர் கள். அங்கே அவன் உங்களைக் கொன்றி ருப்பான். நான் இரண்டு மணி நேரத் திற்கு முன்பே வித வையாகியிருப்பேன்.

நீதி : வருந்தாதே பங் கஜம். நான் செத்தால் கூட பரவாயில்லை! நீ விதவையாகக் கூடாது, பங்கஜம்! எனக்கு மனக் குழப் பம் ஏற்படுகிறது. புத்தி தடுமாறுகின் றது. நீதிபதியும் மனி தன் தானே! சங்கர், இன்னும் அடைக்க வேண்டியது.......

சங் : ஒன்று மில்லை யுவர் ஆனர்!

நீதி : ஒரு துவாரத்தைக் கூட பாக்கி விடலியே?

சங் : சமயலறைக் கதவை மட்டும் அடைக்க வில்லை.

நீதி : தியை வை! ஏன் அடைக்க வில்லை?

சங் : சமையல்காரி...

நீதி : அவளுக்கென்ன கொள்ளை வந்துட்டுது? அவள் என்ன சொல்லுகிறாள்?

சங்: கதவடைப்பு செய்கிறது சட்ட விரோதம் என்று சொல்லு கிருள்!

நீதி: பெரிய அட்வகேட்டின் மகள்!

சங்: யார் வந்தாலும் அவள் சமாளிக்கத் தயாராம்.

பங்: நான் அவளிடம் பேசிக் கொள்கிறேன்.

நீதி: அவளுக்கென்ன பைத்திய மா? கதவை அடைக்காவிட்டால் அவள் முன்னுலேயே நான் கொல் லப்படுவேன் என்றுசொன்னுயா, சங்கர்?

சங்: சொன்னேன், யுவர் ஆனர், சொன்னேன்! அந்த இடத்தை விட்டு நான் போகா விட்டால் என்னைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினுள். பெண் பயில் வான் மாதிரி இருக்கிருள். கை யில் உலக்கையோடு காட்சி யளித்தாள்.

பங்: இரவு நேரங்களில் அவள் குணம் அப்படித்தான் இருக்கும். நான் அவளைச் சமாதானப் படுத் திக் கொள்கிறேன்.

நீதி: சே, சே, சே! நீதிபதியின் மனைவி சமையல்காரியிடம் சமா தானம் பேசுவதா? நீ ஐக்கிய நாட்டுச் சபையில் பேசுவதற்கு யோக்ய முள்ளவள். அவளிடம் பேசவா? அவள் இந்த நிமிஷ மே என் வீட்டை விட்டுப் போக வேண்டும்.

பங்: நீதிபதிக்கு வீட்டு விவகா ரங்கள் சரியாப் புரியாது. எல் லாச் சமையற்காரர்களும் இப் படித்தான். அவர்கள் செய்கிற வேலையினுல் அவர்களுடைய குணம் இப்படியிருக்கிறது காலை யில் இட்லிக்கு **மிளகாய்ப்** பொடி இடிக்க வேண்டும். மத்தி யானச் சாபபாட்டுக்கு **வற்றல்** குழம்பு. டிபனுக்கு **காராவடை** இரவு சாப்பாட்டுக்கு **மிளகு** ரசம். பாவம்! அவர்களுக்கு எரிச்சல் வராமல் என்ன செய் யும். மேலும் சதா நெருப்புப் பக்கத்திலே நிற்கிருர்கள்.

நீதி: உன் 'ஆர்கியூமென்ட்' தப்பிதம்! எஜமானனின் உயி ரைப் பெரிதாகக் கருதாத சமை யல் காரிக்குத் தூக்குத் தண்டனை கொடுத்தால் கூடத் தகும். ஊம்! அவளை உடனே வீட்டை விட்டு வெளியே போகச் சொல்.

பங்: வெளியேற்றி விடுகிறேன். ஆனுல் நாளைக்கு காலையில் மெது வானதோசை,வாசமுள்ள சட்னி யார்தான் உங்களுக்கு செய்து கொடுக்கப் போகிருர்கள்? எதையும் அவள் கையினுல் செய் தால் தானே உங்களுக்கு ருசி யாய் இருக்கும். நீங்கள் சும்மா இருங்கள். சமையலறையை நான் அடைத்துக் கொள்கிறேன். புகை போக்கியையும் அடைத்து விடட்டுமா?

நீதி: பங்கஜம்! நீ நீதிபதியின் மனைவிக்குலாயக்கானவள்தான்! உன் மூளை அபாரமாயிருக்கிறதே- அதையும் அடைக்கச் சொல்.

பங்: இந்த மெழுகுவர்த்திகளையும் வைத்துக் கொள்ளுங்கள். இருட் டில் தடுமாறப் போகிறீர்கள்.

நீதி: பங்கஜம்! ஆபத்துக் காலத் தில்தான் பெண்கள் அதிசயமான காரியங்களைச் செய்கிருர்கள். சங் கர்! உன் லீவுப் பிரச்னையை முடித்து விடலாமா?

சங்: யுவர் ஆனர்! நீங்கள் இவ் வளவு ஆபத்தில் இருக்கும்போது எனக்கு லீவே வேண்டாம். உங் களுக்கு ஏதாவது உதவி செய்ய லாம் என்று நினைக்கிறேன். சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

நீதி: 'நான் சென்ஸ்.' இவ் வளவு தூரம் பந்தோபஸ்து செய்த பிறகு எமன்கூட இந்த வீட்டிற்குள் நுழைய முடி யாது. சங்கர்! நான் இனிமேல் சாக மாட்டேன். சாகமுடியாது.

சங்: யுவர் ஆனர்! எதற்கும் நம் பர் நைன்டி திரிக்கு (Number Ninety-three) 'போன்' பண் ணட்டுமா?

நீதி: வேண்டாம், சங்கர்! கேவலம்! என் உயிரைக் காப்பாற்ற போலீஸ் உதவியா? நாளைக்கு போலீஸ்காரர்கள் மதிப்பார்களா? அதென்ன மூலையில் ஒரு அட்டைப் பெட்டி.

சங்: யாரோ ஒருவன் அதை அங்கே வைத்து விட்டுப் போனான்.

நீதி: அவன் எப்படியிருந்தான்? நெட்டையா, கருப்பா, கிருதா மீசை வைத்திருந்தானா?

சங்: முகத்தைச் சரியாய்ப் பார்க்கவில்லை.

நீதி: அது என்னவென்று நீ கேட்டாயா? முட்டாள்! நம் கோர்ட்டில் உள்ளவர்கள் எல்லோரும் இப்படித் தான் இருக்கிறார்கள்.

சங்: அவன் வேகமாய்ப் போய் விட்டான். அவனுடைய கன்னத்தில் ஒரு கருப்பு மச்சம் இருந்தது.

நீதி: அவனே தான்! நூற்றுக்கு நூறு அவனே தான்... சங்கர்! இந்த அட்டைப் பெட்டியை உடனே அப்புறப்படுத்த வேண்டும். ஒரு வேளை 'டைம் பாம்' (TimeBomb) ஆக இருந்தாலும் இருக்கலாம்.

சங்: வெளியே வீசி விடட்டுமா, யுவர் ஆனர்?

நீதி: நீதிபதியின் கிளார்க் முட்டாளாய் இருக்கிறாயே? வீசினால் வெடித்து விடாது? இன்னுங் கொஞ்ச நேரம் சென்றால் இங்கேயே இது வெடித்து விடும். பிறகு நம் இருவரையும் பார்க்க முடியாது. சங்கர், இந்தப் பெட்டி இங்கே எப்போது வந்தது?

சங்: சரியாக ஏழு மணிக்கு, சார்!

நீதி: இரண்டு மணி நேரம் ஆகி விட்டதா? சங்கர், 'டைம்-பாம்' எத்தனை மணி நேரத்தில் வெடிக்கும்?

சங்: யுவர் ஆனர்! 'இன்ஸ்பெக்டர் ஆப் எக்ஸ்ப்ளோஸிவ்ஸ்'க்கு 'போன்' பண்ணிக் கேட்கட்டுமா?

நீதி: போன் செய்தால் நாம் இரண்டு பேரும் கம்பியை எண்ண வேண்டியது வரும்.

சங்: ஜன்னலை நீங்கள் திறவுங்கள் யுவர் ஆனர்! நான் இதைச் சாக்கடையில் வீசி விடுகிறேன்.

நீதி: வேண்டாம், சங்கர்! நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நீ வீசப் போகும் போது வெளியேயிருந்து உன்னைச் சுட்டு விட்டால்...

சங்: என் உயிர் பெரிதல்ல, யுவர் ஆனர்! தங்கள் உயிர் நாட்டுக்குத் தேவை..

நீதி: இல்லை, சங்கர்! நீ வாலிபன். இந்த உலகில் நீ அநேக ஆண்டுகள் வாழ வேண்டும். கிளார்க்காகவே இருந்து பல அரிய காரியங்களைச் சாதிக்க வேண்டும். நான் இறந்தபின் நீயும் பங்கஜமும் என் வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக வெளியிடவேண்டும். பொறு! ஒரு அருமையான யோசனை தோன்றுகிறது, சங்கர்!

சங்: என்ன யோசனை, யுவர் ஆனர்?

நீதி: குளிக்கும் அறையிலுள்ள மரத் தொட்டியில் தண்ணீரை நிரப்பி இங்கே கொண்டு வா.

சங் : இதோ ஒரு நிமிஷத்தில், யுவர் ஆனர் !

நீதி : கொண்டு வந்து விட்டாயா ? அந்த அட்டைப் பெட்டியை மெது வாகத் தொட்டிக்குள் வை.

சங் : யுவர் ஆனர் ! மிதக்கவல் லவா செய்கிறது ?

நீதி : அதற்குமேல் ஒரு பாரமான பொருளை வை. இதையும் நான் தானு சொல்ல வேண்டும் ?

சங் : யுவர் ஆனர் ! வெளியே போய் ஒரு செங்கல்லைக் கொண்டு வரட்டுமா ?

நீதி : கதவைத் திறக்கவா ? சரி யாய்ப் போச்சு! இப்போது என்ன கதை பேசிக் கொண்டு இருக்கிறோம் ?

சங் : எதை எடுத்து வைக்க வென்று தெரியவியே ?

நீதி : உனக்கு பேனு கையில் இருந் தால்தான் மூளை வேலை செய்யும்! கனமாய் இருக்கிறது எதுவானு லும் சரி !

சங் : 'ஆக்ஸ்பர்ட் டிக்ஷனரி'

நீதி : கொண்டு வா! ' 'என்ஸை கிளோ பீடியா பிரிட்டானிகா' 'கிரிமினல் புரோசீஜர் கோட்' 'கம்ப ராமாயணம் மூலமும், உரை யும்' எல்லாத்தையும் எடுத்து தண்ணீரில் போடு.

சங் : நனைந்து போகுமே, யுவர் ஆனர் ?

நீதி : மனிதனைக் காட்டிலும் அவன் எழுதின புத்தகம் பெரிதா ?

சங் : எவ்வளவு அழகான புத்த கங்கள், யுவர் ஆனர் !

நீதி : மனிதன் சாகப் போகிறுன். நீ புத்தகங்களின் அழகைப் பருகு கிருயோ ? சரி! அட்டைப் பெட்டி கீழே போய் விட்டதல்லவா ? 'மை காட் !' ஒரு யமகண்டத் தைத் தப்பித்து விட்டேன்.

பங் : தொட்டியை இங்கே ஏன் கொண்டு வந்தீங்க. இந்த ராத் திரியிலே குளிக்கப்போறீங்களா? ஜலதோஷமில்ல பிடித்துக் கொள்ளும்.

நீதி : பங்கஜம்! அந்த அயோக் யன் இங்கே 'டைம்பாம்' வைத்து விட்டுப் போயிருக்கிருன். நீதிபதி முட்டாள் என்று அவன் நினைத் துக்கொண்டான் போலும்! நான் அதைத் தொடவில்லை. சங்கரின் உதவியால் தண்ணீருக்குள் போட்டுவிட்டேன். இந்தா பாரு அந்த அட்டைப்பெட்டியை !

பங் : நல்லாயிருக்கு ! அழகான...

நீதி : உன்னுடைய அழகான கம் பளத்தின்மேல் தண்ணீர் கொட்டி விட்டதென்று உனக்குக் கவலை யாய் இருக்கிறதோ? காஷ்மீர் கம் பளம் பெரிதா ? கணவனின் கரும்புபோன்ற உயிர் பெரிதா? பங்கஜம்! நீ எஃகு உள்ளம் படைத்தவள். பட்டாளத்தில் சேர்ந்திருக்க வேண்டும்.

பங் : இதென்ன கம்ப ராமாயணம் மிதக்கிறது ? வீணுக ஆர்ப் பாட்டம் பண்ணுறீங்க. உங்களு க்கு பிளட் பிரஷர் இருக் கிறதனுல் நீங்க அனுவசிய மான பரபரப்புக்கு இடங் கொடுக்கக்கூடாதென்று டாக்டர் சொல்லியிருக்காரு !

நீதி : தலைவலியும், வயிற்றுவலியும் டாக்டருக்கு வந்தால்தானே தெரி யும் ! அவருடைய மேஜைக்குக் கிழே ஒரு 'டைம் பாம்' கிடந்தால் தெரியும், அவருடைய விஷயம் ! சமையல் அறையை அடைத்து விட்டீர்களா ?

பங் : எல்லாம் பூட்டியாச்சு. சமை யல்காரி சௌகரியமா வெற்றிலை போட்டுக் கிட்டு இருக்கிருள்.

நீதி : என்னுடைய ஆபத்தான நிலைமை உங்களுக்கெல்லாம் 'சர்க்கஸ்' பார்க்கிறது மாதிரி இருக்கு ! பங்கஜம்! அதோ, சுவ ரில் மாட்டியிருக்கும் உன் அப்பா படத்தை எடுத்துவிடு. வெளியே இருந்து அந்த அயோக்யப் பயல் சுட்டால் படம் பாழாகிவிடும்.

பங் : என்னடா இது? நீதிபதிக்கு மூளை குழம்பினால் அதைச் சரிப் படுத்த முடியாதோ? கதவு, ஜன்னல் எல்லாம் அடைச்சாச்சே! பிறகு எந்த வழியாச் சுட்டிடுவான்?

நீதி : நீதிபதிக்கு மூளை குழம்பினாலும் சட்டத்தை மட்டும் தப்பிதமாகப் பிரயோகிக்கமாட்டான்! பங்கஜம்! அவன் இந்த வென்டிலேட்டர் வழியா சுட்டுட்டா என்ன பண்றது?

பங் : அப்படியானால் சுடுகிறவன் வெளியே நிற்கும் புளியமரத்திலே ஏறித்தான் சுடணும்!

நீதி : பங்கஜம் நீ ஷெர்லாக் ஹோம்ஸை தோற்கடிச்சிட்டியே!... அண்ணைக்கே அந்த புளியமரத்தை விறகுக்குவெட்டச் சொன்னேனே கேட்டியா!

பங் : எல்லாம் உங்க நன்மையை உத்தேசித்துத்தான் அதை வெட்டக்கூடாதுன்னு சொன்னேன்.

நீதி : என் நன்மைக்காகவா!

பங் : ஆமா! அந்த மரத்துப் புளியை எடுத்து ரசம் வச்சா நீங்க ரெண்டு உருண்டைச் சோறு அதிகமாகச் சாப்பிடுறீங்க!

நீதி : My beloved wife! My solid sugar cane! என் ரிவால்வரை எடு.

பங் : சரி! முதலில் தோட்டக்காரனை வெளியே போகச் சொல்லிட்டு ரிவால்வரை எடுங்க.

சங் : (இரைகிறார்) ஏ! முனியா! புளியமரத்துப் பக்கம் போகாதே! எசமான் சுடப் போறாரு.

நீதி : எச்சரித்து விட்டாயா, சங்கர்?

சங் : எஸ், யுவர் ஆனர்!

நீதி : இனிமேல் அவன் செத்தால் அதற்கு அவன்தான் ஜவாப்தாரி. சட்டம் அப்படித்தான் சொல்லுது. சரி, என் ரிவால்வரை எங்கே?

பங் : அதை வாங்கினதுதான் மிச்சம்! ஒரு தடவையாவது சுட்டுப் பார்த்திருக்கிறீர்களா?

நீதி : துப்பாக்கியிலே சுடறதின்னு அப்பளம் சுடறதின்னு நினைச்சிக்கிட்டியா?

பங் : துருப்பிடிச்சிப் போய் இருக்கு! ஜாக்ரதையாக கையாளுங்கள். யாரோ துருப்பிடிச்ச துப்பாக்கியைத் துடைச்சிக்கிட்டு இருக்கும்போது குண்டு கையில பாய்ந்திட்டுதாம். பேப்பரில் நீங்கபடிக்கல்லே?

நீதி : இந்த 'டம்டும்' செய்திகளைப் படிக்க எனக்கு நேரம் கிடையாது. பங்கஜம், நீ ஒண்ணுக்கும் பயப்படாதே! என் துப்பாக்கியில் குண்டு இல்லே.

பங் : அப்படின்னா நான்கூட சுடுவேனே!

நீதி : விளையாடுவதற்கு நேரமில்ல இது. பங்கஜம்! நீ உன் படுக்கை அறைக்குப் போ!

பங் : நீங்க இல்லாம நான் எப்படிப் படுக்கை அறைக்குப் போவேன்! உங்களுக்கு இவ்வளவு ஆபத்து இருக்கும்போது எனக்கு எப்படித் தூக்கம் பிடிக்கும்.

நீதி : உன் தியாக எண்ணத்தை மெச்சுகிறேன் பங்கஜம் ! சங்கர், தயாராக இரு. நேரமாகிவிட்டது. தோட்டக்காரன் போய் விட்டானா ?

சங் : போய் விட்டான், யுவர் ஆனர் !

நீதி : யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்கிறதே ?

பங் : யாரின்னு பாரு, சங்கர் !

நீதி : எக்காரணத்தைக் கொண்டும் கதவைத் திறவாதே.

சங் : கதவைத் திறக்காட்டா யாரின்னு பார்க்க முடியாதே !

நீதி : ஜன்னலையும் திறக்காதே, திறந்தால் உன்னைச் சுட்டுத் தள்ளிவிடுவான் அந்தக் கொலைகாரன் !

பங் : யாரும் நமக்குத் தெரிஞ்சவங்களாக இருக்கலாம்...

நீதி : அப்படின்னா மேஜை மேலே நாற்காலியைப் போட்டு, அதன் மேலே முக்காலியைப் போட்டு, அதுக்குமேலே நின்று கொண்டு வெண்டிலேட்டர் வழியாக வெளியே பாரு.

சங் : அப்படியே, யுவர் ஆனர் !

பங் : இப்போது பார். யாராவது நிற்கிறார்களா ?

நீதி : கருப்பா, குட்டையா இருக்கானா ?

சங் : நன்றாய்த் தெரிகிறது, யுவர் ஆனர் ! அப்பாடி !

நீதி : அது யார், சங்கர் ?

சங் : உங்க சிநேகிதர் மிஸ்டர் சேகர்.

நீதி : சேகரா ? ஓடிப் போய்க் கதவைத் திற.

(சேகர் வருதல்)

பங் : என்னங்க, இந்த நேரத்தில் ?

நீதி : என்ன சேகர், ஒரு நாளுமில்லாத திருநாளாய் ராத்திரி நேரத்தில் வந்திருக்க ?

சேகர் : சரியாய்ப் போச்சு ! இன்றைக்கு ராத்திரி பத்து மணிக்கு கலைவிழாவில் ஆந்திரா ஸிஸ்டர்ஸ் நடனக் கச்சேரி பார்க்கணும்னு ரகசியமாகத் திட்டம் போட்டிருந்தோமே. மறந்துவிட்டீர்களா ? ஒரு காகிதத்தில்கூட குறித்து வைத்தீர்களே ?

பங் : இந்தக் காகிதந்தானா ? எழுதினது நீங்கள்தானா ? உங்கள் கையெழுத்தே உங்களுக்கு விளங்காமல் போய்விட்டதா ? அந்த அட்டைப் பெட்டியில் என்ன இருந்தது தெரியுமா ?

நீதி : என்ன ?

பங் : உங்கள் புதுக் கோட்டு. தையற்காரன் கொடுத்துவிட்டுப் போனான்.

நீதி : நல்லாயிருக்கு பங்கஜம் ! டிக்ஸனரியை அதன்மேல் வைக்கும்போதே சொன்னால் என்ன ?

பங் : சொல்லியிருப்பேன் ! ஆனால் நீதிபதியின் முன்னால் என் கதி என்னவாகுமோ என்று நினைத்தேன்.

நீதி : சங்கர், இங்கே நடந்ததை வெளியே யாரிடமும் சொல்லாதே. உனக்கு எத்தனை நாள் லீவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்.

(திரை)

சந்தா விகிதம்

—

தனிப்பிரதி 25 ந.பை.

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

இசை :
மாஸ்டர் வேணு

ஸ்டுடியோ :
சிட்டாடல்

டைரக்‌ஷன் :
தசரத ராமையா

கதை :
ஆச்சார்யா அதிரேயா

வசனம் :
P. X. ரங்கசாமி.

விவரங்களுக்கு; **மெஜஸ்டிக் பிக்சர்ஸ்,**

10. ஸ்மித் ரோட், சென்னை–2.

சினிமா விமர்சனம்

அரசு பிக்சர்ஸ் :

'தேடி வந்த செல்வம்'

அழகான பெயர்; சிறிய படம்— இவை சிறப்புகள்.

கதை : 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்' என்ற பழமொழியையும், 'பெற்றால்தான் பிள்ளையா? எல்லாக் குழந்தைகளும் நம் குழந்தைகள்' என்ற தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

அமிர்தலிங்கம் — பாக்கியம் தம்பதிகளைத் தேடிவந்த செல்வம் சிதம்பரம்; அவர்கள் பெற்று எடுத்த பிள்ளை அம்பலம். அமிர்தலிங்கம் சிதம்பரத்தை வஞ்சித்து, அம்பலத்திற்கே எல்லாச் சலுகைகளையும் அளித்து வருகிறார். பாக்கியம் இரண்டு கண்களையும் ஒன்றாக எண்ணுகிறாள். இறுதியில் பெற்றபிள்ளை எமனாக, வந்துற்ற மைந்தன் காப்பாற்றுகிறான்.

இது கதையின் சாரம். சாரத்தை அதிகப்படுத்த வரும் உப பாத்திரங்கள் உண்மையில் நமக்குச் சக்கைகள். பிளாட்பாரம், பாவாடை, சிங்காரம், காற்றிலே ஊசலாடும் அஸ்திவார மில்லாத கட்டிடங்கள்.

வசனப் பொறுப்பை சோலைமலை நன்றாகவே நிறைவேற்றியிருக்கிறார்.

ராஜேந்திரன் நடிப்பிலே இல்லாத உணர்ச்சி குரலிலே காணப்படுகிறது. 'டகோடா' விமானப் பிரயாணம்போல சத்தம் காதைப் பிளக்கிறது. 'வைகவுன்ட்'போல சுகமாக, இதமாக நடிக்கவும், பாவங்களைப் பிரதிபலிக்கவும் அவருக்கு இன்னும் எத்தனை படங்களாகுமோ?

ராஜசுலோசனா காதல் கட்டங்களில் ரசிகர் உள்ளங்கள் துள்ளும் வகையிலே செய்திருக்கிறார். ஆனால் அவரது பாகம், தமிழக் கிராமியப் பண்பாட்டிலே தோயாது ஹாலிவுட்டை நினைவூட்டுவதாக உள்ளது.

பாலையா பந்துபோல் துள்ளுகிறார்; தவளைபோல் தத்துகிறார்; தத்ரூபமாக நடிக்கிறார்; பாராட்டுக்களைப் பெறுகிறார்.

வி. கே. ராமசாமியும், பி. எஸ். ஞானமும், எம். லட்சுமிப்பிரபாவும் கச்சிதமாக நடித்திருக்கிறார்கள்.

கன்னட சரோஜாதேவி இன்னும் தமிழ் சரோஜாதேவியாக வில்லை என்பதால்தானோ என்னவோ அவருக்கு அதிக வேலை இல்லை. அலுங்காமல், குலுங்காமல் அலங்காரமாக வந்து போகிறார்.

ராஜகோபால் நடிப்பு, துடிப்பாக உள்ளது. கருணாநிதி — முத்துலட்சுமி கும்மாளம் போடுகிறார்கள். மோருக்கு மணம் சேர்க்கும் கருவேப்பிலையைப் போல.

'டப்பான், குப்பான்' பாடல்கள், 'பக்கத்திலே இருப்பே, நான் பாத்துப்பாத்து ரசிப்பேன்' பிரபலமாகலாம்.

மொத்தத்தில், 'தேடிவந்த செல்வம்' தோல்விப் படங்களின் வெம்மையால் களைத்து வரும் திரைப்பட ரசிகனுக்கு ஒரு குவளை குளிர்ந்த மண்பானை நீர். ஆனால் தேவை இல்லாத சில காட்சிகளை வெட்டி, விறு விறுப்பை ஏற்றியிருந்தால் ஐஸ் போட்ட பாதாம் கீராக இருந்திருக்கும்.

எப்படியோ முதலாளி, நீலகண்டனைத் தேடி, இப்படத்தால் செல்வம் சேரப் போவதென்னமோ உண்மை!

—"ரசிகன்"

'இசைக்குயில்கள் வரிசை

டி.வி.ரத்னம்

குற்ருலம்!

கன்னித் தமிழகத்தின் பெருமைக்குரிய குற்ருலம். 'பொங்கருவி வீழுமலை எங்கள் மலையே!' என்று நாம் தோள்தட்டும் இயற்கை எழில் செறிந்த இடம்.

தென் காசி!

குற்ருலச் சாரலிலே அமைந்த திருநகரம்; வடநாட்டின் காசிபோல வரலாற்றுச் சிறப்பும் பெற்ற தென்ஞட்டின் தென்னகரம். வழுதியர்கள் ஆண்ட பொன்னகரம்!

'குளுகுளு' குற்ருலத்தின் சரிவில் தொன்மையான தென்காசி நகரில் தமிழ் வளரும் திக்கெலாம் புகழ் பெற்ற திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த தமிழ் இசைக்குயில் திருமதி டி.வி.ரத்னம்.

கேரளம், ஆந்திரம், வடநாடு தந்த இசைக்குயில்களை யெல்லாம் சந்தித்த பிறகு நம் தமிழ்த் திருநாட்டின் தனிப்பெரும் இசைக்குயிலைச் சந்தித்தேன்.

குற்ருலச் சாரலிலே பிறந்த குயிலின் குரலில் இனிமை இழைகிறது என்ருல் அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? குற்ருலச் சாரலிலே பிறந்த குழந்தையின் மழலை கூட அங்கு தவழும் சிற்ருற்றின் இன்பச் சலசலப்பே சுருதி கூட்டுமே?

* * *

'வாருங்கள்...வாருங்கள்' என்றழைத்துச் சென்ருர் திரு.வள்ளிநாயகம் பிள்ளை.

முற்றங்களைக் கடந்து படிகளை ஏறினேம். ரசிகர்கள் அமைத்துத் தந்த பாராட்டுப் படிக்கட்டுகளுக்கு மேலே வாழ்க்கைக் கூடுகட்டி வாழ்கிறது, இந்த இசைக்குயில்.

வரவேற்பு அறையிலே நான் அமர்ந்த பிறகு கலைஞரை அழைக்கச் சென்ருர் தந்தையார் திரு. வள்ளிநாயகம்.

வீட்டிற்கு எதிரே விமலன் கபாலீச்வரின் கோயில் கம்பீரமான கோபுரம்..அழகு கொஞ்சும் தடாகம், மைலாப்பூர் வடக்கு மாடவீதி என்ருல் அருள் நிறைந்த அழகு பொலிவதில் என்ன ஆச்சரியம்!

இயற்கை செறிந்த குற்ருலத்திலே பிறந்தவர்கள், சென்னைக்கு வந்தும் கலைப் பண்பை உணர்த்தும் கபாலீச்வரத்தின் அருகிலே வசிப்பது பொருத்தம் தானே?

'வணக்கம்... என்னங்க......மயிலாப்பூரை ரசிக்கிறீர்களா?'

ராஜரத்தினத்தின் நாதசுரமாக,

மாலியின் குழலாக, பாலசந்தரின் வீணையாக, துவாரம் நாயுடுகாருவின் பிடிலாக, அரியக்குடியின் மதுரமான கண்டமாக இழைந்த இக்குரல் கேட்டுத் திரும்பினேன்.

குரல் இனிமை மாத்திரம் அல்ல, 'என்னங்க' என்ற அந்தப் பண்பாடு நிறைந்த திருநெல்வேலி வழக்குச் சொல்லும் என் இதயத்தைச் சுண்டி இழுத்தது!

* * *

திருச்செந்தூர் திருப்பதியானின் திருநாமம் பெற்ற திரு. வள்ளிநாயகம் பிள்ளைக்கும், கேட்டவரம் அருளும் சங்கரநயினார் கோவில் அம்மையின் பெயர் சூடிய திருமதி ஆவுடை அம்மாளுக்கும், சுமார் இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர் தென்காசியில் பிறந்தவர் இந்த இசைக்குயில்.

சிறுவயதிலேயே சுந்தரபாண்டியபுரம் இராமலிங்க பாகவதரிடம் இசைப் பயிற்சி பெற்று வந்தார்.

'டைரக்டர் திரு. கே. சுப்பிரமணியமும், திருமதி எஸ். டி. சுப்புலெட்சுமியும் எனது பாட்டுக்களைக் கேட்டு சென்னைக்கு அழைத்தார்கள். 'பக்த சேதா'வில் 'மோகன முரளி தாரா' என்ற பாடலைப் பாடி ஒரு சிறுவனாகவும் நடித்தேன்' என்றார் திருமதி. ரத்னம்.

'நடித்தீர்களா! ஆச்சரியமாக இருக்கிறதே!'

'ஆம். அப்பொழுது பின்னணிக் குரல் முறை பிரபலமாகாத நேரம். இசை தெரிந்தவர்களே நடிகர்களாக இருந்த காலம். பிறகு 'கண்ணகி' படத்தில்கூட சிறிய கண்ணகியாக நடித்தேன். அத்துடன் மாதவிக்கு இரவல் குரலும் கொடுத்தேன்!'

'மோகன முரளி தாராவே உங்களைப் பிரபலமாக்கிவிட்டதா?'

'இல்லை... இல்லை. அதிலேதான் அறிமுகமானது. பிறகு 'தாஸி அபரஞ்சி', மிஸ்மாலினி', 'மர்மயோகி', 'வேலைக்காரி', 'பொன்முடி' ஆகிய படங்களில் பாடியவைதான் ரசிகர்கள் பாராட்டுதல்களை அளித்தன. 'ஆயர்பாடிக் கண்ணா வா', 'ஆளை ஆளைப் பார்க்கிறார்', 'மாலையிட்ட மங்கை யாரோ' என்ற பாடல்கள் அதை வளர்த்தன!

'இதுவரை சுமார் எவ்வளவு படங்களில் பாடியிருப்பீர்கள்!'

'சுமார் நூறு படங்களில்.'

'அப்பொழுது விழா கொண்டாடலாம் என்று சொல்லுங்கள்!'

என் பதிலைக் கேட்டு திருமதி ரத்னம் குறுநகை பூத்தார்.

எல்லா இசைக் குயில்களையும் போலவே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி மொழிகளில் பாடுகிறார் இந்த இசைக்குயில். இந்தியில் பல பஜனைப் பாடல்களைப் பாடி இருக்கிறாராம்.

இராமநாதபுரம் கிருஷ்ணய்யர், செம்பை வைத்தியநாத பாகவதர் ஆகிய இரண்டு கர்நாடக மன்னர்களிடம் இசை பயின்ற இந்த இசைக்குயில், கர்நாடக இசை தெரிந்தவர்கள், சினிமா இசை மெட்டுக்களை எளிதில் இசைக்கலாம் என்று கூறுகிறார்.

இசை எவ்வளவு நன்றாக அமைந்தாலும் படத்தில் அது பொருந்தும் கட்டமும், அப்படத்தின் வெற்றியையும் பொறுத்தே பிரபலமாகிறது என்று நினைக்கிறார்.

'உங்களுக்கு மிகவும் பிடித்த பாடல்கள் எவை?' என்ற என் வினாவிற்கு விடையாக, 'மாமன் மகளில்' பாடிய 'தேவி! நீயே துணை'யும், 'நாடோடி மன்னனி'ல் பாடியுள்ள 'பாடுபட்டால் தன்னாலே, பலனிருக்கு கைமேலே!' என்ற பாடலையும் குறிப்பிட்டார்.

'சினிமா இசையோடு இசைக் கச்சேரிகளும் நிறையச் செய்துவருகிறேன். எனது இலட்சியம் எல்லாம் கர்நாடக இசையில் மேலும், மேலும் பயிற்சி பெறுவதுதான். வீட்டைப் பொறுத்த அளவில் நல்ல முறையில் குடும்பம் நடத்தவேண்டும். அவ்வளவுதான்!' இது திருமதி ரத்தினத்தின் இலட்சிய விளக்கம்.

'அத்துடன் வாய்ப்புக் கிடைத்தால் வெளிநாடுகள் செல்ல மிக விரும்புகிறேன். விரைவிலேயே மலேயா செல்லத் திட்டமிட்டு வருகிறேன்.'

இந்த இசைக்குயிலுக்கு மூன்று பையன்களும், ஒரு பெண்ணும் செல்வங்கள்.

'தங்களுக்கு வாரிசுபோல தங்கள் குமாரிக்கு இசைப் பயிற்சி தருகிறீர்களா?' என்று கேட்டேன்.

'இல்லை. என் பெண் நாட்டியம் பயில்கிருள். பையன் பாலு என்பவன் இசையில் ஆர்வம் காட்டுவதால் அவனுக்குப் பயிற்சி கொடுக்க எண்ணி உள்ளேன்.'

'தங்கள் வாழ்க்கையிலேயே மிகவும் மறக்க முடியாத சம்பவம் ஏதாவது...!'

சற்று நேரம் மௌனம். பிறகு, 'எனக்கு ஒன்பது வயதாக இருக்கையில், கொழும்பு வெள்ளவத்தை சபாவில் ஒரு கச்சேரி செய்தேன். சிறுமி பாடுகிருள் என்று தெரிந்து திரளான கூட்டம். அவ்வளவும் தேர்ந்த ரசிகர்கள். எனக்கு அப்பொழுது முறையாக இசைப் பயிற்சி இல்லை என்றுலும், ஏதோ என்னுல் முடிந்த வரை, தெரிந்த அளவு பாடினேன். ஈழத்து ரசிகர்கள், பெருமக்கள் அன்று காட்டிய ஆதரவையும், அந்த நிகழ்ச்சியையும் என்னுல் மறக்கவே முடியாது!' இந்த நிகழ்ச்சியைக் கூறி வருகையில் அவரது வதனம் உணர்ச்சிக் களஞ்சியமாக மிளிர்ந்தது.

திருமதி. ரத்னத்திற்கு உடையிலும் அணியிலும் எளிமைதான் பிடிக்கிறது. வெளிறிய வர்ணங்களை மிகவும் விரும்புகிருர். இசைக் கச்சேரிகளைத் தவருது கேட்கச் செல்கிருர்.

'சந்தர்ப்பம் அளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றி' என்று தென்பாண்டிப் பண்போடு கரம் கூப்பினுர் திருமதி ரத்னம்.

'இசைக்குயில்கள் இடையே மங்காத ரத்தினமாக விளங்குவீர்களாக!' என்று மனதிலே நினைத்தபடி விடைபெற்றேன்.

கபாலீச்வரத்தின் கண்டாமணிகள் 'ஓம்...ஓம்...ஆம்...ஆம்...!' என்று முழங்கின.

—ஆரெஸ்ஸஸ்.

(இடமிருந்து)—தேன்குரல் ராணி, திங்குரல் லீலா, இன்குரல் ஜிக்கி!
(மேலே மத்தியில்)—குயில் குரல் சுசிலா!
(இசைக் குயில்கள் கூடியது, வாஹினி கலைச்சோலையில்!)

"நாடோடி மன்னன்"

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் தயாரிப்பிலே ஏறுநடை போட்டு வரும் 'நாடோடி மன்னன்' விரைவிலேயே தென்னகத் திரைவானில் ஆட்சி செலுத்த பீடோடு வருவான் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருவேடங்களில் பிரமாதமாக நடிப்பதோடு, சிறப்பாக டைரக்ஷனும் செய்து நாடோடி மன்னனை உருவாக்கி இருக்கிருர் புரட்சி நடிகர். கலர் காட்சிகள் கனஜோராக அமைந்திருக்கும் இப்படத்தில் பானுமதி, ராஜம், சரோஜாதேவி, சக்ரபாணி, வீரப்பா, நம்பியார், சந்திரபாபு நடித்து இருக்கிருர்கள்.

"காத்தவராயன்"

ஆர். ஆர். பிக்சர்ஸாரின் 'காத்தவராயன்' ஒரு வெற்றிப் படமாக விளங்கலாம். சிவாஜி கணேசன், சாவித்திரி, பாலையா, எம். என். ராஜம், தங்கவேலு, ஈ.வி. சரோஜா, சந்திரபாபு, கண்ணம்பா ஆகியோர் நடித்துள்ள இப்படத்தின் கதை, வசனம் துறையூர் மூர்த்தியால் செய்யப்பட்டுள்ளது. டைரக்ஷன் ராமண்ணா செய்திருக்கிருர்.

"தாமரைக்குளம்"

கல்யாணி பிக்சர்ஸின் 'தாமரைக்குளம்'. ரசிகர்கள் கண்ணையும், கருத்தையும் குளிர்விக்கும் சிறந்த படமாகத் தயாராகி வருகிறது. கதை எழுதிய திரு. எஸ். ஆர். நடராஜனும், ஒளிப்பதிவாளர் வீரபாகுவும் கூட்டாக இதைத் தயாராக்கிருர்கள். 'முதலாளி' புகழ் வி. ஸ்ரீனிவாசனின் டைரக்ஷனில் உருவாகும் இப்படத்தின் வசனம் முகவை இராஜமாணிக்கத்தால் எழுதப்படுகிறது.

"இல்லறமே நல்லறம்"

நாராயணன் கம்பெனியாரின் 'இல்லறமே நல்லறம்' ஒரு சிறந்த குடும்பப் படமாக விளங்கும். கதை வசனம் கே. வி. ஸ்ரீனிவாஸனால் எழுதப்பட்டு உள்ளது. க. க. க. தெய்வத்தைப் போல இப்படமும் அகில இந்தியப் புகழ் பெறலாம். ஜெமினி கணேசனும், அஞ்சலிதேவியும் முக்கிய பாத்திரங்கள்.

"பெரிய கோயில்"

அருணசலம் பிக்சர்ஸாரின் 'பெரிய கோயில்' ஒரு புரட்சிமிக்க புதுமைக் கதை என்று அறிகிருேம். தமிழர்கள் யாவரும் பெருமை கொள்ளும் அளவில் இப்படம் அமையும். பிரேம் நஸீர், எம். என். ராஜம், வி. கே. ராமசாமி, கண்ணம்பா ஆகியோர் இப்படத்தின் நட்சத்திரங்கள்.

"பாண்டித் தேவன்"

மோராக்—ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ் 'பாண்டித் தேவன்' கதையை அற்புதமாக எழுதி இருக்கிறதாம், டைரக்டர் கே. சுப்பிரமணியத்தின் பேனமுனை. முகவை இராஜமாணிக்கம் அமைத்துள்ள இப்படத்தில் டி. கே. பாலச்சந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், சக்ரபாணி, டி.கே. பகவதி, அசோகன், சந்திரபாபு, ராகினி பி. எஸ். சரோஜா, பி.எஸ். ஞானம் ஆகிய தாரகைகள் இப்படத்தை அலங்கரிக்கிருர்கள்.



கண்ணாம்பாவின் கலக்கமான இத்தோற்றம்
அருணாசலம் பிக்சர்ஸ் 'பெரிய கோயிலில்', ஓர் காட்சி!

அனல் கக்கும் விழிகள் ஏன் இந்த அணங்குகளுக்கு ?
(ஏழுமலையான் பிக்சர்ஸ் : 'மாதா பிதா குரு தெய்வம்')



குணச்சித்திர மலையின் நிலைகுலைந்த தோற்றம்!
(எம். எம். புரொடக்ஷன்ஸ்: 'அல்லி பெற்ற பிள்ளை')



உத்திரா பிலிம்ஸ், 'சுவீகார'த்தில் ஓர்
உள்ளம் உருக்கும் காட்சி!

GENERAL PAPERS LTD.

16, ARMENIAN STREET, MADRAS-1.

Largest Stockists of

PAPER AND BOARDS

(Indian & Foreign)

	Telegrams	Telephone
MADRAS (Head Office)	Papermall	55166 / 3075
Bangalore City	Kagazmall	4917
Coimbatore	Papermall	1047
Madurai	Papermall	619
Tiruchirapalli	Papermall	519
Tirunelveli Jn.	Papermall	201
Sivakasi	Papermall	100

Managing Agents :

GANY & Co.

Telegrams : **Newsprint** Telephone : **85552**

★ எத்திக்கும் புகழ் மணக்கும்

★ தித்திக்கும் திரை ஏடு!

அமிர்தம்

(மாதம் இருமுறை)

ஆசிரியர் : பி. எஸ். இளங்கோ

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

அமிர்தம்

1/35, வாணியர் தெரு, சென்னை-14.

நாட்டியம்

ரஞ்சன், பி. ஏ. எம். லிட்.

சிருங்காரம், வீரம் முதலிய ரசங்கள்—இன்பநிலைகள் — பேரின்பத்திற்கு நிகரானவைகள் என்று குறிப்பிடப்படுவது. ஏனெனில், சாதாரண வாழ்க்கை இன்பம், ரஸத்தினால் ஏற்படும் இன்பத்தைவிட மட்டமானது. சாதாரண வாழ்க்கையில் ஸத்வ குணம் ஓரளவு மிகுவதால் மட்டிலும் இன்ப உணர்ச்சியேற்பட்டு அடுத்த கணம் மறைந்து விடுகிறது.

ரஸ வடிவமான பேரின்பத்திற்கு வேண்டிய ஸத்வகுணத்தின் பெருக்கமோ, தான் ஆன்மாவுடன் கலந்து விடுவதன் மூலம் கருணையிலும் பயநரகத்திலுங் கூடத் துன்பம் ஏற்படாமல் இன்பமே ஏற்பட வழியுண்டாக்குகிறது.

வாழ்க்கையின் இன்ப துன்ப நிலைகளும் காவியக் கலையிலே பிறந்த இன்ப துன்ப நிலைகளும் மேற்கூறிய முறையிலேதான் தக்க அளவில் வேறுபடுகின்றன.

வாழ்க்கைச் சம்பவங்களே த்ருசய காவியத்திற்கும் (நாட்டிய நாடகங்களுக்கும், விஷயமாக இருந்தாலும் "**கலைவாழ்க்கை**யிலே அவைகள் தோன்றுகின்றன" என்பதனால் துன்ப மூட்டும் நிலைகளை அவை பெறுவதே இல்லை.

கலைவாழ்க்கையில் இன்ப துன்பங்களிரண்டையும் சமமாகப் பாவித்துப் பேரின்பமடையப் பயிற்சி பெறுவதன் மூலம் சாதாரண வாழ்க்கையிலும் இன்ப துன்பங்களைச் சமமாகவே அநுபவிக்கும் வலிமை நம் உள்ளத்திற்கு ஏற்படும். இதுவே புருஷார்த்தமாகும். காவியத்தின் நோக்கமும் இதுவே. கலைகளின் குறிக்கோளும் இதுவன்றி வேறில்லை.

"இச் சுவையுணர்ச்சி அல்லது **கலையுணர்ச்சி, மனிதனுடைய, முற்**பிறவிப் பயனைப் பொறுத்தது" என்பது அணிநூலார் துணிபு. 'இனியவைகளைக் கண்டும், கேட்டும் இன்ப உணர்ச்சியடைகின்றவன் முற்பிறவியுடன் உள்ளத் தொடர்பு கொள்கிறான்', என்று மகாகவி காளிதாசன் கூறியதும் இதையே வலியுறுத்தும்.



'புதுமை' நிர்வாக ஆசிரியர் திரு. பி. எக்ஸ். ரங்கசாமியின் சகோதரர் செல்வன் : **பி. ரத்னசாமிக்கும்**, செல்வி : **டெய்ஸி கமலாம்பாளுக்கும்**, 27-6-58ல் நாசரேத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க மணமக்கள் !

நாடக மேடையிலே!

வாணி அமெச்சூர்ஸ்

"பாசமா, கடமையா?"

'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும்' என்று அந்தக் கால நாடக நோட்டீஸ்களில் போடுவது'வழக்கம். அப்படி விளம்பரம் எதுவும் செய்ய வில்லை என்றாலும், வாணி அமெச்சூர்ஸ் குழுவினர், தங்கள் **கடமையைக்** கடும் மழையினுக்கு இடையிலும் சென்னையில், அடையாறு ஆர்ட்ஸ் அகாடமிக் திறந்த வெளி அரங்கத்தில் 19-7-58 சனிக்கிழமையன்று நடத்தினார்கள். நடைபெற்ற நாடகத்தின் மீது ரசிகர்கள் காட்டிய **பாசம்** அவர்கள் கலைந்து போகாமல் ரசிக்கவும் செய்தது!

கதை மிகவும் பிரமாதமானது என்று சொல்ல முடியாது. நாடகக் கதைதான் வெற்றிக்கு முக்கிய அடிப்படை. இதையுணர்ந்து இனி வரும் நாடகக் கதைகளை இந்தக் குழுவினர் பொறுக்குவார்கள் என்று நம்புகிறேன். வசனம் பெருமளவிற்கு இயற்கையாக இருந்தது பாராட்டிற்குரியது

சாம்பசிவ முதலியார் மலருக்கு மலர் தாவும் வண்டு. அவரது திருவிளையாடல்களுக்குப் பலியானவர்கள் பலர். நம்பிய பல பெண்களை நட்டாற்றிலே விடுகிறார். கடைசியில் அவரால் வஞ்சிக்கப்பட்டவளின் சகோதரன், ரௌடி ரங்கன் ஆக மாறி அவரைத் திருத்துகிறான்.

சாம்பசிவ முதலியாரின் கொடுமையால் வாழ்க்கை இழந்த ரங்கனின் மகன், பின்பு இன்ஸ்பெக்டர் ஜானாக வருகிறான். பாசமா, கடமையா! என்று ஊசலாடி இறுதியில் ரங்கனைச் சுட்டு வீழ்த்துகிறான்.

நடிப்பிலே ருத்ரபத்ர முதலியாராக நடித்த திரு. கிருஷ்ண மூர்த்தி ராவுக்கு முதல் இடம் கொடுக்கப்பட வேண்டும். சாம்பசிவ முதலியாரின் வேலையாளாகத் தோன்றிய நாடக டைரக்டர் திரு ரகுநாதனும் உணர்ச்சிகளை 'பளிச், பளிச்' என்று படம் பிடித்துக் காட்டினார், முகத்தில்.

சாம்பசிவ முதலியாராகத் தோன்றிய திரு. வரதாச்சாரியாருக்கு வசனம் துணை செய்யவில்லை. சில இடங்களில் நாசுக்காகச் சொல்லப்பட வேண்டியவை, பச்சையாகப் பேசப்பட்டது அவரது குணசித்திரத்திற்குப் பொருத்தமானது என்று வாதித்தாலும், மேலடக்கு லாயக்கில்லை என்பது உண்மை.

ரௌடி ரங்கனாகத் தோன்றியவர் மிகை நடிப்பைக் கைவிட வேண்டும். இன்ஸ்பெக்டர் ஜானாகத் தோன்றிய வெங்கட்ராமன் நடிப்பில் மெருகு ஏற வேண்டும்!

கமலாவாக நடித்த குமாரி விஜயலட்சுமிக்கு சந்தர்ப்பங்கள் அதிகம் இல்லை என்றாலும் சுமாராகச் செய்தார்.

கல்யாணியாகத் தோன்றிய குமாரி இந்திரா தமிழ் பேச முதலில் கற்ற பிறகு, மேடை ஏறினால் நலம். பிறர் பேசி முடித்த பிறகு ஒப்புவிக்கும் பழக்கம் தவறு. பிறர் பேசுகையிலும் உணர்ச்சி காட்டாது மரமாக நிற்பது அதனிலும் குறைபாடானது.

மொத்தத்தில் குறைகள் சில தவிர்த்தால், 'பாசமா, கடமையா!' நல்ல ஓர் நாடகம் என்று ரசிகர்களால் சொல்லப்படும் பேற்றைப் பெறலாம். தவிர்ப்பார்களா?

"ரசிகன்"

197626

தந்தி : 'குமரன்' டெலிபோன் : { மில் 98 / ஆபீஸ் 533

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P. O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள்	...	19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு	...	5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை
சென்னை, ஆந்திர மாகாணங்களில்
மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. V. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

Contact :

CENTRAL AUTOMOBILES

PERKINS SPARE PARTS STOCKISTS

7-A, BANK STREET,
MOUNT ROAD :: MADRAS-2.

PHONE : **85496**

Ford

for
All your Requirements
in

PERKINS & FORD PARTS

★ GENUINE PARTS
★ VERY COMPETITIVE RATES
★ PROMPT SERVICE.

A Trial will Convince you.

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுக நாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

ஸ்ரீ பூமி விலாஸ் காபி பவுடர்

அன்புடையீர் !

எங்களிடம் நயம் பச்சைக் காப்பிக் கொட்டை கிடைக்கும்.

பொன்னென மிளிரும் நிறமும்
போற்றத் தகுந்த குணமும்
மணம் கமழும் மணமும்
மதுரமான ருசியும் நிறைந்த

எங்கும் புகழ் பெற்று ஜெயக் கொடி நாட்டி வரும்.
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஸ்ரீ பூமி விலாஸ் பிரிண்டிங் பிரஸ்,

அழகான அச்சு வேலைகளும், பைண்டிங் வேலைகளும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும். எங்களிடம் பேரேடு, நோட்புக் தினுசுகளும், குறிப்பு தினுசுகளும் கிடைக்கும்.

கிளை :-
திருச்செந்தூர்.
சங்கரன்கோவில்.
சாத்தான்குளம்.
மேலரத வீதி, நெல்லை.

S. ராமசாமி முதலியார்,
ஸ்ரீ பூமி விலாஸ் காபி பவுடர் &
ஸ்ரீ பூமி விலாஸ் பிரிண்டிங் பிரஸ்
கூழக்கடை பஜார்,
திருநெல்வேலி டவுன்.

குறைந்த விலை !
நீடித்த உழைப்பு !!
கதர் ரகங்களுக்கு
சிறந்த இடம் :

"திருப்பூர் குமரன்
கதர் வஸ்திராலயம்"
44, கீழ ரத வீதி, நெல்லை நகர்.

H. O :
திருப்பூர்.
நெல்லை கிளை.
நிர்வாகி,
மு. துரைசாமி.
திருப்பூர்.

கிளைகள் :
மதுரை, சேலம்.
உரிமையாளர்:
S. குமாரசாமி.

நெல்லையில் புகைப்படங்கள்
எடுப்பதற்குச் சிறந்த
இடம் :

"லைட் ஹவுஸ்
ஸ்டுடியோ"

ஹைரோடு,
திருநெல்வேலி ஜங்ஷன்.

புரோப்ரைட்டர் :
M. P. முகம்மது.

அரவிந்த் ஸ்டோர்ஸ்
கட்பீஸ் ஜவுளி வியாபாரம்,
காந்திமதி அம்மன்
கோவில் வாசல்,
கீழரத வீதி, திருநெல்வேலி டவுன்.

ஆர்கண்டி, ஜார்ஜெட், டபேட்டா, சாட்டின், சார்க்கின், வாயில், நிலோன், ரெயான் சில்க் சீட்டி, பாப்ளின், காக்கி இன்னும் அனேக விதமான கண்கவரும் கலர்களில் டிசைன்களிலும் மிகவும் குறைந்த விலைக்கு நிறுத்துக் கொடுக்கிறோம்.

"குறைந்த விலையில் நிறுத்து கொடுக்கப்படும்."

★

போன் : 55118

லோட்டஸ் சேமி

இது விஞ்ஞான ரீதி சுத்தமாகச் செய்ய பட்டது.

★

யாவரும் இதை உபயோகியுங்க

★

கிடைக்குமிடம் :
P. ராமசாமி நாடார்
81. கொல்லவார் அக்ரஹ
மதருஸ்-21.

Phone : 216 TIRUNELVELI

LINGAM & CO.,
HIGH ROAD,
TIRUNELVELI JUNCTION.

Branch :
CAPE ROAD, NAGERCOIL.
Phone : 38

Branch :
WEST GREAT COTTON R
TUTICORIN.
Phone : 402.

Agents for :
KIRLOSKAR PETTER OIL ENGINES,
PUMPS, MOTORS
(KANNYAKUMARI DISTRICT)
DUNLOP BELTINGS, VEE BELTS & HOSES

Dealers :
CALTEX (INDIA) LTD.

Dealers in
RICE HULLERS, SPARE PARTS, PIPES, FITTINGS,
OIL ENGINE SPARES ETC.

L. K. CHETTIAR.

ஜெகம் புகழும்

செடி மார்க்

பீடிகள்

සෙඩි මාර්ක් බීඩි

செடி மார்க் பீடி

...மையாளர்கள் :—

P. முகம்மதுமைதீன் அன் பிரதர்

செடி மார்க் பீடி தொழிற்சாலை

மேலப்பாளையம்.

(நெல்லை ஜில்லா.)

Regd. No. M. 6928 PUTHUMAI

விரைவில் வருகிறது!

எஸ்.எஸ்.ராஜேந்திரன் * பி.சரோஜா தேவி

நடிக்கும்...

வி... ...ாதபுரம் திருநெல்வேலி, கேரளா, (கன்யாகுமரி ...ற பிலிம்ஸ் (பி) லிட், ஆலப்புழை. வட-தென் ...த்தூர் உட்பட) பெல் பிக்சர்ஸ், சென்னை-2. திருச்சி, ...ட உட்பட) சாரதா பிலிம் சர்கயூட், காரைக்கால். ...ர், நலகா-ஸ்ரீகிருஷ்ணகுமார் பிக்சர்ஸ், கோயமுத்தூர். கர்நாடகம்-ஆம்கோ பிக்சர்ஸ், பெங்களூர்-9. சேலம் -- திரு V. M. P. வீரமுத்து செட்டியார், 89, ராசப்ப செட்டித் தெரு, சென்னை-1.

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 202, J. J. Khan Road, Madras-14.